பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 18 வெள்ளிக்கிழமை (04.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 343

அன்புக்குரிய யாழ் மக்களே!

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்

தமிழ் மக்களாகிய எமக்கு ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் செய்த அராஜகங்களும் துரோகங்களும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாதவை என்பது உங்களுக்கு நன்கு தெரியும். கடந்தகால அனுபவங்கள் எமக்குப்போதும். எனவே "எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமிழர் தாயகத்தில் இடமில்லை" என்பதை உணர்த்துவோம்.

இதனால் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக்கூட்டங்கள் வைத்தல், தேர்தல் பிரச்சாரச்சுவரொட்டிகள் ஒட்டுதல், அது தொடர்பான ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதை மீறுபவர்கள் மிக விரைவாக தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இது எச்சரிக்கையல்ல கண்டிப்பான கட்டளை.

நன்றி.

—மக்கள் படை—

# இராணுவத்தை வெளியேறவும், தேர்தலை பகிஷ்கரிக்கவும் கோருகிறது மக்கள் படை!

## நள்ளிரவில் பரவலாக எச்சரிக்கை சுவரொட்டி

யாழ்ப்பாணம்,நவ.4

குடாநாட்டை விட்டு படையினரை உடனடியாக வெளியேறுமாறு கோரியும் -

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கண்டிப்பான கட்டளை மூலம் கேட்டும் -

நேற்று நள்ளிரவு யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

மேற்படி சுவரொட்டிகளின் அடியில் "மக்கள் படை யாழ். மாவட்டம்" என்று காணப்பட்டது.

படையினரை வெளியேறுமாறு கோரும் சுவரொட்டிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டிருந்தன. இவற்றில் "சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளே...! எம் தாயக மண்ணை விட்டு உடனே (16ஆம் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை

சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகளே...

எம் தாய் மண்ணை விட்டு

உடனே வெளியேறுங்கள்.....

இல்லையேல்.....

உங்கள் ஆயுதங்களே

எமக்குப் போதும்

உங்களை வெளியேற்ற.....

மக்கள் படை யாழ் மாவட்டம்

WARNING

SRI LANKA AGGRESSIVE FORCES...

VACATE FROM OUR MOTHER LAND IMMEDIATELY....

FAILURE TO DO SO....

YOUR WEAPONS WILL SUFFICE FOR US TO EVACUATE YOU

PEOPLES FORCE JAFFNA DISTRICT

# புலனாய்வுக் குறைகளைச் சுட்டிக்காட்டும் இந்திய அமெரிக்க அறிக்கைகள் கிடப்பில்!

## பலாலி படைத்தளத்தில் வைத்து நேற்று ரணில் குற்றச்சாட்டு

உதயன் செய்தியாளர் ஆர்.சிவராசா

பலாலி, நவம்பர்4

"இலங்கையின் பாதுகாப்புப் புலனாய்வுத்துறையிலுள்ள குறைபாடுகள் குறித்து அமெரிக்காவும், இந்தியாவும் இரண்டு தனியான அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன. அந்த அறிக்கைகள் இரண்டும் இப்போது பாதுகாப்பு அமைச்சில் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டிருந்தால் புலனாய்வுத் துறையின் முக்கியமான உறுப்பினர்கள் காப்பாற்றப்பட்டிருப்பர்."

- இப்படிக் குற்றம் சுமத்துகின்றார் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க.

நேற்று பலாலிப் படைத்தளத்தில் வைத்து படையினர் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

மாவைக் கந்தன் ஆலயத்தில் வழிபாடு முடித்துத் திரும்பும் ரணில். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)



## பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ரணில் பலாலியுடன் தம் பயணத்தை சுருக்கினார்

'உதயனு'க்கு அவரே தகவல்

பலாலி,நவ.4

"பாதுகாப்புக் காரணங்களால் நான் எனது பயணத்தை பலாலியுடன் வரையறுக்கவேண்டியேற்பட்டது. எனது விஜயத்திற்கு எவராலும் அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை. பொதுவாக விடுக்கப்பட்ட பாதுகாப்பு ஆலோசனையின்படியே நான் செயற்படுகிறேன். யாழ்ப்பாணப் பகுதிக்கு நான் செல்லாவிட்டாலும் அமைதிக்கான எனது பயணத்தை யாழ்.மக்கள் ஆதரிப்பார்களென எதிர்பார்க்கிறேன். அவர்களின் பிரச்சினைகள் எனக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று முக்கிய கலந்துரையாடல்

தேர்தல் நிலைப்பாடு குறித்து ஆராய்வர்

கிளிநொச்சி, நவ.4

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்தரப்பு முன்னெடுக்க உத்தேசிக்கும் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களும், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று சந்திக்கின்றனர்.

கிளிநொச்சியில் இன்று முற்பகல் 11 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெறுகின்றது.

கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இச்சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டும் எனக்கோரி (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று வடக்கே

கொழும்பு, நவ.4

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமரின் விஜயத்திற்கு முன்னதாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேற்று யாழ்ப்பாணத்திற்குச் சென்று அங்கு பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் பிரதமர் இன்று யாழ்ப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வெடிகுண்டு தயாரிப்பதற்கு ரணிலின் அரசு இரண்டு கோடி ரூபா உரத்தை கடனாக வழங்கியது!

ஆதாரம் இருக்கிறது என்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, நவ.4

ரணில் விக்கிரமசிங்க 2002இல் ஆட்சியைக் கைப்பற்றியதும் புலிகளுக்குத் தனி ராச்சியம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்து ஆயுத விநியோகம் செய்தது மட்டுமல்லாது புலிகள் வெடிகுண்டுகளைத் தயாரிக்க 2 கோடி 25ஆயிரம் ரூபா பெறுமதியான உரத்தையும் கடன் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பில் செய்கைபண்ணப்படும் விவசாயத்திற்குப் பயன்படுத்தவென புலிகள் ரணிலிடமிருந்து உரத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான ஆதாரம் எம்மிடம் உள்ளது. இக்குற்றச்செயலை ரணில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

-இவ்வாறு நேற்று கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கூறினார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியினரை இலக்குவைத்து நேற்று மட்டக்களப்பு நகரில் துப்பாக்கிப் பிரயோகம்

காவலுக்குச் சென்ற 4 பொலீஸார் உட்பட 6 பேர் காயம்

மட்டக்களப்பு நகரில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) உறுப்பினர்கள் பயணம் செய்த ஓட்டோ மீது இனந்தெரியாத நபர்கள் மறைந்திருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினர் ஒருவரும், அவருக்குப் பாதுகாப்பாகச் சென்ற நான்கு பொலீஸாரும், ஓட்டோ சாரதியும் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10.30மணி (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிச் சீருடையில் ரணில் தோன்றும் சுவரொட்டிகள் தெற்கில் சிக்கின

கொழும்பு,நவ.4

வடக்கு,கிழக்கு வரைபடத்துக்கு முன்னால் விடுதலைப் புலிகளின் சீருடையில் நிற்கும் ஒருவரின் படத்தில். அவரின் முகம் இருக்கும் இடத்தில் ரணிலின் முகத்தை மாற்றி ஒட்டி அந்தப் படத்தைப் போட்டு சுவரொட்டிகளைத் தயாரித்து, ஒட்டினார்கள் என்று கூறப்படும் நால்வர் மூன்று இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஜே.வி.பியின் பின்னணியிலேயே இந்தச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சுவரொட்டிகளில் புலிச் சீருடை (16 ஆம் பக்கம் பார்க்க)













*நேற்று யாழ். வருகைதந்த எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க பலாலியில் இராணுவம் மற்றும் கடற்படையினரை சந்தித்துப் பேச்சு நடத்துவதையும் இராணுவக் காவலரணில் வைத்துச் செய்தியாளர்களுக்கு கருத்துக் கூறுவதையும் பலாலி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் படையினரைச் சந்தித்துக் கலந்துரை யாடுவதையும் படங்களில் காணலாம்.*

# சர்வதேச தரத்தில் நவீன படைக் கட்டமைப்பை உருவாக்குவர் என ரணில் உறுதி தெரிவிப்பு

## நேற்று காங்கேசனில் கடற்படையினர் மத்தியில் தகவல்

காங்கேசன்துறை,நவ.4

''இராணுவம் கலைக்கப்பட வேண்டுமென சோமவன்ஸ அமரசிங்க கூறியிருப்பது பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் மட்டுமே அந்த நிலைமை ஏற்படும். எனது ஆறு வருட ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் நவீன காலத்திற்கேற்ற, சர்வதேச தராதரத்தையுடைய படைக்கட்டமைப்பொன்றை உருவாக்குவேன். விடுதலைப்புலிகள் ஆயுதம் தூக்க முன்னரே ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற ஜே.வி.பி. இப்போது இராணுவத்தைக் கலைப்பதாகக் கூறுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

- இவ்வாறு கேள்வியெழுப்பினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க. நேற்று காங்கேசன்துறையில் கடற்படை வீரர்கள் மத்தியில் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இராணுவத்தைக் கலைப்பதாக சோமவன்ஸ அமரசிங்க ஒன்றும் தவறாகக் கூறவில்லை. அதுதான் ஜே.வி.பியின் கொள்கை. அன்று விஜேவீர கூறியதைத்தான் இன்று சோமவன்ஸ அமரசிங்க மறுபடியும் கூறுகிறார். அன்று சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்ட ஜே.வி.பியின் சதியை இராணுவத்தினரே முறியடித்தனர். அதனால்தான் இன்று இராணுவத்தைக் கலைக்கப் போவதாக ஜே.வி.பி கூறுகிறது.

நான் ஜனாதிபதியானால் 43 படையணிகளை மேம்படுத்துவது தொடர்பிலான திட்டங்களை அமுல்படுத்துவேன். இதிலும் சிலர் குறைகாண முயல்கின்றனர். நாட்டில் பதினொராயிரம் பாடசாலைகள் இருந்தால் அவற்றில் ஆயிரம் பாடசாலைகளைத் தரமுயர்த்துவது போல, ஆறு படையணிகளின் கட்டமைப்பை மேம்படுத்த நான் நடவடிக்கை எடுப்பேன்.

எமது படையினருக்கு போதுமானளவு வசதிகள் இல்லை. சர்வதேசத்துடன் ஒப்பிடும்போது நாம் எவ்வளவோ பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறோம். இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்தது. நிரந்தர சமாதானம் வந்துவிட்டதாக அர்த்தமல்ல. அதற்கு இன்னமும் எவ்வளவோ தூரம் செல்ல வேண்டும். அக்காலப்பகுதியில் படைத்துறையை நாம் கட்டியெழுப்ப வேண்டும். தூரப்பிரதேசங்களில் கடமையாற்றும் படைவீரர்களின் பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். அவற்றிற்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கைகளை எடுப்பேன். நான் வாயில் வரும் எதையும் சொல்பவன் அல்லன். ஒரு விடயத்தை செய்து முடித்த பின் சொல்வதே எனது கொள்கை.- இப்படி உறுதியாகக் கூறினார் ஐ.தே.க. தலைவர். (எ-க)

# கூட்டுறவாளர் வீரசிங்கத்துக்கு நினைவு முத்திரை வெளியிடப்படும்

## தபால் தொலைத்தொடர்பு அமைச்சு அனுமதி

அரியாலை,நவ.4

கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கத்திற்கு நினைவு முத்திரை வெளியிடப்படவுள்ளது.

கூட்டுறவாளர்களின் வேண்டுகோளை ஏற்று தபால்தொலைத் தொடர்பு அமைச்சர் டி.எம்.தயாரத்ன முத்திரை வெளியிட அனுமதி வழங்கியதையடுத்து, இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அமரர் வீரசிங்கத்தின் 40 ஆவது நினைவு தினமான டிசெம்பர் 5ஆம் திகதி இந்த முத்திரை வெளியிடப்படவுள்ளது என்றும் -

கூட்டுறவுத்துறையில் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியதன் மூலம் அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத் தலைவராகவும் கூட்டுறவாளர் வீரசிங்கம் பதவிவகித்திருந்தார்.

இவர் வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டு தொழிற்கல்விக்கு வழி சமைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-17-30)

## ஆழிப்பேரலை நிவாரணம் கிடைக்கவில்லை

# மறியல் போரில் குதிக்கப்போவதாக வடமராட்சி வர்த்தகர்கள் அறிவிப்பு

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு, கரையோரப் பகுதி வர்த்தகர்கள் தமக்குரிய நிவாரணத்தை ஒருவார காலத்திற்குள் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் -

இல்லையேல் எதிர்வரும் 11ஆம் திகதி பருத்தித்துறைப் பிரதேச செயலகம் முன்பாகத் தாம் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் - அறிவித்துள்ளனர்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷை வடமராட்சி வடக்கு கரையோர வர்த்தக சங்கத்தின் தலைவர் க.பிறேமானந்தன் நேற்றுப் பிற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின் போதே வர்த்தக சங்கத் தலைவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்ததுடன், அது தொடர்பான மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்குப் பிரதேச வர்த்தகர்கள் தமது மூலதனம் அனைத்தையும் இழந்துள்ளனர். ஆழிப்பேரலை ஏற்பட்டு 10 மாதகாலமாகியும் மீண்டும் அவர்கள் தமது தொழிலை மீளக்கட்டியெழுப்புவதற்கான கொடுப்பனவுகள் எதுவும் இதுவரை வழங்க்கங்கப்படவில்லை.

இதுதொடர்பாக பல்வேறு மட்ட உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனத்தினர் ஆகியோருக்குத் தெரியப்படுத்திய போதிலும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. இதனையடுத்தே இந்த முடிவை எடுத்துள்ளோம் - என்றுள்ளது. (எ-203)

# கைலாசபதி கலையரங்கில் நாளை கல்வியியற்றுறையின் வெள்ளிவிழா

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் வெள்ளிவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்வியியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதமவிருந்தினராகவும் -

சிறப்புவிருந்தினர்களாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாழ்நாள் பேராசிரியர் வ.ஆறுமுகம், பேராசிரியர் க.சின்னத்தம்பி, பேராசிரியர் சபாஜெயராசா ஆகியோர் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர்.

கலாநிதி த.கலாமணி, திருமதி ஜெ.இராசநாயகம், திருமதி அ.சத்தியசீலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மூத்த கல்விமான்களான கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.சந்திரசேகரம், பேராசிரியர் லால் பெரேரா ஆகியோரும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை - கல்வியியற்துறையின் வெள்ளிவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கல்வியியல் ஆய்வரங்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் லால்பெரேரா, பேராசிரியர் சோ.சந்திரசேகரம், கலாநிதி சபா ஜெயராசா, திருமதி தே.சிவாஸ்கரன், கலாநிதி த.கலாமணி, மா.சின்னத்தம்பி ஆகியோர் கல்வியியல் அரங்கத்தில் பங்குகொள்ளவுள்ளனர். (எ-7)

# பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.4

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆதவன் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் இந்த விளையாட்டுவிழா நடைபெறும். (எ-13-203)

# நல்லூர் ஆலயச் சூழலில் வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி விழாவில் சூரன் தலைகாட்டல், சூரசங்காரம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் இரு தினங்களும் ஆலய வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்க்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் அடியார்களைக் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சூரன் தலைகாட்டலும், மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் மாலை 7 மணிவரை சூரசங்காரமும் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் பக்திபூர்வமாக நடைபெற அடியார்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஆணையாளர் கேட்டுள்ளார். (எ-12)

# காவலரண்கள் மீது கிரனேட் தாக்கு படைத்தரப்பில் ஐவருக்குக் காயம்!

## புதனிரவு மூன்று இடங்களில் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். குடாநாட்டில் மூன்று இடங்களில் படையினரின் காவலரண்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு கிரனேட் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தாக்குதல்களில் 3 படையினரும் 2 பொலீஸாரும் காயமடைந்ததாகக் கூறப்பட்டது.

மாலுசந்தியிலுள்ள இராணுவக் காவலரண் மீது இரவு 8.40 மணியளவில் இனந்தெரியாதோரால் கிரனேட் வீசப்பட்டது.

இரவு 9.25 மணியளவில் அச்சுவேலி தபால் நிலையத்திற்கு முன்பாகக் காவலில் நின்ற படையினர் மீது இனந்தெரியாதவர்கள் கிரனேட் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இரவு 9.50 மணியளவில் நாவாந்துறைச் சந்தியிலுள்ள பொலீஸ் காவலரண் மீதும் இனந்தெரியாதோர் கிரனேட் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி 3 சம்பவங்களிலும் 3 படையினரும் 2 பொலீஸாரும் காயமடைந்ததாகக் கூறப்பட்டது. எனினும், இதுகுறித்துப் படைத்தரப்பு உறுதிப்படுத்தவில்லை. (எ-202)

# யாழ். பொலீஸ் நிலையத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். பொலீஸ் நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குடாநாட்டின் இராணுவக் காவலரண்கள், பொலீஸ் நிலையங்கள் மீது கடந்த சில நாள்களாக இனம்தெரியாதவர்களால் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே. இதனையடுத்தே யாழ். பொலீஸ் நிலையப் பகுதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரி வீதியிலிருந்து பொலீஸ் நிலையத்துக்குச் செல்லும் வீதியில் அடிக்கடி வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு பொலீஸாரும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், பொலீஸ் நிலைய வீதியிலிருந்து யாழ். பொதுநூலகத்துக்குச் செல்லும் வீதி முட்கம்பிச் சுருள்கள் போடப்பட்டுப் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுள்ளது. சைக்கிள்களில் பயணிப்போர் மட்டும் அவ்வீதியால் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய அசாதாரண நிலைமை காரணமாகப் பொலீஸ் நிலைய வீதியால் செல்வோரும் பொலீஸ் நிலையத்திற்கு முறைப்பாட்டுக்கெனச் செல்லும் பொதுமக்களும் பீதியுடன் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (எ-13)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

# ஊடக சுதந்திரத்தின் மீது பாயும் அரசின் அமைச்சர்

தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்திருக்கிறது.

அரச ஊடகங்கள் ஆளும்கட்சி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊதுகுழல்களாகி விட்டன. அரச ஊடகங்கள் பொதுச் சொத்தில் - மக்கள் நிதியில் - இயங்குபவை. அவை யாருடைய தனிச் சொத்துகளுமல்ல. அப்படிப்பட்ட பொது ஊடகத்தை ஆளும் கட்சி வேட்பாளர் தன்னுடைய தனிப்பட்ட பிரசாரத்துக்கு அளவுக்கு மீறிப் பயன்படுத்துவது ஒருவகையில் அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வதாகவும், ஊழல் நடவடிக்கையாகவும் கவனிக்கப்பட - கணிக்கப்பட - வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவும் அவரது தரப்பினரும் அரச ஊடகங்கள் நீதியற்ற முறையில், அதிகார துஷ்பிரயோகமாகப் பயன்படுத்தப்படுவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமே நேரடியாக முறையிட்டுள்ளனர். ஆனால், பலன்தான் இல்லை.

ஜனாதிபதி சந்திரிகா இப்போது ஆட்சியில் இருக்கும் அரசின் தலைவி மட்டுமல்லர். இந்த அரச ஊடகங்களுக்குப் பொறுப்பான தகவல், ஊடகத்துறை அமைச்சரே அவர்தான்.

தேர்தல் பிரசார விடயத்தில் - அது பற்றிய செய்திகளை வெளியிடும் விவகாரத்தில் - அரச, எதிரணி வேட்பாளர்களுக்கு சமவாய்ப்பும், சம சந்தர்ப்பமும் அளியுங்கள் என்று அரச ஊடகங்களுக்குப் பொறுப்பான தலைவர்களை நேரில் அழைத்துக் காட்டமாகக் கூறியிருந்தார் ஜனாதிபதி சந்திரிகா. அதுபற்றிய விரிவான - விவரமான - செய்திகள் ஊடகங்களிலேயே வெளியாகியிருந்தன.

ஆனால், சந்திரிகா என்னதான் காட்டமாக உத்தரவிட்டபோதிலும் அரச ஊடக நிர்வாகிகள் மாறினார்களோ - அல்லது தங்களை மாற்றிக் கொண்டார்களோ - இல்லை. ஜனாதிபதியின் கடுமையான பணிப்புரையை இந்தக் காதினால் வேண்டி, அந்தக் காதினால் வெளியே விட்டுவிட்டு, ஆளும்கட்சி வேட்பாளரான பிரதமர் மஹிந்தவை மட்டும் புகழ்ந்துரைக்கும் தங்கள் 'பணியை' அவர்கள் கனகச்சிதமாக முன்னெடுத்துச் செல்கின்றார்கள். பொது நிதியில் இயங்கும் அரச ஊடகத்தை பிரதமரின் தனிப்பட்ட தேர்தல் பிரசாரத்துக்கு வகையாகப் பயன்படுத்தும் அதிகாரத் துஷ்பிரயோகத்தை அவர்கள் தொடர்கிறார்கள்.

ஆட்சி, அதிகாரத்திலிருந்து விரைவில் இறங்கப்போகும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே காற்றுப்போன பலூன்தான். பதவியை விட்டு வெளியேறப்போகும் அவரின் அதிகாரப் பேச்சை இனிமேலும் சகித்துக்கொள்ள - ஏற்றுச் செயற்பட - யாரும் தயாரில்லை என்பதற்கு நேரடியாக அவருக்குக் கீழ் உள்ள ஊடக அமைச்சின் அதிகாரிகளே - அரச ஊடகங்களின் தலைவர்களே - அவரின் சட்டளையை ஏற்றுச் செயற்படுத்தாமல் உதாசீனம் செய்தமை நல்ல உதாரணமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பான விடயத்தில் அரச ஊடகங்களையும் தனியார் ஊடகங்களையும் சிலர் ஒப்பிடுகின்றனர். அது தவறானது. அரச ஊடகங்கள் பொதுச் சொத்து. பொதுமக்களின் நிதியில் இயங்குபவை. அவை சகல மக்களுக்கும் பொதுவாக இயங்கவேண்டும். எந்தக் கட்சி சார்ந்தும் அவை இயங்க முடியாது; இயங்கக் கூடாது. அப்படி இயங்கினால் அதை நியாயப்படுத்த முடியாது.

ஆனால், தனியார் ஊடகங்கள் அப்படியல்ல. அவை தாம் சார்ந்த அணிக்கு - கொள்கைக்கு - இலக்குக்கு - சார்பாகவே செயற்படும். அதை யாரும் தப்பு என்று கூறமுடியாது.

இதுவிடயத்தில் அரச ஊடகங்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள் - ஆளும்கட்சி வேட்பாளர்களுக்கு சார்புடையவையாக பக்கச்சார்பானவையாக அரச ஊடகங்களைப் பயன்படுத்துகின்றவர்கள் - தனியார் ஊடகங்களின் செயற்பாட்டைக் குறைகூறுவதன் மூலம் தங்களின் செயற்பாட்டை நியாயப்படுத்திக்கொள்ள முனைகிறார்கள்.

இந்த எல்லையையும் தாண்டியிருக்கிறார் முன்னாள் தகவல், ஊடக அமைச்சரும், ஆளும்கட்சி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரப் பொறுப்பாளருமான அமைச்சர் மங்கள சமரவீர.

தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் நியாயமாகச் செயற்படாவிட்டால் அரசு, அவற்றுக்கான ஒளிபரப்பு உரிமத்தை ரத்துச் செய்துவிடும் என்று ஊடகங்களை அச்சுறுத்தியிருக்கின்றார் அவர்.

ஊடகச் சுதந்திரம் குறித்து, தற்போது பதவியை விட்டுப் போகும் ஜனாதிபதி குமாரதுங்க ஏதோ கூறுகிறார். அதற்கு முரணாக அமைச்சர் மங்கள செயற்படுகின்றார்.

" பலர் இன்று என்னை மோசமாக விமர்சிக்கின்றனர். நான் எனது ஆட்சியில் வழங்கிய தாராள ஊடக சுதந்திரம்தான் அதற்குக் காரணம்" - என்று சில தினங்களுக்கு முன்னர்தான் தமக்குத் தாமே நற்சான்றிதழ் வழங்கிக் கொண்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அவரின் ஆட்சியில் ஊடக சுதந்திரத்தின் சீத்துவத்துக்கு நல்ல உரைகல் இப்போது அவரின் அரசின் மூத்த அமைச்சரான மங்கள சமரவீர தனியார் ஊடங்களுக்கு விடுத்துள்ள அச்சுறுத்தலாகும்.

தமது அச்சுறுத்தல் மூலம் ஊடகச் சுதந்திரம் குறித்துப் பேசும் அருகதையையே இழந்துவிட்டார் அமைச்சர் மங்கள சமரவீர.

# கிராமிய வங்கிக் கூ.சங்கம் அமைக்க குடாநாட்டில் எதிர்ப்பு

அரியாலை,நவ.4

கிராமிய வங்கிக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் நடவடிக்கைக்கு குடாநாட்டின் கூட்டுறவு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

கிராமிய வங்கிகள் தற்போது கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து இயங்கி வருகின்றன. இந்தக் கிராமிய வங்கிகளை கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து தனியே பிரித்து கிராமிய வங்கிக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் மத்திய அரசின் கீழ் பதிவுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்த சுற்றறிக்கையை வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வெளியிட்டிருந்தார்.

இத்திட்டத்துக்கு குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

'கிராமிய வங்கிக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் குறித்து குடாநாட்டில் இயங்கும் கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் பொது முகாமையாளர்கள் சமீபத்தில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூடி ஆராய்ந்தனர். இக்கூட்டத்தில் மேற்படி திட்டத்துக்குத் தமது அதிருப்தியையும் எதிர்ப்பையும் அவர்கள் வெளியிட்டனர். எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலான தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானம் இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ-17)

# ரூ.1 1/2 கோடி செலவில் அடையாள மை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்களின் கைவிரல்களில் அடையாளமிடுவதற்கான மை வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாகவும் -

இதற்கு ஒன்றரைக் கோடி ரூபா செலவாகியுள்ளதாகவும் தேர்தல் செயலகத்தின் பிரதம கணக்காளரான ஏ.ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

(ஒ-206)

# யாழ். ஆஸ்பத்திரியில் மழை காலம் அவலம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் மழைபெய்யும் வேளையில் ஏற்படும் ஒழுக்குக் காரணமாக மருத்துவர்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவிலிருந்து பிரசவ விடுதிக்குச் செல்லும் பாதையும் என்பு முறிவு சிகிச்சைப் பகுதியும் மழை ஒழுக்கினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

குன்றும் குழியுமாக இருக்கும் உள்ளகப் பாதைகளில் தேங்கி நிற்கும் மழை நீரை வெளியேற்ற மருத்துவமனை ஊழியர்கள் கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றனர்.

இதேவேளை -

17 லட்சம் ரூபா செலவில் கண்காணிப்புக் கமரா பொருத்துவதற்கான நடவடிக்கைகள் யாழ்.வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-13)

# திருக்குறள் மாநாடு நேற்று ஆரம்பம்!

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினால் நடத்தப்படும் திருக்குறள் மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வுகள் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

முற்பகல் 10 மணிக்குப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவர் அ.கனகரட்ணம், மேலதிக அரச அதிபர் ந.வேதநாயகன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினைக் கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியனும் தமிழ்ச் சங்கக் கொடியை சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளையும் ஏற்றினர்.

தமிழ்த்தாய் வாழ்த்து, குறளிசை, தொடக்கவுரை என்பவற்றைத் தொடர்ந்து கருத்துரைகளைக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி. மு.திருநாவுக்கரசு, பொன்.கணேசமூர்த்தி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் தி.வேல்நம்பி ஆகியோர் நிகழ்த்தினர்.

கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ப.மருதநாயகம், மேலதிக அரச அதிபர் வேதநாயகம், யோசப் பிரான்ஸில் அடிகளார், வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஆகியோரும் உரையாற்றினர். சிறப்புரையினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வழங்கினார். இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவிருக்கின்றன. (மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்) (த-352)

# அரச உத்தியோகத்தரின் விடுமுறை இம்மாதம் 21ஆம் திகதிவரை ரத்து

யாழ்ப்பாணம், நவ.4

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு சகல அரச உத்தியோகத்தர்களின் விடுமுறைகளும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

அரச ஊழியர் எவராவது விஷேட காரணத்துக்காக விடுமுறையில் செல்ல வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரிடமிருந்தே அந்த ஊழியர் அனுமதிபெற்றுக்கொள்ளவேண்டும்.

சுகவீனத்திற்காக விடுமுறைக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டுமாயின் அரச வைத்தியசாலை வைத்தியரிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இந்த அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சால் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற உத்தியோகத்தர், ஊழியர் சம்பந்தமாக தாபனக் கோவை 5ஆம் அத்தியாயத்தின் 7ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-15)

# தமிழ்க் குழுக்களை அகற்றுமாறு கண்காணிப்புக் குழு பரிந்துரை

## சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,நவ.4

இலங்கைப் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்கள் வடக்கு - கிழக்கு பிரதேசத்திலிருந்து அகற்றப்படவேண்டும் என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் ஜோர் ஜெஸ்ஸன் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். ஆனால், அந்தப் பரிந்துரையை அரசு நிராகரித்துவிட்டது.

'திவயின' சிங்களப் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

புலனாய்வுத்துறையின் உயரதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் உளவாளிகள் மூலமாகவே விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை இராணுவம் பெற்று வருவதாகவும் -

அந்த நிலையை விடுதலைப் புலிகளின் நலன்கருதி இல்லாதொழித்து பாதுகாப்புப் பிரிவின் உளவுச் சேவையை நிர்மூலமாக்கும் நோக்கில் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்புப் பிரதேசத் தலைவர் இப்பரிந்துரையைச் செய்துள்ளார் என்றும் -


அந்த அதிகாரி குற்றஞ்சாட்டியுள்ளார் - இப்படி அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஒ-206)

## நாளை

ஐப்பசி 19
சனிக்கிழமை
05.11.2005
திதி: சதுர்த்தி
பின்னிரவு 03.35 வரை
நட்சத்திரம்: கேட்டை
பிற்பகல் 02.46வரை
சுபநேரம்: 03.04- 04.34
ராகுகாலம்: 09.04- 10.34
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்தளவு உழைப்பு நமக்குள்ளே இருக்கும் சக்தியை தட்டி எழுப்புகின்றது. - விவேகானந்தர்.



# நம் சுகத்தைக் குறைத்து பிறர் கண்ணீர் துடைப்போம்!

" ஒரு முஃமின் மற்றுமோர் முஃமினுக்கு கட்டடம் போலாவான். கட்டடத்தின் ஒரு பகுதி மற்றப்பகுதியை பலப் படுத்தி நிற்கிறது" என அண்ணல் நபி ( சல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதாரமாக இருக்கவேண் டிய அவசியத்தை வலியுறுத்துகையில் இப்படிக் கூறிவைத்தார்கள்.

அதைத்தான் விடைபெற்றுக் கொள்ளும் சஹ்ரூர் ரமழான் நமக்கு கற்றுத் தந்துவிட்டு எட்டிச் செல்கிறது. அது மீண் டும் வருகையில் என்னென்ன வருமோ, அவற்றைச் சந்திக்க நாம் இருப்போமோ என்றெதையும் அறியாத நிலையில் உள்ள நமக்கு புனிதக்குர் ஆன் இப்படி அறிவுறுத்துகிறது.




" (தர்மம் செய்தால்) நீங்கள் விரும்புகிறவற்றிலிருந்து செலவு செய்யாத வரையில் நீங் கள் நன்மை அடையவே மாட்டீர்கள். நீங்கள் எதைச் செலவு செய்தபோதிலும் நிச்சயமாக அல் லாஹ் அதனை நன்கறிவான் " ( ஆலு இம்ரான்92)

## ரமழான் பெருநாள் இன்றாகும்

நாம் நமக்காக நம்மைச் சார்ந்தோருக்காக எதையெதை விரும்புகிறோம். அவற்றிலிருந்து ஏழைகளுக்காக,நிர்க்கதியானோருக்காக செலவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம் என் பதையே இவ் வசனங்கள் எமக்கு நினைவூட்டி நிற்கின்றன.

எங்கெங்கு அவசர உதவி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் நம் ஈகைக் கரங்கள் நீள வேண்டும். ஒரு மாதம் நோன்பிருந்து, மற்றெல்லா நாட்களை விடவும் நல்லமல்களை அதிகமதிகமாகச் செய்து ஈகைத் திருநாளைக் கொண் டாடும் தருணத்தில் இழக்கக் கூடாதவற்றையெல்லாம் இழந்துவிட்டுப் பாதையிலே நிற்போரை நினைத்துக் கொண் டால், அது போன்ற நிலை நாளை எமக்கும் ஏற்படலாம் என உள்ளூர உணர்ந்து கொண்டால் நமது சுகத்தைக் குறைத்துக் கொண்டு அடுத்தவர் கண்ணீர் துடைக்க ஏதாவது செய்யலாம் என்பதுதான் விடைபெற்றுச் செல்லும் மாதம் நினைவூட்டிச் செல்லும் வஸீயத்.

அவ்வாறு செய்ய வேண்டியதன் அவசி யத்தை அருள்மறை இவ்வாறு தெளிவுபடுத்தி நிற்கிறது.

" நிச்சயமாக உங்கள் செல்வங்களும், உங்களுடைய பிள்ளைகளும் ( உங்களுக்குச் சோதனையேயாகும். அல்லாஹ்விடமே உங்க ளுக்கு மகத்தான கூலியுண்டு. ஆகவே இயன்ற அளவுக்கு அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; அவனின் கட்டளைக்குச் செவிசாயுங்கள்; மேலும், ( அவனுக்குக் ) கீழ்ப்படியுங்கள் உங்களின் நலனுக்காக (அல் லாஹ்வின் வழியில் செல்வங்களைச்) செல வும் செய்யுங்கள். தன் மனதில் உலோபித்த னத் திலிருந்து எவர் காக்கப்படுகிறார்களோ அவர்களே வெற்றிபெற்றவர்கள்" (அத்த காபுன் : 15 - 16)

ரமழானின் தலைப்பிறை கண்டதிலி ருந்து நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன்னர் ' ஈதுல் பித்ர்" என்னும் தர்மத்தைச் செய்ய தனதும், தன் குடும்பத்தாரினதும் தேவைக் குப்போக எதையாவது அதிகமாக வைத் திருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் இக் கைங் கரியத்தைச் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கிறான்.

அவற்றை எல்லாம் அல்லாஹ்வுக்காக எனச் செய்யும் போது நம்மை இறைவனை அன்பு கூருகிறான்.


**R.S.மெறைன்ஸ் சேவிஸ்**
**மேக்கூறி இயந்திரம்**


இப்பொழுது யாழ்.மாவட்டத்தில் அறிமுக மாகிறது.ஜப்பான் தயாரிப்பான மேக்கூறி வெளி யிணைப்பு இயந்திரம். நம்பகமான, தரமான இயந் திர உதிரிப்பாகங்கள் மற்றும் இதற்கான திருத்த வேலைகள் யாவும் உத்தரவுபெற்ற திறமையுள்ள முகவர்களால் செய்து தரப்படும். எமது சேவை யைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய முகவரி

சுழிபுரம் சந்தி,சுழிபுரம்.
தொ.பே. 071 4025214,
077 3573788

05.11.2005 முதல் எமது சேவையை நீங்கள் பெற் றுக்கொள்ளலாம்.வேறுகிளைகள் எமக்கு இல்லை.
(42544)(11-18-45)



**பாராட்டி வாழ்த்துகிறோம்**



வடமராட்சி,அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த
**வேலாயுதம் பகீரதன்** (B.B.A. Fm.spl.)
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 அன்று நடைபெற்ற 24ஆவது பட்டமளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டு தொழில் நிர்வாகமாணி பட்டம் பெற்றதனை வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற இறைவன் ஆசி வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்-
சித்தி,பிரபா,
தமிழ்ப் பூங்கா எலற்றிக்கல்ஸ் நண்பர்கள்.

(42537)
(11-18-45)



**வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்**
**மணல் விநியோக அறிவித்தல்**

எதிர்வரும் 8.11.2005 செவ்வாய்க்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது.அதற்குப் பதிலாக செவ் வாய்க்கிழமைகுறிப்பிடப்பட்ட அரச , அரசசார்பற்ற நிறு வனங்களுக்கான மணல் அனுமதிப்பத்திரம் வைத்திருப் பவர்களுக்கு நாளை (5.11.2005) சனிக்கிழமை மணல் விநியோகம்நடைபெறும்.

இத்தினத்தில் உலகவங்கி சுனாமி (M.R.R.R.) எம்.ஆர். ஆர்.ஆர். போன்ற வீட்டுத்திட்டங்களுக்கு மணல் விநி யோகிக்கப்படமாட்டாது.

மணல் விநியோகப் பகுதி,
உபயகதிர்காமம். (46078)(11-45-18) -நிர்வாகம்.



**LONDON ENGLISH COLLEGE**

ஆங்கில வகுப்புக்கள்.ஆரம்பம்...
தரம்-5 வரையுமான ஆங்கில அறிவை விருத்தி செய்தல்

**Diploma in English**

IELTS

LONDON ENGLISH COLLEGE
NO:105 (71), Arasady Road,
Jaffna. T.P: 021-2225889,
+94 776 303539

BCNS
Business Computing Network solution
No: 229A, Mitcham Road,
Tooting, London, SW 17910 UK
www.Bcnsgroup:com


## தென்னிந்திய திருச்சபையில் அதீன விழா இன்று

யாழ்ப்பாணம்,நவ.4

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத் தியட்ச ஆதீன விழா இன்று வெள்ளிக் கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு நன்றி செலுத்தும் வழி பாடு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெறும்.

அருளுரையை தஞ்சாவூர் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண.கலாநிதி டி.ஜேம்ஸ் ஸ்ரீநிவாசன் நிகழ்த்துவார்.

பொதுக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணக் கல் லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

பிரதம பேராயரின் பிரதிநிதி அருட்திரு. பொ.றெ.நவீந்திர அனுகூலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சிறப்புரைகளை தஞ்சாவூர் அத்தியட்ச ஆதீனப் பெண்கள் சங்கத் தலைவி திருமதி ஜேம்ஸ் ஸ்ரீநிவாசன் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பா ணக் கல்லூரி, உடுவில்மகளிர் கல்லூரி, மரு தனார் மடம் இறையியல் கல்லூரி ஆகியவற் றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வு களும் இடம்பெறும்.

(3-202)


*வேலையாள்கள் தேவை*

கோழிப் பண்ணையில் கடமையாற்று வதற்கு பணியாளர்கள் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். உழைப்புக் கேற்ற கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப் படும்.

(24536) **வீனஸ்பாம்,**
(11-18-45) 79/12, பலாலி வீதி,
திருநெல்வேலி (திருநெல்வேலிச் சந்திக்கு அருகில்).


# மீடினைக் கொல்ல 'ஐஸ்' மஞ்சுவை விடுதலைப் புலிகள் நியமித்தனராம்

## இப்படிக் கூறுகிறது 'திவயின'

கொழும்பு,நவ.4

புலனாய்வு அதிகாரி லெப்ரினன்ட் கேணல் துவான் மீடினைக் கொல்ல விடுதலைப் புலிக ளின் ஆயுதப் பிரிவுப் பொறுப்பாளர் சொர்ணம் 'ஐஸ்' மஞ்சு என்பவரை நியமித்தார் எனத் தகவல் கிடைத்துள்ளதாக பொலீஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என்று 'திவயின' பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது:-


ஐஸ் மஞ்சு நீண்ட காலமாக விடுதலைப் புலிகளோடு நெருங்கிப் பழகி இருந்தார் என்றும் -

மீடினை கொலை செய்யபெருந்தொகைப் பணத்தை ஐஸ் மஞ்சு பெற்றார் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். ஷம்லி என்வர் மூலமாக மீடினுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொண்ட ஐஸ் மஞ்சு அவருடன் நெருங்கிய நண்பராகப் பழகி வந்துள்ளார்.அடிக்கடி மீடினின் இல்லத்துக்கும் சென்று வந்துள் ளார். புலிகள்தொடர்பான தகவல்களைப் பெறும் நோக்கில் மீடினும் மஞ்சுவோடு நட்பைப் பேணி வந்துள்ளார். இவ்வாறு பொலீஸார் கூறினர்.

ஐஸ் மஞ்சுவைப் பிடிப்பதற்கு விசேட பொலீஸ் குழுக்கள் செயற் பட்டு வருகின்றன. இதனிடையே ஐஸ் மஞ்சு புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் தப்பிச் சென்றிருக்கலாமெனவும் பொலீஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.இவ்வாறு செய்தியில் குறிப்பிடப்பட்டுள் ளது.


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் 02 - 10 - 1930



ஆண்டவன் மடியில் 15 - 11 - 2004

**அமரர் குலத்துரை குலராஜசேகரன்**

*திதி: திருதியை (04.11.2005)*

அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் வழிகாட்டி எம்மை
வாழவைத்த அப்பாவே நீங்கள் காட்டிய
வழியில் நாங்கள் செல்கிறோம். ஆண்டு
ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்.
தூண்டாமணி விளக்காய் இருந்து
எமக்கு ஒளி ஏற்றிடுவீரே.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நீங்கா நினைவுகளுடன்:
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

சைவப்பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி. (32538) (24-18-11-45)



**மரண அறிவித்தல்**

**இராசையா வரதராசா**



அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, தம்பசிட்டியில் வசித்த வரும், இருபாலை கிழக்கில் வசித்து வந்தவருமான இராசையா வரதராஜா 02.11.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசுப்பிள்ளை இராசையா (இளைப் பாறிய புகையிரத நிலைய அதிபர்) - அன்ன பாக்கியம் தம்பதியரின் செல்வப் புதல் வரும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஜெயலலிதா, நிர்மலா (கனடா), விஜயலலிதா (கனடா), பிரபாகரன் (சுவிஸ்) ஆகி யோரின் தந்தையும் சசிகரன் (சசி), பாலகிருஸ்ணன் (கனடா), சாளினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் இராஜேஸ்வரி, புவ னேஸ்வரி, மங்களேஸ்வரி, லோகராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தங்கவடிவேல் (J.P.), காலஞ்சென்ற துரை ராசா மற்றும் ஆனந்தன், ராதிகா (கனடா) ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
*426/4, கில்னர் லேன்,*
*கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (42535)(21-18-11-45)

தகவல்:
சசிகரன் (சசி -மருமகன்),
வ.பிரபாகரன் (மகன்).

# ஒட்டுசுட்டானில் சிறப்புற நடந்த ஓயாத அலைகள் III வெற்றிவிழா

ஓயாத அலைகள் III வெற்றிச் சமரின் ஆறாவது ஆண்டு நிறைவுதின நிகழ்வு நேற்று முன்தினம் ஒட்டுசுட்டானில் நடைபெற்றது.

முற்பகல் 11 மணியளவில் லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மைச் சுடரினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை தளபதி கேணல் ரமேஸ் ஏற்றிவைத்தார்.

ஜெயசிக்குறு மற்றும் ஓயாத அலைகள் சமர்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பொது உருவப்படத்திற்கான ஈகச் சுடரினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் அணிவித்தார்.

அரங்கில் சங்கநாதம் எழுச்சி நிகழ்வு இடம்பெற்றது.

விழா உரைகளைத் தளபதி கேணல் ரமேஸ், மட்டக்களப்பில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகப் பொறுப்பாளர் அமுதன், திரைப்பட தமிழாக்கப் பிரிவுப் பொறுப்பாளர் துளசிச் செல்வன் ஆகியோர் நிகழ்த்தினர்.

: முல்லைத்தீவு - ஒட்டுசுட்டானில் இன்று இடம்பெற்ற ஓயாத அலைகள் ஆறாம் ஆண்டு நினைவு நாளில் ஜயசிக்குறு எதிர்ச் சமரில் களத்தில் இருந்து போராளிகள் எழுதிய கவிதைகளைத் தாங்கி 'நெருப்பினுள் நின்று' எனும் கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது.

லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வில் நூல் அறிமுக உரையினைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

கவிதை நூலினைக் கட்டளைத் தளபதியான கேணல் ஜெயம் வெளியிட மேஜர் அமுதாவின் சகோதரி மகிழ்நங்கை பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதியினைக் களத்தில் வெளிவந்த சுதந்திரக்காற்று இதழின் பிரதம ஆசிரியர் போராளி நரேஸ"ம் மாலதி படையணியின் தளபதி கேணல் விதுசாவும் பெற்றுக்கொண்டனர்.

நூலின் ஏனைய பிரதிகளை கேணல் துர்க்கா, மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தளபதி வீரமணி, தளபதி பிரபா, தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், முன்னாள் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணித் தளபதி அக்பர் ஆகியோர் வழங்கினர்.

கவிதை நூல் தொடர்பான மதிப்பீட்டுரையினைத் தமிழீழத் தேசிய தொலைக்காட்சிப் பணிப்பாளர் சி.கருணாகரன் நிகழ்த்தினார். தொடர்ந்து போராளிகள் பங்குபற்றிய கவியரங்கமும் இடம்பெற்றது.

## ஒட்டுசுட்டானில் பல வீதிகள் மழையினால் சேதம்

தற்போது பெய்துவரும் தொடர் மழையினால் ஒட்டுசுட்டான்பிரதேசத்தில் பிரதான வீதிகள் உட்படப் பல குறுக்கு வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து மன்னாகண்டல் செல்லும் வீதி குன்றும் குழியுமாகச் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. இதே போன்று ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் வீதியில் பாலத்தின் திருத்தவேலைகள் நடைபெறுவதால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் புதுக்குடிருயிப்புப் பிரதான வீதியிலுள்ள பாரியகுழிகளில் நீர்நிறைந்துள்ளது. இதனால், இந்த வீதி ஊடாகப் பலத்த இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே வாகனங்கள் சென்று வருகின்றன. கற்சிலைமடுவில் பாலம் ஒன்று வீதியின் மத்தியில் உடைந்தும் காணப்படுகிறது.

அத்துடன், தொடர்ந்து இனிவரும் நாள்களில் மழை அதிகமாகும் என்பதால் சில வீதிகளில் போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் அபாயமும் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-341)



ஒட்டுசுட்டானில் நடந்த வெற்றிவிழா நிகழ்வில் தளபதி கேணல் ரமேஷ் தேசியக் கொடி ஏற்றுவதையும் தளபதி வீரமணி, சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஆகியோர் கவிதை நூலின் சிறப்புப் பிரதிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## பாதுகாப்பு வேலி இல்லாததால் பாடசாலைக்குள் கால்நடைகள்

### இதனால் மாணவர்கள் பெரும் சிரமம்

ஒட்டசுட்டான்,நவ.4

மன்னார், ஆண்டான்குளம், கருங்கண்டல் பாடசாலை கட்டாக்காலி கால்நடைகளின் தங்குமிடமாக மாறிவருகிறது.

மேற்படி பாடசாலைக் கட்டடங்களுக்கு பாதுகாப்பான வேலிகள் இல்லை. இதனால் இரவு வேளைகளிலும் சில நாள்களில் பகலிலும் கால்நடைகள் பாடசாலையின் கட்டடங்களுக்குள் தங்கிநிற்கின்றன. அத்துடன், கால்நடைக் கழிவுகளும் பெருமளவில் காணப்படுகின்றன.

இதனால், ஒவ்வொரு நாளும் மாணவர்கள் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்குள்ள கால்நடைகளின் கழிவுகளைச் சுத்தப்படுத்த வேண்டியநிலை ஏற்படுகிறது.

எனவே, இப்பாடசாலையின் வளாகத்தினுள் கால்நடைகள் புகுந்துவிடாதவாறு உரிய பாதுகாப்புவேலிகளை அமைத்துத் தரவேண்டும் என்று உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (த-342-202)

## கற்சிலைமடு அ.த.க. பாடசலையின் புதிய கட்டடங்களில் வெடிப்புகள்!

### பாடசாலைச் சமூகத்தினர் விசனம்

ஒட்டசுட்டான்,நவ.4

'கார்ப்' திட்டத்தின் கீழ் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் 53 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதிகளில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

கட்டடச் சுவரின் சில பகுதிகள் மற்றும் கரும்பலகைகள் போன்றவற்றில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதுடன், அந்த இடங்களில் மணல் சொரசொரத்துக் கொட்டுகின்றது.

இந்த வகுப்பறைக் கட்டடங்கள் ஒப்பந்தகாரர்கள் மூலமாகவே கட்டப்பட்டன. தற்போது அந்தக் கட்டடங்கள் உறுதியற்ற நிலையில் இருப்பது குறித்து பாடசாலைச் சமூகத்தினர் விசனம் தெரிவித்திருக்கின்றனர்

போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு கட்டட வசதிகள் எவையும் அற்றநிலையில் ஓலைக்கொட்டகைகளிலும் மரநிழல்களிலும் இருந்தே இந்தப் பாடசாலை மாணவர்கள் நீண்டகாலம் கல்விகற்று வந்தனர்.

தற்போது நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் சிரமங்கள் ஓரளவுக்காவது குறையும் என்று பெற்றோரும் பாடசாலைச் சமூகத்தினரும் எதிர்பார்த்தனர். ஆனால், தற்போது நிலைமை முன்னரைவிட மோசமானதாக - ஆபத்தானதாக - மாறியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (த-341)




## வீரவணக்க நிகழ்வு

புதுக்குடியிருப்பு, நவ.4

கடந்த 1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினருடனான மோதல் சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை அருணனன் சித்திரவேல் சண்முகலிங்கம் (திருமலை) வீரவணக்க நிகழ்வு புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

கடந்த 27ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

நண்பகல் 12 மணியளவில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சண்முகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் பணிமனையைச் சேர்ந்த போராளி அசோக் ஏற்றிவைத்தார்.

மாவீரனின் பெற்றோர் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவு உரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார்.

## பண்பாட்டு ஊர்வலம், கலைஞர் கௌரவிப்பு; திருக்குறள் மாநாட்டின் இறுதிநாள் இன்று!

கிளிநொச்சி,நவ.4

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்தும் வருடாந்த திருக்குறள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள 2ஆம் நாள் நிகழ்வின் முதல் நிகழ்வாக கலை பண்பாட்டு ஊர்வலம் நடைபெறும். கிளிநொச்சி முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் சேரன், சோழன், பாண்டியன் நிறுவனத்தினரின் அணி வகுப்புகளும் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையினரின் பண்டாரவன்னியன் அணிவகுப்பு, இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவரின் இராணவன் அணிவகுப்பு என்பன இடம்பெறும்.

கலை நிகழ்வுகளாக வரவேற்பு நடனம், கோலாட்டம், காவடியாட்டம், கும்மியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம் என்பன இடம்பெறும்.

வேடப்புனைவுகளாகத் திருவள்ளுவர், மோசீகரன், இளங்கோவடிகள், பாரதி, பாரதிதாசன், விபுலானந்த அடிகள், தனிநாயகம் அடிகள், ஔவையார் ஆகிய பாத்திரங்களைப் பாடசாலை மாணவர்கள் வெளிப்படுத்துவர்.

தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை தலைமையில் நடைபெறும்.

மங்களவிளக்கேற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், சங்கக் கொடியேற்றல், தமிழ்த்தாய் வணக்கம், குறளிசை என்பவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையைத் தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர் கா.கார்த்திகேசு நிகழ்த்துவார். வாழ்த்துரைகளை சிவத்திரு தமிழ்மணி உருத்திரபுரீசுவரர் குருக்கள், வண.அனுகூலன் அடிகளார் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து தொடக்கவுரை, மாணவர்களின் பேச்சு, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

விருந்தினர் உரைகளைக் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், கரைச்சிப் பிரதேச செயலர் சுலோசனி, முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்ச்சங்கத் தலைவர் அ.சரவணபவன், கனகாம்பிகை அம்மன் ஆலய அறங்காவலர் குழுத் தலைவர் ந.சோதிநாதன், பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் நா.வை.குகராசா, அரசசார்பற்ற நிறுவனத் தலைவர் கணேசபிள்ளை, கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் இ.இராசமகேந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து பரிசில், விருது வழங்கும் நிகழ்வுகள் இடம்பெறும். கலை நிகழ்வுகளாகக் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவிகளின் தமிழிசைப் பாடல், தருமபுரம் மகா வித்தியாலய மாணவிகளும் கறுக்காத்தீவு மகா வித்தியாலய மாணவிகளும் இணைந்து வழங்கும் ஊரக ஆடல், இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவன் யெ.ஜெயமாருதியின் தனி ஆடல், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவி வி.திவ்வியாவின் மயில் ஆடல், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் 'கவரி வீசிய நாவலன்' நாடகம், நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை மாணவர்கள் வழங்கும் சங்கப் பாடல் என்பன இடம்பெறும்.

இன்றைய நிகழ்வின் இறுதியில் முன்னாள் அரச அதிபர் க.பொன்னம்பலம், கல்விப் பணியாற்றிய வே.மகாலிங்கம், தமிழ்ப் பணியாற்றிய வே.பரமநாதபிள்ளை, நாடகத்துறைக்குத் தொண்டாற்றிய க.வல்லிபுரம் ஆகியோரும் மாவீரர்களின் பெற்றோர் ஒருவரும் மூத்த விவசாயி ஒருவரும் பாராட்டி பொன்னாடை போர்த்துக்கௌரவிக்கப்படவிருக்கின்றனர். (த)

## பேராறு வீதி புனரமைப்பு

ஒட்டசுட்டான்,நவ.4

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பேராறு கிராம அலுவலர் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து பேராறு 4ஆம் கண்டம் கிராமத்திற்கு செல்லும் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதி உலக உணவுத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்த வீதியால் குறுகிய நேரத்தில் முல்லைத்தீவு வீதிக்குச் சென்றடையும் பயணிகளும் கிராமங்களுக்குச் செல்வோரும் விவசாய நிலங்களுக்குச் செல்வோரும் இதனால் நன்மையடைந்துள்ளனர்.

இந்த வீதியின் புனரமைப்பு வேலைகள் பேராறு கிராம சேவை உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றன.(க-341)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஒரு மோட்டார் வானுடைய (Van) இருக்கைகள் விற்பனைக்குண்டு வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு: Dr. சிவபாதம், 32, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (42294)

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை கிழக்கு, 3ஆம் குறுக்கு வீதியில் சிறீசந்திர சேகரப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவும் துரையப்பா வித்தியாலயத்திற்கு அருகில் வீடு கட்டக் கூடிய 3¼ பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.15, 3 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் T.P. 0777312313. (42512)

பலாலி வீதி, ஊரெழு அம்மன் கோயில் அருகில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 0094112599399.(42509)

## வீடு விற்பனைக்கு

ராணி வீதி, நல்லூரில் 2¼ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: உ.றாஜி, 53/3, ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (42525)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Original Prima Broiler கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், நல்லூர் (வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி,நல்லூர். (சி-46068)

## சேவை

55000 அமெரிக்க நிரந்தர விசா லொத்தர் விண்ணப்பம் Internet மூலம் Process பண்ணி அமெரிக்காவிற்கு அனுப்பி அமெரிக்க றிசீட் தரப்படும். ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் அனுப்பலாம். 16 வயதிற்கு மேற்பட்டவர்களும் தனியாக அனுப்பலாம். Latent விண்ணப்பத்தை இலவசமாகப்பெற Penquin Book shop B2/F23 Bloemendhal Flats Colombo-13. T.P.: 0773081764 , 2438367. (சி-45983)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973 இல் பிறந்த, 7இல் செவ்வாயுடைய, ரோகினி நட்சத்திரம், ஆசிரியை மணப் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2733, மே/பா உதயன். (42333)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, இத்தாலி PR உடைய, 1972 ஆயிலியம் 4ஆம் பாதம், 17¼ கிரகபாவம் உடைய மணமகனுக்கு A/L படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு: 0602213076 Or 0776141723.Or 0776180760 (42504)

## வாடகைக்கு

ஸ்ரேசன் றோட், யாழ்.புகையிரத நிலையம் முன்பாக 3 கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகமாகவும் பாவிக்கலாம். தொடர்பு: 021-222 2726 Dr.K.Rajaratnam (42528)

*வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்*

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) M9 (கட்டட வேலைக்கு) ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்ட ணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 07.11.2005 - 16.11.2005 பி.ப.2 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 17.11.2005 நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.11.2005 பி.ப.2 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப் பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு *செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், மானிப்பாய்* என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல | வேலைவிவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|---|
| 1 | கொல்களம் அமைத்தல் | 3300.00 | 300.00 | 45.00 |

மேரி ஜோசப் சாந்தசீலன்
செயலாளர்,
வலிதென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய். (சி-46070)(21.15.45)

## சமாதான தீபாவளி விழா

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.மாவட்ட கியூடெக் சமாதானக் குழுக்கள் இணைந்து நடத்தும் சமாதான தீபாவளி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கியூடெக் அலுவலக இணைப்பாளர் செல்வி பத்தகேசரியும் கௌரவ விருந்தினராக ஜோசப் பாலா, அருட்தந்தை ஜோய் துரை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் (த-190)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



செல்வன்

### ஆழ்வாப்பிள்ளை பரமநாதன்

*(யா/விக்னேஸ்வராக் கல்லூரி மாணவன்)*

தோற்றம் 10-01-1994 — மறைவு 21-09-2005

*ஈராறு வயதினில் இளவண்டு - நீ*
*ஈன்றவள் இதயம் வெடிக்க உன்னுடன்*
*தோன்றியவர் துவண்டு நிற்க எம்மையெல்லாம்*
*தோற்கடித்துப் பறந்ததேனோ?*

கடந்த 21.09.2005 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு செல்வன் ஆழ்வாப்பிள்ளை பரமநாதன் அவர்களின் 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (04.11.2005) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*விக்னேஸ்வரா லேன்,*
*கரவெட்டி தெற்கு,*
*கரவெட்டி.*

- குடும்பத்தினர்.

(42529)(22-21-15-45)

*வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்*

# 2006ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

*(பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்)*

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக்கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 22.11.2005ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 14.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை *'செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை *'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'* என்ற முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்கமுடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 21.11.2005ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்து கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி நிரப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னராக சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித் தொகையில் 1/2 பங்கைச் செலுத்தி 28.11.2005ஆம் திகதிக்கு முன்னர் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளல் வேண்டும்.

## குறிப்பு

1. சுன்னாகம் மத்தியசந்தை, மருதனார்மடம் பொதுச்சந்தை என்பவற்றிற்குரிய விண்ணப்பப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் ரூபா 1500,000/- இற்குக் குறையாது வைப்பிலுள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கருவாட்டுக்கடை, கோழிக்கடைகளுக்கான ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் மூன்று மாத வாடகையுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட (VAT) வரியும் செலுத்தப்படல் வேண்டும்.
3. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருள்களின் பெறுமதியின் 3%இற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
4. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2.00 இற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 3.00 இற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.
5. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்குப் புறம்பாக, அத்தொகையின் 15% வற்வரியாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. கேள்விப்பத்திரத் தொகையுடன் அதற்குரிய 15% வற்வரி செலுத்தப்படல் வேண்டும்.
7. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

## அட்டவணை

| இல | சந்தைகள், இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட | 1000.00 | 10000.00 | 2960000.00 | - |
| 02 | உடுவில் கீளிச்சந்தை | 500.00 | 2000.00 | 78500.00 | - |
| 03 | உடுவில் ஆலடிச்சந்தை | 200.00 | 500.00 | 5000.00 | - |
| 04 | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 750.00 | 5000.00 | 661000.00 | 250.00 |
| 05 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 66500.00 | 250.00 |
| 06 | கருவாட்டுக்கடை இல.03 | 300.00 | 2000.00 | 18500.00 | 150.00 |
| 07 | கருவாட்டுக்கடை இல.04 | 300.00 | 2000.00 | 13000.00 | 150.00 |
| 08 | கருவாட்டுக்கடை இல.05 | 300.00 | 2000.00 | 11000.00 | 150.00 |
| 09 | கோழிக்கடை இல.06 | 300.00 | 2000.00 | 14000.00 | 150.00 |
| 10 | கோழிக்கடை இல.07 | 300.00 | 2000.00 | 25000.00 | 150.00 |
| 11 | கோழி உரித்தல் | 300.00 | 2000.00 | 39500.00 | 150.00 |
| | **உடுவில்உப அலுவலகம்** | | | | |
| 01 | மருதனார்மடம் பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட) | 1000.00 | 10000.00 | 2711000.00 | - |
| 02 | இணுவில் பொதுச்சந்தை | 300.00 | 2000.00 | 35500.00 | - |
| 03 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 127500.00 | - |
| 04 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கோத்தியாலடி கொல்களத்திற்குச் சென்று ஆடுகள் வெட்டப்பட வேண்டும்) | 300.00 | 2000.00 | 25000.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 70000.00 | - |
| 02 | ஏழாலைச் சந்தை | 300.00 | 2000.00 | 14500.00 | - |

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
31.10.2005 (சி-46063)(21.15.45)

**திருமதி ச.சொக்கலிங்கம்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**



ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா கடந்த 30 ஆம் திகதி சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.விக்னேஸ் மங்கள விளக்கேற்றுவதையும் விழாவின் பிரதம விருந்தினர் எடெக்ஸல் இன்ரநஷனல் நிறுவனத்தின் இலங்கைக்கான முகா மையாளர் இசான் சாதிக் உரை நிகழ்த்துவதையும் அவர் மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : சுதாகரன்)*

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு வலிகாமம் வலயத்தில் பெரும் வீழ்ச்சி

## சீராக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் அதிபர்களிடம் வலியுறுத்து

வலி.தெற்கு,நவ.4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் கடந்த ஐந்து வருடங்களாகப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையைப் போக்க ஊக்குவிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இப்படி வலிகாமம் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களாக நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வலிகாமம் கல்வி வலய மாணவர்களின் பெறுபேறுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளமை வலிகாமம் கல்வி வலயப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகின்றது.

2001ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டுவரை நடைபெற்ற மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளில் 11.5, 9.19, 8.08, 7.26, 6.99 என்ற வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சென்ற வருடம் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் சித்திவீதம் 7.26 ஆக இருந்தபோதிலும் இவ்வருடம் அது 6.99 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த நான்கு கல்விக்கோட்டங்களில் இருந்தும் 118 பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 931 மாணவர்கள் தோற்றி இருந்தனர். ஆனால், இவர்களில் 205 மாணவர்களே மேற்படி பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இது 6.99 சத வீதமாகும்.

அதேவேளை,

உடுவில் கல்விக்கோட்டத்தில் இருந்து 826 பேர் தோற்றி 65 பேரும் (7.87 வீதம்), சங்கானைக் கல்விக் கோட்டத்தில் இருந்து 725 பேர் தோற்றி 55 பேரும் (7.59 வீதம்), சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தில் இருந்து 906 பேர் தோற்றி 60 பேரும் (6.62 வீதம்) தெல்லிப்பழைக் கோட்டத்தில் இருந்து 474 பேர் தோற்றி 25 பேரும் (5.77 வீதம்) சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-152)

# சுன்னாகம் கிழக்கில் மலசலகூடம் அமைக்க யுனிசெவ் உதவி

சுன்னாகம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் (ஜே/147) உள்ள ஆறு பயனாளிகளுக்கு யுனிசெவ் நிறுவனம் மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினூடாக யூனிசெவ் நிறுவனம் இப்பகுதியில் உள்ள இருபது பயனாளிகளுக்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க முன் வந்திருக்கிறது.

மலசல கூடங்களை கட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து முதற்கட்ட நிதியினை பிரதேச செயலகத்தினூடாக யூனிசெப் நிறுவனம் பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

கிராம சேவையாளர்கள் மூலம் இந்த 20 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (3-152)

# எழுதுநர்களுக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ.4

ஜனாதிபதித் தேர்தல் பணியில் ஈடு படவிருக்கும் எழுதுநர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

கடமையில் ஈடுபடவுள்ள எழுதுநர்களுக்கு அவரவர்கட்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்புத் தொடர்பான அனுமதிக் கடிதங்கள் தற்போது யாழ்.செயலக உதவித் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் இருந்து அந்தந்தத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (3-15)

# யாழ்.நகரப் பகுதியில் வீதி, வடிகால் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.4

சமுர்த்தி கிராமிய எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வீதி அபிவிருத்தி மற்றும் வடிகால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

ஜே/68, ஜே/72 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட இடங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜே/68 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 200 மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படவுள்ளது.

ஜே/ 72கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 250 வடிகால்கள் திருத்தம் செய்யப்படவுள்ளன. இந்தவேலைத் திட்டத்திற்காக 60 ஆயிரம் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (3-ரி)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# தேர்தல் குறித்த பயிற்சிக் கருத்தரங்கு

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 'பவ்ரல்' அமைப்பின் ஊடாகப் பணியாற்றவுள்ள மக்கள் நலன் புரிச் சங்கப் படையணிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக் கிழமையும் பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்பயிற்சிக் கருத்தரங்கில் சுமார் 100 பேர் பங்குபற்றவுள்ளனர்.

ஊர்காவற்றுறை, நல்லூர் ஆகிய தேர்தல் தொகுதிகளில் இப்படையணியினர் பணியாற்றுவர் என மக்கள் நலன்புரிச் சங்கப் படையணியின் மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (3-12)

# வலி.வடக்கில் முத்திரையிடும் பணி

அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகள் திணைக்களத்தால், வலி. வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிறுவனங்களிலுள்ள நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப் படவுள்ளன.

முத்திரை இடும் பணிகள் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம், 14 ஆம் திகதிகளில் காலை 9மணியிலிருந்து 1.30 மணி வரை வலி. வடக்கு பிரதேச சபையில் நடைபெறும்.

இப்பகுதிக்குட்பட்ட வர்த்தகர்கள் தமது நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப் பட்டது. (3-204-203)

# கைதடி வயோதிபர் இல்லத்தில் சிறப்புற நடந்த தீபாவளி நிகழ்வு

கைதடி,நவ.4

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தீபாவளி தினத்தன்று மானிப்பாய் இனிய இதயங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இனிய இதயங்களின் தீபாவளி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கைதடி அரச முதியோர் இல்ல மண்டபத்தில் அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு அவ்வமைப்பின் தலைவரும் ஓய்வுபெற்ற வங்கியாளருமான சி.விக்கினராசா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் தெல்லிப்பழை வாழ்வகத்தைச் சேர்ந்த செல்வன் சி.ஜெகதீஸால் தேவாரமும் வாழ்வகக் கீதமும் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து தலைவர் முன்னுரை இடம் பெற்றது.

தலைவர் தமது முன்னுரையில்:-

இனிய இதயங்கள் என்ற இந்த அமைப்பு முதியோர் இல்லத்தின் வளர்ச்சியிலும் இங்கு வசிக்கும் வயோதிபர்களின் வாழ்விலும் அக்கறை கொண்டுள்ளமை எமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று நடத்தப்படும் இந்த நிகழ்வானது முதியோர்களின் கவலைகளை மறக்கச்செய்வதோடு, அதிக சந்தோசத்தையும் வழங்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை - என்றார்.

தொடர்ந்து இனிய இதயங்கள் அமைப்பினால் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான மருந்துவகைகள், பால்மா வகைகள், பிஸ்கட், உடுபுடைவைகள் என்பவற்றை இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, கைதடி அரச முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி எஸ்.யோகானந்தராஜாவிடம் கையளித்தார்.

இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் என்.சீவரட்ணம், கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் எஸ்.யோகானந்தராஜா ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

கலை நிகழ்வுகளாக கைதடி அரச சிறுவர் இல்ல மாணவர்களின் கோலாட்டம், நடனம் என்பனவும் முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோரின் பாடல், முதியோர் இல்ல ஊழியர்களின் நடனம், குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் சிவகுமார் அவர்களின் இசைப்பாடல், தெல்லிப்பழை வாழ்வகத்தைச் சேர்ந்த ஜெகதீசன் அவர்களின் பாடல், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து வழங்கிய நாடகம் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர். அன்றைய தினம் அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த சகலருக்கும் இனிய இதயங்கள் அமைப்பினால் மதிய உணவும் வழங்கப் பட்டது. (3-75)

## நவாலியில் நடந்த நற்கருணைப் பேரணி

நவாலி,நவ.4

நவாலி பங்கு மக்களின் நற்கருணைப் பேரணி கடந்த வாரம் நவாலி சென்.பீற்றேஸ் தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகி பிரதான வீதி, சின்னப்பா வீதி, சங்கையான் வீதியூடாக சென்று தேவாலயத்தை மீண்டும் சென்றடைந்தது. இப்பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (3-100)

# வலி.தெற்கில் குடும்ப அட்டை விநியோகம்

வலி.தெற்கு,நவ.4

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தினரால் மீளாய்வு செய்யப்பட்ட புதிய குடும்ப அட்டைகள் கிராம சேவையாளர்களூடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பல குடும்பங்கள் இதுவரையிலும் தங்கள் குடும்ப அட்டைகளை மீளப்பெற்றுக் கொள்ளவில்லை என்றும் -

குடும்ப அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்கள் தத்தம் கிராம சேவையாளருடன் தொடர்புகொண்டு இம்மாதம் 10ஆம்திகதிக்கு முன் அவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் -

வலிகாமம் தெற்கு பிரதேச உதவி பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி அறிவித்துள்ளார். (ஓ-152)

# செல்வபுரம் பகுதியில் 93 குடும்பங்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டன

உருப்பிராய், நவ. 4

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தில் உள்ள அரச காணிகளில் வசித்து வந்த மக்களுக்கு 90 ஆண்டுகளின் பின்னர் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராமத்தில் 90 ஆண்டுகளாகக் காணி உறுதி இல்லாமலேயே 93 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வசித்து வந்தனர். கோப்பாய் பிரதேச செயலகத்தினர் எடுத்த நடவடிக்கையால் தற்போது அந்தக் குடும்பங்களுக்குக் காணி உறுதிகள் வழங்கப் பட்டுள்ளன. (3-154-202)

# வலி.தெற்கில் 75 பயனாளிகளுக்கு பழமரக் கன்றுகள் விநியோகம்

வலி.தெற்கு,நவ.4

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கு உடுவில் கமநல சேவை நிலையத்தினூடாகப் பயனுள்ள பழ மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பயனுள்ள பழ மரக்கன்றுகளை நடுகை செய்வதன்மூலம் பயனாளிகள் பொருளாதார உயர்வைப் பெறமுடியும் என்ற நோக்கத்துடன் யாழ்ப்பாணம் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தினரால் கமநல சேவை நிலையங்களூடாக ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் மூலம் பயனாளிகளுக்கு அவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு கிலோ நிறைகொண்ட கொய்யாக் காய் காய்க்கக்கூடிய கொய்யாமரம், தேசிக் காய் மரம், மாங்கன்று, பலாக்கன்று, கமுகு போன்ற மரக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

கிராம சேவையாளர்களால் தெரிவுசெய்யப்பட்ட 75 பயனாளிகளுக்குக் கடந்த வாரம் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தில் வைத்து பழமரக்கன்றுகள் விநியோகிக்கப் பட்டன. (3-152)

# சேவை நலன் பாராட்டு

## ஆற்றல் மிக்க ஆசிரியர்

திரு.அருணாசலம் தனபாலசிங்கம் அவர்கள் 1992 மார்ச் 16 ஆம் திகதிமுதல் எமது கல்லூரியில் பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியராகக் கடமைபுரிந்து இன்று அறுபதாவது அகவை நிறைவுசெய்வதையிட்டு சேவையிலிருந்து இளைப்பாறுகின்றார். இவர் எமது கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் மாணவர்கள் விவசாய பாடத்தினை ஆர்வத்துடன் கற்க வழிகாட்டியதுடன் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறவும் செய்தவர். விவசாய விஞ்ஞானப் பாடம் தொடர்பான போட்டிகளிலே மாணவர்களைப் பங்குபற்றச்செய்து பலதடவைகள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறுவதற்கு வழிப்படுத்தியவர். இவர் கற்பித்தற் பணியோடு மட்டும் நிற்காது, பாடசாலையில் விவசாய விஞ்ஞானக் கழகம் ஒன்றை ஆரம்பித்து அதன்மூலம் கல்லூரிச் சூழலை அழகுபடுத்தும் வகையில் தாவரங்களை நாட்டிப் பராமரிக்கும் செயற்பாட்டிலும் மாணவர்களை ஈடுபடச்செய்தவர். கல்லூரி நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றும் இவர் ஆசிரியர் கழகத்தின் தலைவராகவும், மாணவர் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாகவும் இருந்து மாணவர் காலைக்கூட்டம், உடற்பயிற்சி என்பவற்றை நல்ல முறையில் நடத்துவதற்கு உதவியவர்.

இவர் சேவையிலிருந்து இளைப்பாறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாக இருப்பினும் இவரது அறிவு, அனுபவம், ஆற்றல் என்பவற்றிலான வழிகாட்டல் ஆலோசனை என்றும் எமது கல்லூரிக்குக் கிட்டும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இவரது ஓய்வுகாலம் நலத்துடனும், மகிழ்வுடனும் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பிறந்தநாள் வாழ்த்துக் களையும் தெரிவிக்கின்றோம்.

*பொ.கமலநாதன் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.*

## கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார்

ஆசிரியர் திரு.தனபாலசிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பதினைந்து ஆண்டுகள் ஆற்றிய சேவை பலன்மிக்கதாகவும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அமைந்தது. அவர் கற்பித்தலுடன் மட்டும் தனது கடமையினை முடிக்காது கல்லூரியின் பிற செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்த ஒருவராவார் கல்லூரியின் எந்நிகழ்வானாலும் அவர் சுறுசுறுப்பாக மாணவர் ஒழுங்கு, கட்டுப்பாடு மற்றும் விழா ஒழுங்குகள் என்பவற்றைக் கவனிப்பதை யாராலும் அவதானிக்க முடியும். இவ்வாறு ஒரு சிலராலேயே செயற்படமுடியும். அந்த வகையில் அவர்களின் ஓய்வு கல்லூரிக்கு ஓர் இழப்பாகுமென்பதனை ஏற்கத்தான் வேண்டும்.

*அ.பஞ்சலிங்கம் .முன்னாள் அதிபர்.*



## அ.தனபாலசிங்கம்

பயிற்றப்பட்ட ஆசிரியர் (விவசாயம்)

### சேவை விவரம்

| | |
|---|---|
| 1.யா/நெடுந்தீவு ம.வி. | 17.06.1975–31.01.1977 |
| 2.பலாலி ஆசிரிய கலாசாலை | 01.02.1977–31.12.1978 |
| 3.மன்./முகலி.ம.வி. | 01.01.1979–31.04.1979 |
| 4.மன்./எருக்கலம்பிட்டி ம.ம.வி. | 01.05.1979–24.03.1985 |
| 5.மன்./தாழ்பாடு (R.C.TMS) | 25.03.1985–30.04.1986 |
| 6.யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. | 01.05.1986–15.03.1992 |
| 7.யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | 16.03.1992–03.11.2005 |

## அருந்தொண்டாற்றிய செம்மல்

அன்பு, அறிவு, ஆற்றல், ஆன்மீகம் என்பவற்றின் கலவையே தனபாலசிங்கம். வகுப்பறைக் கற்பித்தல், வகுப்பறை முகாமைத்துவம் என்பவற்றை நன்கறிந்தவர். மாணவர்களின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். மாணவர்களின் தலைமைத்துவ இயல்புகளை ஊக்குவிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். விவசாய பாடத்தினை நவீனமுறையில் மிகுந்த கவர்ச்சியுடன் கற்பித்தார். இதனால், இப்பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் கல்லூரியின் ஏனைய நிகழ்வுகளிலும் தனது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்தார். நான் அதிபராக இருந்த காலத்தில் எமது கல்லூரியில் இணைந்தார். இன்றுவரை கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றி வருகின்றார். சக ஆசிரியர்களைச் சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் நேசித்து அவர்களின் அன்பைப் பெற்றார். கல்லூரி ஆசிரியர் கழகத்தின் தலைவராகவும் திகழ்ந்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் சிறந்த ஆசிரியர்களின் வரிசையில் தனக்கெனத் தனியிடம் பெற்றுள்ளார். அவரது அரவணைப்பும் ஆதரவும் கல்லூரிக்குத் தொடர்ந்து கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. அவர் சிறப்புடன் வாழ ஆண்டவன் அருள்புரிவாராக.

*சுடர்.இ.மகேந்திரன் (முன்னாள் அதிபர்)*

## மனிதநேயம் மிக்கவர்

திரு.அ.தனபாலசிங்கம் அவர்களுடன் எனக்கு கடந்த இரு வருடங்களாகத் தொடர்புகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அவரின் குணப்பண்புகள் என்னைக் கவர்ந்துகொண்டது. இறைபக்தன். சகலருடனும் அன்பாகப் பழகுபவர். மனிதநேயம் மிக்கவர்.

அவர் எமது கழகத்தில் சகல பதவிகளையும் வகித்தவர். எல்லோருடைய இன்ப, துன்பங்களிலும் கலந்துகொள்பவர். அவரிடம் உள்ள தனித்துவம் சுறுசுறுப்பாகும். அகவை அறுபதாயினும் நாற்பது வயதுக்குரிய சுறுசுறுப்புடன் காணப்படுபவர். விவசாயத்தை மாணவர்க்கு விளையாட்டு மூலம் மிகத் திறம்பட கற்பிப்பவர். அவருடைய முப்பது வருட ஆசிரிய அனுபவம் எம்மெல்லோருக்கும் முன்னுதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அவருடைய எதிர்காலம் மேலும் சிறக்க என் சார்பிலும் எமது ஆசிரியர் கழகம் சார்பிலும் இறைவனை வேண்டுகின்றோம்.

*மு.சுகுமார்*
*தலைவர்,*
*ஆசிரியர் கழகம்.*

---


## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 ♦ 02 ♦ 1918



மறைவு 04 ♦ 11 ♦ 1986

அமரர் **நாகமுத்து சிவப்பிரகாசம்**

திதி : 04.11.2005

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

சீரணி நாகம்மாள் கோயிலடி,
சண்டிலிப்பாய். 42335

மனைவி.


## விஞ்ஞானக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.4

விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனமும், தேசிய விஞ்ஞான அமைப்பும் இணைந்து நடத்தும் மாபெரும் விஞ்ஞான தொழில் நுட்பக் கண்காட்சி எதிர்வரும் 5 ஆம் திகதிமுதல் 10 ஆம் திகதிவரை கொழும்பில் மெயிலண்ட் பிளேஸில் உள்ள மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

முற்றிலும் மாணவர்களின் விஞ்ஞான தொழில்நுட்பத்தை வைத்து தயாரிக்கப்பட்ட பாடவிதானம் சம்பந்தமானதாக இந்தக் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தியையும் புத்துலகையும் தெரிந்துகொள்வதற்கு அரியவாய்ப்பாக இது அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலிருந்தும் பாடசாலை மாணவர்கள் இந்தக் கண்காட்சியைக் கண்டுகளிப்பதற்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் -

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் கற்கும் மாணவர்களும் உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தைக் கற்கும் மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் (கல்விப் பண்புசார் விருத்தி) மேலதிக செயலாளர் எம்.ஜி.ரி.நவரட்ண வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (சு-13)


**UNIVAC**
**College of Information Technology**

2005ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த 300 District Rank இற்கு உட்பட்ட மாணவர்களிற்கான 2000/= பெறுமதியான புலமைப்பரிசிலின் கீழ் வழங்கப்படும் கணனிப்பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளதால் அனைத்து மாணவர்களும் உடன் சமூகமளிக்கவும்
142, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
077 6176476 Managing Director



## நீங்காத நினைவுகளில்....

ஓராண்டு

அவனிக்கு 20 ♦ 11 ♦ 1929



அவனடிக்கு 15 ♦ 11 ♦ 2004

அமரர்
**செல்லன் குட்டிப்பிள்ளை**

ஈராண்டு

இனித்திருக்க வந்தது 15 ♦ 12 ♦ 1958



நினைத்திருக்கச் சென்றது 17 ♦ 08 ♦ 2003

அமரர்
**தர்மசிங்கம் கமலசரோஜினி**
(வட்டம்)

திதி :04.11.2005

தாயின் வழிவந்த தெய்வம் இரண்டும் சென்றதன்று - இங்கு
சேய்கள் விழி நீர் சிந்தி மனமோ இருண்டுவிட்டதின்று
தூய இறைவன் அடிகள் சேர்ந்தார் நம் தெய்வம் இருபேர்- இன்று
காயம்பட்ட மனத்தோராகிக் கொண்டோம் இங்கிருப்போர்.


இந்துஇளைஞர் மன்ற வீதி,
ஆவரங்கால் மேற்கு. (42290)

உங்களின் நினைவாக
குடும்பத்தினர்.



## நீங்கா நினைவுகளில் ஓராண்டு

தோற்றம் 30 ⁂ 08 ⁂ 1926



மறைவு 04 ⁂ 11 ⁂ 2004

அமரர்
**அப்பாக்குட்டி இராசையா**

(திதி: 04.11.2005)

ஆண்டொன்று சென்றதப்பா- உங்கள்
ஆயிரம் நினைவுகளுடன்
முடியலை அப்பா ஆனாலும் - உங்கள்
மூச்சுநின்ற உண்மையேற்க
அன்புமிகு உங்கள் குரல்
அதிகாலை ஆலயமணி ஒலியாய் - என்றும்
எம் காதுகளில் ஒலித்தெழுப்பி
ஏற்றிச் செல்லும் வாழ்வுதனில்...
❋❋❋❋❋
பாசத்தின் முதல் உறவே - நாம்
பாரினிலே உள்ளவரை
காலமென்ன தூரமென்ன - எமைவிட்டு
கலையாது உங்கள் நினைவு

*ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டும்*

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,சகோதரிகள்.

(42136)

19/1,A சிறிமஹாபோதி றோட்,
தெகிவளை.

முத்தட்டமட ஒழுங்கை
கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ளனர். வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோரின் பெயர்களும் சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோரில் ஒருதொகுதியினரின்பெயர்களும் வருமாறு:-

வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1யா/வே/22 | திரு. சைமன் விக்ரர் |
| 2யா/வே/29 | திரு. சரவணமுத்து கந்தசாமி |
| 3யா/வே/35 | திரு. மனுவேற்பிள்ளை லூயிஸ் |
| 4யா/வே/61 | திரு. இராசதுரை ஆனந்தசிவம் |
| 5யா/வே/62 | திரு. குழந்தை மாரிமுத்து |
| 6யா/வே/82 | திருமதி. சரஸ்வதி ஆறுமுகம் |
| 7யா/வே/88 | திருமதி. தனலட்சுமி தர்மலிங்கம் |
| 8யா/வே/113 | திருமதி. மேரிஜோசேப் மலரம்மா பிரான்சிஸ் சவிரிமுத்து |
| 9யா/வே/136 | திருமதி. ரேவதி சண்முகம் |
| 10யா/வே/139 | திரு. தம்பிப்பிள்ளை தம்பிஐயா |
| 11யா/வே/158 | திரு. இறப்பியேல்பிள்ளை நீக்கிலாஸ் |
| 12யா/வே/174 | திரு. வேலாயுதன் சிவசாமி |
| 13யா/வே/191 | திரு. நாகலிங்கம் சின்னராசா |
| 14யா/வே/194 | திருமதி. சிவபாக்கியம் சிவசம்பு |
| 15யா/வே/227 | திருமதி. தெய்வானைப்பிள்ளை தியாகராசா |
| 16யா/வே/260 | திரு. செல்லையா ஆசைரெத்தினம் |
| 17யா/வே/267 | திருமதி. பரமேஸ்வரி ஆறுமுகம் |
| 18யா/வே/272 | திரு. சிவசிதம்பரம் இராமலிங்கம் |
| 19யா/வே/275 | திரு. கணபதிப்பிள்ளை இராஜகோபால் |
| 20யா/வே/319 | திரு. ஐயம்பிள்ளை கந்தசாமி |
| 21யா/வே/379 | திருமதி. தங்கலட்சுமி சபாரெத்தினம் |
| 22யா/வே/405 | திருமதி. நல்லதங்கம் தம்பியையா |
| 23யா/வே/446 | திருமதி. மகேஸ்வரி கருணானந்தம் |
| 24யா/வே/448 | திரு. செல்லையா துரைராசா |
| 25யா/வே/455 | திருமதி. பார்வதிப்பிள்ளை நடராசா |
| 26யா/வே/472 | திருமதி. தங்கக்குட்டி மயில்வாகனம் |
| 27யா/வே/529 | திரு. அப்பையா அம்பிகைபாகன் |
| 28யா/வே/535 | திருமதி. மங்கயற்கரசி மயில்வாகனம் |
| 29யா/வே/550 | திருமதி. விவேகம்மா நடராசா |
| 30யா/வே/569 | திருமதி. இலட்சுமி சோமசுந்தரம் |
| 31யா/வே/572 | திருமதி. தங்கம்மா சதாசிவம் |
| 32யா/வே/575 | திருமதி. தங்கரத்தினம் சிவலோகநாதன் |
| 33யா/வே/590 | திருமதி. சின்னம்மா ஆறுமுகம் |
| 34யா/வே/598 | திருமதி. யோகம்மா ஏகாம்பரம் |
| 35யா/வே/600 | திருமதி. யோகாம்பிகை தர்மலிங்கம் |
| 36யா/வே/627 | திருமதி. சரஸ்வதி சிவகுரு |
| 37யா/வே/639 | திரு. விசேந்தி அமிர்தவாசகம் |
| 38யா/வே/659 | திருமதி. தனலெட்சுமி பேரம்பலநாதன் |
| 39யா/வே/667 | திருமதி. சற்குணம் கணேசு |
| 40யா/வே/675 | திரு. வயிரமுத்து பசுபதிப்பிள்ளை |
| 41யா/வே/686 | திருமதி. லெட்சுமி நடராசா |
| 42யா/வே/699 | திருமதி. சரோஜினிதேவி சாந்தலிங்கம் |
| 43யா/வே/712 | திருமதி. சிவகாமசுந்தரி முருகேசு |
| 44யா/வே/722 | திரு. பரமலிங்கம் சுப்பிரமணியம் |
| 45யா/வே/736 | திருமதி. கண்ணம்மா தம்பையா |
| 46யா/வே/755 | திருமதி. நாகரத்தினம் செல்லத்துரை |
| 47யா/வே/775 | திருமதி. கோமளவள்ளி சேவியர்ஸ்ரனிஸ்லொஸ் |
| 48யா/வே/776 | திருமதி. செல்லம்மா விசுவலிங்கம் |
| 49யா/வே/788 | திரு. மு. சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு |
| 50யா/வே/795 | திருமதி. கமலபூரணம் நடேசன் |
| 51யா/வே/801 | திருமதி. இராசமணி சிவப்பிரகாசம் |
| 52யா/வே/814 | திரு. சிவகுரு நடேசபிள்ளை |
| 53யா/வே/834 | திருமதி. கனகம்மா குழந்தைவேலு |
| 54யா/வே/836 | திருமதி. ரதிதேவி கந்தையா |
| 55யா/வே/889 | திரு. எட்வேட் அமிர்தலிங்கம் |
| 56யா/வே/898 | திருமதி. நாகம்மா கணபதிப்பிள்ளை |
| 57யா/வே/902 | திரு. கந்தையா பகவத்சிங்கம் |
| 58யா/வே/927 | திரு. ஆறுமுகம் சிவராசா |
| 59யா/வே/929 | திருமதி. இந்திரபூபதி செல்வநாயகம் |
| 60யா/வே/935 | திருமதி. அருளம்மா சுப்பிரமணியம் |
| 61யா/வே/1006 | திரு. கந்தையா குலசிங்கம் |
| 62யா/வே/1016 | திருமதி. மரியம்மா சூசைப்பிள்ளை |
| 63யா/வே/1027 | திரு. வேலாயுதபிள்ளை பாலசிங்கம் |
| 64யா/வே/1039 | திரு. நடராஜா வடிவேலு |
| 65யா/வே/1054 | திருமதி. சொர்ணகாந்தி குமரையா |
| 66யா/வே/1066 | திருமதி. சிவசோதி குணரெத்தினம் |
| 67யா/வே/1072 | திருமதி. சிவபாக்கியம் கனகரெத்தினம் |
| 68யா/வே/1093 | திரு. செல்லப்பா பழனி |
| 69யா/வே/1113 | திரு. செல்லர் கந்தசாமி |
| 70யா/வே/1121 | திரு. செல்லப்பா நடராசா |
| 71யா/வே/1152 | திருமதி. பகீரதலட்சுமி பேரம்பலம் |
| 72யா/வே/1155 | திரு. தம்பிப்பிள்ளை தவநாயகம் |
| 73யா/வே/1160 | திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 74யா/வே/1182 | திருமதி. யோகவதி நாகமணி |
| 75யா/வே/1186 | திரு. செல்லப்பா இராசலிங்கம் |
| 76யா/வே/1197 | திருமதி. சரஸ்வதி வினாசித்தம்பி |
| 77யா/வே/1206 | திருமதி. பூமணி மயில்வாகனம் |
| 78யா/வே/1211 | திரு. மரியாம்பிள்ளை பத்திநாதன் |
| 79யா/வே/1226 | திரு. விருத்தாசலம் இராமச்சந்திரன் |
| 80யா/வே/1237 | திருமதி. பூரணாம்பிகை இராசலிங்கம் |
| 81யா/வே/1248 | திரு. நமசிவாயம் குமாரசாமி |
| 82யா/வே/1253 | திரு. நல்லதம்பி வல்லிபுரம் |
| 83யா/வே/1257 | திருமதி. முத்தம்மா சுந்தரம்பிள்ளை |
| 84யா/வே/1260 | திரு. செல்லையா அரசரெத்தினம் |
| 85யா/வே/1281 | திரு. பேதுருப்பிள்ளை கீதபொன்கலன் |
| 86யா/வே/1292 | திரு. முருகேசு நாகரத்தினம் |
| 87யா/வே/1294 | திரு. பொன்னுத்துரை இராசலிங்கம் |
| 88யா/வே/1308 | திருமதி. சிவபாக்கியம் விநாயகமூர்த்தி |
| 89யா/வே/1363 | திருமதி. லில்லிகிறேஸ் கீதபொன்கலன் |
| 90யா/வே/1370 | திரு. கந்தையா செல்லத்துரை |
| 91யா/வே/1376 | திருமதி. பிலோமினம்மா அந்தோனிபர்ணாந்து |
| 92யா/வே/1396 | திரு. தம்பிப்பிள்ளை நடனசபாபதி |
| 93யா/வே/1416 | திரு. ஐயம்பிள்ளை நல்லதம்பி |
| 94யா/வே/1427 | திரு. கனகசபை செல்வநாயகம் |
| 95யா/வே/1433 | திரு. சுப்பையா கந்தசாமி |
| 96யா/வே/1452 | திருமதி. குணபதி சிவசம்பு |
| 97யா/வே/1483 | திருமதி. கில்பட்ஜோஸ் லீனஸ் |
| 98யா/வே/1491 | திரு. மனுவேற்பிள்ளைசிறில் இராசநாயகம் |
| 99யா/வே/1496 | திருமதி. ஆச்சிமுத்து விஸ்வலிங்கம் |
| 100யா/வே/1497 | திரு. தில்லையம்பலம் தம்பிராசா |
| 101யா/வே/1500 | திரு. மாரிமுத்து நாகேஸ்வரன் |
| 102யா/வே/1508 | திருமதி. இராசலெட்சுமி வாமதேவன் |
| 103யா/வே/1542 | திரு. மயில்வாகனம் மகாலிங்கசிவம் |
| 104யா/வே/1544 | திருமதி. அன்னலட்சுமி மாணிக்கவாசகர் |
| 105யா/வே/1553 | திரு. கனகசபை யதுகுலசிங் |
| 106யா/வே/1555 | திரு. தில்லையம்பலம் இராமச்சந்திரன் |
| 107யா/வே/1556 | திருமதி. முத்துலட்சுமி தேவராசா |
| 108யா/வே/1563 | திரு. பிலிப்பையா நீக்கிலஸ் |
| 109யா/வே/1571 | திருமதி. சுந்தரலட்சுமி காசிப்பிள்ளை |
| 110யா/வே/1600 | திரு. பரநிருபசிங்கம் அருளம்பலம் |
| 111யா/வே/1608 | திருமதி. பர்வதம் அமிர்தநாதன் |
| 112யா/வே/1611 | திரு. தில்லையம்பலம் மதியாபரணம் |
| 113யா/வே/1640 | திரு. வேலாயுதபிள்ளை செல்லத்துரை |
| 114யா/வே/1670 | திரு. கோகிலான் சிவகுரு |
| 115யா/வே/1695 | திரு. தம்பையா தனபாலசிங்கம் |
| 116யா/வே/1742 | திருமதி. முத்தம்மா சண்முகநாதன் |
| 117யா/வே/1751 | திரு. கந்தையா அம்பலவாணர் |
| 118யா/வே/1756 | திருமதி. காமாட்சி சதாசிவம் |
| 119யா/வே/1770 | திருமதி. புவனேஸ்வரி கிருஸ்ணமூர்த்தி |
| 120யா/வே/1772 | திருமதி. பரிமளம் விசுவலிங்கம் |
| 121யா/வே/1795 | திரு. சுப்பிரமணியம் கனகசபை |
| 122யா/வே/1802 | திருமதி. கனகம்மா பாலசுப்பிரமணியம் |
| 123யா/வே/1806 | செல்வி. மகேஸ்வரி சுப்பிரமணியம் |
| 124யா/வே/1816 | திரு. இளையதம்பி சிவப்பிரகாசம் |
| 125யா/வே/1829 | திருமதி. இரத்தினம் தியாகராசா |
| 126யா/வே/1832 | திருமதி. பராசக்தி இராமலிங்கம் |
| 127யா/வே/1861 | திருமதி. கலிஸ்ரா- டக்ளஸ்சேவியர் |
| 128யா/வே/1875 | திரு. முத்துத்தம்பி கனகரெத்தினம் |
| 129யா/வே/1882 | திரு. லீனப்பு அருளப்பு |
| 130யா/வே/1963 | திரு. சற்குரு சுப்பிரமணியம் |
| 131யா/வே/1965 | திரு. முருகேசு நடராஜா |
| 132யா/வே/2019 | திரு. துரைச்சாமி பரஞ்சோதி |
| 133யா/வே/2032 | திரு. சுந்தரம் விநாயகமூர்த்தி |
| 134யா/வே/2038 | திருமதி. இராக்கேல் தேவசகாயம் |
| 135யா/வே/2039 | திரு. பிலுப்பையா மரியதாசன் |
| 136யா/வே/2041 | திரு. வேலுப்பிள்ளை கனகரெத்தினம் |
| 137யா/வே/2083 | திரு. கதிர்காமர் கனகரெத்தினம் |
| 138யா/வே/2095 | திரு. வேலுப்பிள்ளை சாம்பசிவம் |
| 139யா/வே/2131 | திரு. இளையதம்பி சுப்பிரமணியம் |
| 140யா/வே/2142 | திருமதி. றோசம்மா வேலன் |
| 141யா/வே/2159 | திருமதி. அழகம்மா கந்தசாமி |
| 142யா/வே/2170 | திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி |
| 143யா/வே/2194 | திரு. சின்னையா நடராஜா |
| 144யா/வே/2251 | திரு. இராசையா பரராசசிங்கம் |
| 145யா/வே/2295 | திரு. கந்தையா நடராசா |
| 146யா/வே/2296 | திருமதி. யோகவதி தியாகராசா |
| 147யா/வே/2306 | திருமதி. திருக்கேதீஸ்வரி கனகசபை |
| 148யா/வே/2330 | திரு. முத்தன் கந்தசாமி |
| 149யா/வே/2334 | திரு. சரவணமுத்து சிவலோகநாதன் |
| 150யா/வே/2366 | திரு. சோமசேகரம்பிள்ளை சீராமலிங்கம் |
| 151யா/வே/2387 | திரு. சிவசம்பு சிவப்பிரகாசம் |
| 152யா/வே/2392 | திரு. சங்கரப்பிள்ளை சுந்தரம்பிள்ளை |
| 153யா/வே/2417 | திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம் |
| 154யா/வே/2451 | திரு. சதாசிவம் துரைராஜா |
| 155யா/வே/2480 | திரு. வைத்திலிங்கம் சுப்பிரமணியம் |
| 156யா/வே/2497 | திரு. ஆறுமுகம் விசுவலிங்கம் |
| 157யா/வே/2513 | திரு. ஆறுமுகம் பொன்னுத்துரை |
| 158யா/வே/2516 | திருமதி. திலகவதி மகாலிங்கம் |
| 159யா/வே/2527 | திரு. செல்லையா தம்பிராஜா |
| 160யா/வே/2556 | திரு. ஜேம்ஸ்எட்வேட் பிரான்சிஸ் |
| 161யா/வே/2600 | திருமதி. அருளம்மா பாலச்சந்திரன் |
| 162யா/வே/2625 | திரு. நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை |
| 163யா/வே/2628 | திருமதி. மேரிசிசிலியா பேதுருப்பிள்ளை |
| 164யா/வே/2662 | திரு. நாகலிங்கம் வைத்திலிங்கம் |
| 165யா/வே/2668 | திருமதி. பரமேஸ்வரி மயில்வாகனம் |
| 166யா/வே/2695 | திரு. பொன்னையா துரைசிங்கம் |
| 167யா/வே/2715 | திரு. தம்பையா இலிங்கப்பிள்ளை |
| 168யா/வே/2723 | திருமதி. பாக்கியலட்சுமி கனகரத்தினம் |
| 169யா/வே/2734 | திருமதி. கண்மணிப்பிள்ளை பரராஜசிங்கம் |
| 170யா/வே/2737 | திருமதி. பரமேஸ்வரி கைலாசபிள்ளை |
| 171யா/வே/2741 | திரு. அம்பலவாணர் ஆறுமுகம் |
| 172யா/வே/2774 | திரு. சுப்பிரமணியம் பழனிவேற்பிள்ளை |
| 173யா/வே/2803 | திரு. சந்தியாஸ் சூசைப்பிள்ளை |
| 174யா/வே/2831 | திரு. கிறிஸ்தோத்திரம் லீனஸ் |
| 175யா/வே/2867 | திரு. நாகலிங்கம் தேவராஜா |
| 176யா/வே/2871 | திருமதி. திரேசா யோசப்நாயகம் |
| 177யா/வே/2880 | திரு. விநாயகமூர்த்தி சிவசாமி |
| 178யா/வே/2902 | திரு. பசுபதி பொன்னுத்தரை |
| 179யா/வே/2926 | திருமதி. பூங்காவனம் சோமசுந்தரம் |
| 180யா/வே/2928 | திருமதி. பாக்கியம் இராசதுரை |
| 181யா/வே/2941 | திரு. அபுரான் திருச்செல்வம் |
| 182யா/வே/2971 | திருமதி. யோசேப்பின் ஆசீர்வாதம் |
| 183யா/வே/2987 | திருமதி. புஸ்பவதி முருகேசு |
| 184யா/வே/3014 | திருமதி. விசாலாட்சி சரவணபவன் |
| 185யா/வே/3108 | திரு. இராமசாமிஐயர் சிவராமலிங்கக்குருக்கள் |
| 186யா/வே/3114 | திருமதி. கமலம் இரத்தினம் |
| 187யா/வே/3118 | திருமதி. பரிமளம் சிவகுரு |
| 188யா/வே/3121 | திரு. நாகேந்திரர் செல்வரட்ணம் |
| 189யா/வே/3130 | திரு. நாகலிங்கம் செல்லையா |
| 190யா/வே/3153 | திரு. நடராசா ஞானலிங்கம் |
| 191யா/வே/3163 | திருமதி. தனலட்சுமி ஐயம்பிள்ளை |
| 192யா/வே/3166 | திருமதி. ஜெயலட்சுமி சிவப்பிரகாசம் |
| 193யா/வே/3172 | திருமதி. வள்ளி நாகன் |
| 194யா/வே/3196 | திரு. கந்தையா வடிவேலு |
| 195யா/வே/3201 | திரு. ஆறுமுகம் சொக்கலிங்கம் |
| 196யா/வே/3203 | திருமதி. மேரிறீற்றா சூசைப்பிள்ளைராஜசிங்கம் |
| 197யா/வே/3233 | திருமதி. யேசுமலர் பெனடிற்றா யாக்கோப்பு |
| 198யா/வே/3275 | திரு. நகுலேசபிள்ளை உமாபதிசிவம் |
| 199யா/வே/3315 | திரு. ஐயம்பிள்ளை சாம்பசிவம் |
| 200யா/வே/3329 | திரு. மரியாம்பிள்ளை மேரியோசவ்இராசா |
| 201யா/வே/3332 | திரு. கஸ்பாறு சவிரிமுத்து |
| 202யா/வே/3334 | திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 203யா/வே/3338 | திரு. சொலமன்பிள்ளைமரியாம்பிள்ளை யோசெப் |
| 204யா/வே/3387 | திருமதி. விஜயலெட்சுமி சிவசாமி |
| 205யா/வே/3388 | திரு. நாகமணி கருணானந்தசிவம் |
| 206யா/வே/3393 | திருமதி. கேசலச்சுமி சுப்பிரமணியம் |
| 207யா/வே/3403 | திரு. குமாரசாமி கந்தசாமி |
| 208யா/வே/3469 | திருமதி. றீற்றம்மா செபமாலைமுத்து |
| 209யா/வே/3470 | திருமதி. சிவகாமிப்பிள்ளை சோமசுந்தரம் |
| 210யா/வே/3499 | திருமதி. பத்மாவதி திருஞானசெல்வன் |
| 211யா/வே/3503 | திருமதி. மனோன்மணி சேனாதிராசா |
| 212யா/வே/3590 | திரு. தம்பையா சங்கரலிங்கம் |
| 213யா/வே/3609 | திரு. சுந்தரம் மார்க்கண்டு |
| 214யா/வே/3646 | திருமதி. கமலாம்பிகை தியாகராசா |
| 215யா/வே/3654 | திரு. தம்பையா இராசரெத்தினம் |
| 216யா/வே/3663 | திருமதி. வள்ளியம்மை தம்பையா |
| 217யா/வே/3677 | திரு. யோசப் அந்தோனிப்பிள்ளை |
| 218யா/வே/3694 | திரு. ஆறுமுகம் இரத்தினசபாபதி |
| 219யா/வே/3704 | திரு. சவரிமுத்து யேசுதாசன் |
| 220யா/வே/3722 | திருமதி. லூர்த்தம்மா மனவல் |
| 221யா/வே/3748 | திரு. கந்தையா கனகரத்தினம் |
| 222யா/வே/3767 | திரு. பொன்னையா குமாரசாமி |
| 223யா/வே/3773 | திரு. இராமன் மாரிமுத்தன் |
| 224யா/வே/3787 | திரு. பொன்னம்பலம் வில்வரத்தினம் |
| 225யா/வே/3790 | திருமதி. பூமணி செல்வரெத்தினம் |
| 226யா/வே/3823 | திருமதி. சூசானம் வேதநாயகம் |

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1யா/சா/38 | திருமதி. நாகம்மா கந்தையா |
| 2யா/சா/45 | திரு. இளையதம்பி சொக்கலிங்கம் |
| 3யா/சா/55 | திருமதி. றோசலின் சூசைரட்டினம் |
| 4யா/சா/104 | திருமதி. தங்கமணி பொன்னம்பலம் |
| 5யா/சா/107 | திரு. பொன்னையா சிவசம்பு |
| 6யா/சா/153 | திரு. பொன்னையா இராமுப்பிள்ளை |
| 7யா/சா/218 | திரு. சின்னப்பு இராசையா |
| 8யா/சா/277 | திருமதி. தங்கரத்தினம் அம்பலவாணர் |
| 9யா/சா/295 | திரு. கதிரவேலு சபாபதிப்பிள்ளை |
| 10யா/சா/318 | திரு. பொன்னையா குமாரசாமி |
| 11யா/சா/320 | திரு. சேதுகாவலர் ஆறுமுகம் |
| 12யா/சா/348 | திரு. இராமநாதர் பீதாம்பரம் |
| 13யா/சா/350 | திரு. நாகநாதர் சுப்பிரமணியம் |
| 14யா/சா/355 | திரு. சந்திரசேகர நவரத்தினம் |
| 15யா/சா/356 | திரு. சந்திரசேகர நவரத்தினம் |
| 16யா/சா/394 | திரு. செல்லையா இராசையா |
| 17யா/சா/449 | திருமதி. இராசமணி வேலாயுதர் |
| 18யா/சா/456 | திரு. றொபேட் விமலேந்திரன் செல்லையா |
| 19யா/சா/545 | திருமதி. மாணிக்கம் பத்மநாதன் |
| 20யா/சா/561 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| 21யா/சா/564 | திரு. வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் |
| 22யா/சா/579 | திருமதி. பாக்கியம் தியாகராசா |
| 23யா/சா/590 | திரு. கந்தையா சரவணமுத்து |
| 24யா/சா/596 | திரு. சின்னையா ஆறுமுகம் |
| 25யா/சா/617 | திரு. முருகன் .கனகலிங்கம் |
| 26யா/சா/652 | திரு. கந்தன் கண்மணி |
| 27யா/சா/669 | திருமதி. கனகம்மா சின்னத்தம்பி |
| 28யா/சா/687 | திரு. சின்னத்தம்பி தம்பு |
| 29யா/சா/696 | திருமதி. பத்மாவதி சின்னத்தம்பி |
| 30யா/சா/723 | திருமதி. ஜானகி கனகரத்தினம் |
| 31யா/சா/757 | திரு. செல்லையா அம்பலவாணர் |
| 32யா/சா/775 | திரு. காசித்தம்பி கந்தசாமி |
| 33யா/சா/820 | திருமதி. செல்வரத்தினம் மயில்வாகனம் |
| 34யா/சா/830 | திரு. சின்னத்தம்பி மயில்வாகனம் |
| 35யா/சா/844 | திரு. குமாரசாமி நகுலேஸ்வரன் |
| 36யா/சா/855 | திரு. சிவசுப்பிரமணியம் கிருஷ்ணபிள்ளை |
| 37யா/சா/866 | திரு. தாமன் சிற்றம்பலம் |
| 38யா/சா/867 | திரு. தளையசிங்கம் தம்பிஐயா |
| 39யா/சா/927 | திரு. சரவணமுத்து வல்லிபுரம் |
| 40யா/சா/958 | திரு. இளையதம்பி சந்திரமௌலீசன் |
| 41யா/சா/998 | திரு. சின்னர் தர்மலிங்கம் |
| 42யா/சா/1005 | திரு. சுப்பு கந்தையா |
| 43யா/சா/1016 | திரு. வல்லிபுரம் கந்தையா |
| 44யா/சா/1078 | திரு. சுப்பையா சண்முகநாதன் |
| 45யா/சா/1102 | திருமதி. சின்னம்மா வேலாயுதபிள்ளை |
| 46யா/சா/1133 | திரு. தாமு நமசிவாயம் |
| 47யா/சா/1134 | திரு. பூதன் கந்தையா |
| 48யா/சா/1142 | திருமதி. தையல்நாயகி நவரத்தினம் |
| 49யா/சா/1187 | திருமதி. நாகம்மா கோபாலப்பிள்ளை |
| 50யா/சா/1198 | திருமதி. இராசம்மா சின்னத்தம்பி |
| 51யா/சா/1205 | திரு. முத்துத்தம்பி தில்லைநாதன் |
| 52யா/சா/1206 | திரு. பொன்னம்பலம் சிவகுருநாதன் |
| 53யா/சா/1207 | திருமதி. அம்பிகைப்பிள்ளை நடராசா |
| 54யா/சா/1249 | திரு. சிதம்பரநாதக்குருக்கள் செகதீஸ்வரசர்மா |
| 55யா/சா/1272 | திரு. நாகன் சிவலிங்கம் |
| 56யா/சா/1329 | திரு. சினட்டி சின்னத்தம்பி |
| 57யா/சா/1335 | திரு. வல்லிபுரம் முத்துவேலு |
| 58யா/சா/1359 | திரு. சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி |
| 59யா/சா/1382 | திரு. சங்கரப்பிள்ளை சரவணமுத்து |
| 60யா/சா/1412 | திரு. சின்னக்குட்டி வல்லிபுரம் |
| 61யா/சா/1413 | திரு. சின்னக்குட்டி வல்லிபுரம் |
| 62யா/சா/1424 | திரு. சின்னப்பொடியன் சின்னத்தம்பி |
| 63யா/சா/1441 | திரு. கந்தையா இராசரத்தினம் |
| 64யா/சா/1442 | திருமதி. மகேஸ்வரி வேலாயுதம் |
| 65யா/சா/1466 | திருமதி. வள்ளிப்பிள்ளை சின்னையா |
| 66யா/சா/1469 | திருமதி. செல்லம்மா இராசையா |
| 67யா/சா/1478 | திரு. பாலசிங்கம் மாணிக்கசிங்கம் |
| 68யா/சா/1497 | திரு. சிவசாயிகுரு நிர்தனராசகுருக்கள் |
| 69யா/சா/1509 | திரு. முருகேசு ஆறுமுகம் |
| 70யா/சா/1551 | திருமதி. கமலாதேவி துரைராசா |
| 71யா/சா/1559 | திரு. சரவணை சின்னத்துரை |

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 72யா/சா/1573 | திருமதி. மங்கையற்கரசி சிதம்பரப்பிள்ளை |
| 73யா/சா/1629 | திருமதி. யோகேஸ்வரி சோதிநாதன் |
| 74யா/சா/1657 | திரு. பொன்னம்பலம் நல்லையா |
| 75யா/சா/1674 | திரு. தம்பிராசா இரத்தினராசா |
| 76யா/சா/1682 | திருமதி. பூரணம் நாகராசா |
| 77யா/சா/1728 | திருமதி. சவுந்தரம் இராசசுந்தரம் |
| 78யா/சா/1732 | திருமதி. பத்மாவதி நடராசா |
| 79யா/சா/1747 | திரு. வேலாயுதம் நடராசசுந்தரம் |
| 80யா/சா/1772 | திரு. தம்பிஜயர் தியாகராஜா |
| 81யா/சா/1787 | திருமதி. பரமேஸ்வரி அழகரத்தினம் |
| 82யா/சா/1790 | திரு. செல்லையா வேலாயுதம் |
| 83யா/சா/1796 | திருமதி. புஸ்பராணி மார்க்கண்டு |
| 84யா/சா/1820 | திருமதி. தையல்லம்மா கனகராசா |
| 85யா/சா/1821 | திருமதி. இராசமணி குமரப்பா |
| 86யா/சா/1828 | திரு. அருணாசலம் நடராசா |
| 87யா/சா/1838 | திரு. நாகலிங்கம் இராசையா |
| 88யா/சா/1839 | திரு. நாகலிங்கம் தண்டாயுதபாணி |
| 89யா/சா/1864 | திரு. சின்னத்தம்பி தியாகராசா |
| 90யா/சா/1867 | திரு. மயில்வாகனம் மார்க்கண்டு |
| 91யா/சா/1874 | செல்வி. நித்தியலட்சுமி சின்னத்துரை |
| 92யா/சா/1911 | திரு. கார்த்திகேசு சதாசிவம் |
| 93யா/சா/1954 | திரு. கந்தையா வல்லிபுரம் |
| 94யா/சா/1955 | திரு. தம்பையா வைத்தியலிங்கம் |
| 95யா/சா/1964 | திரு. கந்தையா இராசமந்திரி |
| 96யா/சா/1967 | திரு. இளையதம்பி ஆறுமுகம் |
| 97யா/சா/1987 | திரு. கட்டையன் வயிரவன் |
| 98யா/சா/1996 | திரு. கந்தையா சிவசம்பு |
| 99யா/சா/2003 | திரு. கந்தையா அமிர்தலிங்கம் |
| 100யா/சா/2008 | திரு. அம்பலம் கந்தையா சபாரத்தினம் |
| 101யா/சா/2022 | திருமதி. கனகாம்பிகை மகேந்திரன் |
| 102யா/சா/2086 | திருமதி. இராசலட்சுமி சிதம்பரப்பிள்ளை |
| 103யா/சா/2091 | திரு. வைரமுத்து தியாகராசா |
| 104யா/சா/2112 | திரு. வைரவன் சின்னத்தம்பி |
| 105யா/சா/2141 | திரு. சபாரத்தினம் சற்குணசிங்கம் |
| 106யா/சா/2165 | திரு. செல்லையா குமாரசாமி |
| 107யா/சா/2172 | திரு. சின்னதம்பி விசாகப்பெருமாள் |
| 108யா/சா/2226 | திருமதி. இராசேஸ்வரி செல்லத்துரை |
| 109யா/சா/2232 | திருமதி. மதுரேஸ்வரி சின்னத்துரை |
| 110யா/சா/2236 | திரு. கந்தையா பரமசாமி |
| 111யா/சா/2241 | திரு. கணபதிப்பிள்ளை சிவபாதசுந்தரம் |
| 112யா/சா/2262 | திரு. நாகலிங்கம் சரவணமுத்து |
| 113யா/சா/2306 | திரு. கந்தசாமி இரத்தினசோதி |
| 114யா/சா/2328 | திரு. வினாசித்தம்பி கந்தையா |
| 115யா/சா/2333 | திருமதி. அன்னபூரணாதேவி விபுதராசா |
| 116யா/சா/2337 | திரு. சின்னத்துரை நடராசா |
| 117யா/சா/2350 | திரு. முத்துக்குமாரு சுப்பிரமணியம் |
| 118யா/சா/2393 | திருமதி. சறோஜினிதேவி காங்கேசு |
| 119யா/சா/2415 | திருமதி. மகேஸ்வரி முத்துலிங்கம் |
| 120யா/சா/2419 | திரு. ஆறுமுகம் கந்தையா |
| 121யா/சா/2423 | திருமதி. சரஸ்வதி பொன்னம்பலம் |
| 122யா/சா/2449 | திரு. செல்லத்துரை கந்தையா |
| 123யா/சா/2451 | திரு. தியாகராசா அரியரத்தினம் |
| 124யா/சா/2457 | திரு. கந்தன் முருகன் |
| 125யா/சா/2492 | திரு. வைரமுத்து தேவராஜா |
| 126யா/சா/2517 | திருமதி. அன்னலட்சுமி சுப்பிரமணியம் |
| 127யா/சா/2527 | திரு. சுப்பையா நடராசன் |
| 128யா/சா/2549 | திரு. அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா |
| 129யா/சா/2553 | திரு. மூக்கையா அழகுப்பிள்ளை |
| 130யா/சா/2556 | திருமதி. சிவயோகம் நடராசா |
| 131யா/சா/2588 | திரு. பொன்னையா சுந்தரலிங்கம் |
| 132யா/சா/2618 | திரு. சின்னையா கனகரத்தினம் |
| 133யா/சா/2635 | திருமதி. சாந்தநாயகி மார்க்கண்டு |
| 134யா/சா/2643 | திரு. அருளம்பலம் தேவகுமார் |
| 135யா/சா/2659 | திரு. துரைராசா சிறிபாலன் |
| 136யா/சா/2660 | திருமதி. மகேஸ்வரி சின்னப்பு |
| 137யா/சா/2667 | திரு. நாகமுத்து கார்த்திகேசு சுப்பிரமணியம் |
| 138யா/சா/2670 | திருமதி. மகேஸ்வரி தம்பிஜயா |
| 139யா/சா/2693 | திரு. வல்லிபுரம் குமாரசாமி |
| 140யா/சா/2715 | திருமதி. சின்னம்மா கணபதி |
| 141யா/சா/2732 | திரு. அம்பலவாணர் கந்தையா |
| 142யா/சா/2743 | திரு. சின்னக்குட்டி மூத்தாம்பி |
| 143யா/சா/2760 | திருமதி. சரஸ்வதி வைத்திலிங்கம் |
| 144யா/சா/2761 | திரு. பொன்னையா சுப்பிரமணியம் |
| 145யா/சா/2773 | திரு. இராசையா செல்லத்துரை |
| 146யா/சா/2775 | திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி |
| 147யா/சா/2783 | திரு. தம்பு சோமசுந்தரம் |
| 148யா/சா/2786 | திரு. பிள்ளையினார் தங்கராசா |
| 149யா/சா/2795 | திரு. பிள்ளையினார் தங்கராசா |
| 150யா/சா/2800 | திரு. சிவக்கொழுந்து தம்புநாதபிள்ளை |
| 151யா/சா/2831 | திரு. செல்லப்பா இரத்தினம் |
| 152யா/சா/2874 | திரு. வேலன் கணபதிப்பிள்ளை |
| 153யா/சா/2932 | செல்வி. ஞானாம்பிகை சரவணமுத்து |
| 154யா/சா/2946 | திரு. நல்லதம்பி பேரம்பலம் |
| 155யா/சா/2980 | திரு. வைரவநாதர் விசுவலிங்கம் |
| 156யா/சா/2990 | திருமதி. நல்லம்மா தாமோதரம்பிள்ளை |
| 157யா/சா/3044 | திரு. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை |
| 158யா/சா/3046 | திருமதி. கனகம்மா வல்லிபுரம் |
| 159யா/சா/3049 | திரு. கந்தையா நற்குணம் |
| 160யா/சா/3070 | திரு. நல்லதம்பி பேரம்பலம் |
| 161யா/சா/3074 | திரு. குருக்கள் சுந்தரஐயர் பாலசுப்பிரமணியன் |
| 162யா/சா/3077 | திரு. செல்லையா ஞானசுந்தரம் |
| 163யா/சா/3122 | திரு. பொன்னையா தியாகராசா |
| 164யா/சா/3123 | திரு. தம்பு மயில்வாகனம் |
| 165யா/சா/3128 | திருமதி. சரஸ்வதி பரமசாமி |
| 166யா/சா/3134 | திருமதி. சீதாலட்சுமி சபாரத்தினம் |
| 167யா/சா/3142 | திருமதி. பாறுப்பிள்ளை தம்பு |
| 168யா/சா/3143 | திருமதி. நல்லம்மா பொன்னம்பலம் |
| 169யா/சா/3145 | திரு. வேலுப்பிள்ளை கிட்டினர் |
| 170யா/சா/3161 | திரு. வேலுப்பிள்ளை தருமரெத்தினம் |
| 171யா/சா/3163 | திருமதி. செல்வமணி பாலசுந்தரம் |
| 172யா/சா/3164 | திருமதி. செல்வமணி பாலசுந்தரம் |
| 173யா/சா/3175 | திரு. தம்பையா சிவகுரு |
| 174யா/சா/3192 | திரு. அருணாசலம் செல்லையா |
| 175யா/சா/3205 | திருமதி. பகவதி குணநாயகம் |
| 176யா/சா/3248 | திரு. சின்னத்தம்பி கணேசன் |
| 177யா/சா/3259 | திருமதி. யோகரத்தினம் செல்லையா |
| 178யா/சா/3260 | திரு. ஆறுமுகம் இராசபாலு |
| 179யா/சா/3294 | திருமதி. நவசக்தி உருக்குமணி சோமசுந்தரம் |
| 180யா/சா/3300 | திருமதி. பரமேஸ்வரி ஆறுமுகம் |
| 181யா/சா/3301 | திரு. கந்தையா கெங்காதரன் |
| 182யா/சா/3332 | திரு. சோமசுந்தரம்பிள்ளை இரத்தினசபாபதி |
| 183யா/சா/3337 | திரு. கனகசபை சதாசிவம் |
| 184யா/சா/3355 | திரு. ஆறுமுகம் கார்த்திகேசு |
| 185யா/சா/3364 | திருமதி. ஆசிப்பிள்ளை குமாரசாமி |
| 186யா/சா/3419 | திரு. சங்கரப்பிள்ளை கனகசபை |
| 187யா/சா/3427 | திருமதி. புஸ்பதிலகவதி கணேசலிங்கம் |
| 188யா/சா/3434 | திரு. செல்லப்பா வினாசித்தம்பி |
| 189யா/சா/3438 | திரு. சுவாமிநாதர் சின்னத்துரை |
| 190யா/சா/3447 | திரு. மயில்வாகனம் அருணாசலம் |
| 191யா/சா/3456 | திருமதி. சின்னம்மா நடேசு |
| 192யா/சா/3465 | திருமதி. ஞானகலாவல்லி வாரித்தம்பி |
| 193யா/சா/3473 | திருமதி. ஞானகலாவல்லி வாரித்தம்பி |
| 194யா/சா/3478 | திரு. சங்கரப்பிள்ளை பரமசாமி |
| 195யா/சா/3520 | திரு. சின்னர் சின்னத்தம்பி |
| 196யா/சா/3571 | திருமதி. சிவயோகம் சந்திரலிங்கராசா |
| 197யா/சா/3597 | திரு. சுந்தரம்பிள்ளை துரைராசா |
| 198யா/சா/3637 | திரு. கந்தர் சின்னையா |
| 199யா/சா/3648 | திரு. தம்பு செல்வராஜா |
| 200யா/சா/3670 | திரு. சின்னத்துரை கந்தசாமி |
| 201யா/சா/3672 | திரு. முத்துச்சாமி சிற்றம்பலம் |
| 202யா/சா/3688 | திருமதி. காசிப்பிள்ளை கையிலாயபிள்ளை |
| 203யா/சா/3752 | திரு. கணபதிப்பிள்ளை தம்பு |
| 204யா/சா/3809 | திருமதி. செல்லமுத்து கணபதிப்பிள்ளை |
| 205யா/சா/3810 | திரு. நீலயினார் சின்னையா |
| 206யா/சா/3815 | திரு. கதிர்காமர் இராசையா |
| 207யா/சா/3818 | திரு. இராமு கந்தையா |
| 208யா/சா/3831 | திரு. காசித்தம்பி தாமோதரம்பிள்ளை |
| 209யா/சா/3832 | திரு. விநாசித்தம்பி சந்திரசேகரம் |
| 210யா/சா/3844 | திரு. அருட்பிரகாசம் நமசிவாயம் |
| 211யா/சா/3852 | திருமதி. மாணிக்கம் சின்னத்தம்பி |
| 212யா/சா/3861 | திரு. சின்னத்தம்பி விசுவலிங்கம் |
| 213யா/சா/3890 | திரு. வைரமுத்து நமசிவாயம் |
| 214யா/சா/3900 | திருமதி. சவேரியாப்பிள்ளை தொம்மைபிலிப்பு |
| 215யா/சா/3913 | திரு. சின்னத்தம்பி சின்னத்துரை |
| 216யா/சா/3918 | திரு. செல்லையா தங்கராசா |
| 217யா/சா/3920 | திரு. அருணாசலம் தங்கராசா |
| 218யா/சா/3921 | திரு. கணபதிப்பிள்ளை அம்பிகைபாகன் |
| 219யா/சா/3948 | திருமதி. லீலாவதி சிதம்பரநாதன் |
| 220யா/சா/3967 | திரு. கதிர்காமர் சின்னத்தம்பி |
| 221யா/சா/3979 | செல்வி. புஸ்பராணி சின்னத்தம்பி |
| 222யா/சா/4056 | திரு. சின்னவன் கந்தன் |
| 223யா/சா/4063 | திரு. முருகர் பாலசிங்கம் |
| 224யா/சா/4071 | திரு. சுப்பிரமணியம் கணேசமூர்த்தி |
| 225யா/சா/4074 | திரு. கதிர்காமர் செல்லையா |
| 226யா/சா/4076 | திரு. வீரகத்தியார் பாலசிங்கம் |
| 227யா/சா/4077 | திருமதி. சாந்தநாயகி வேலுப்பிள்ளை |
| 228யா/சா/4113 | திரு. கணபதி கந்தையா |
| 229யா/சா/4120 | திரு. சம்மந்தர் முருகர் கந்தையா |
| 230யா/சா/4128 | திரு. சின்னையா கதிர்காமு |
| 231யா/சா/4138 | திரு. சின்னத்தம்பி வல்லிபுரம் |
| 232யா/சா/4165 | திரு. அழ்வான் கிட்டினன் |
| 233யா/சா/4171 | திரு. வேலன் கந்தன் |
| 234யா/சா/4180 | திரு. சின்னர் வேலுப்பிள்ளை |
| 235யா/சா/4203 | திரு. வல்லிபுரம் கந்தையா |
| 236யா/சா/4217 | திரு. சின்னையா கந்தையா |
| 237யா/சா/4220 | திரு. சின்னன் துரைராஜா |
| 238யா/சா/4234 | திரு. கந்தையா மகேந்திரராசா |
| 239யா/சா/4236 | திரு. பிரம்மஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்கள் குமாரசாமி ஐயர் |
| 240யா/சா/4331 | திரு. தம்பு இராமசாமி |
| 241யா/சா/4343 | திரு. ஐயம்பிள்ளை சின்னையா |
| 242யா/சா/4356 | திருமதி. றோசம்மா மரியராசரத்தினம் |
| 243யா/சா/4421 | திரு. கந்தன் கணபதிப்பிள்ளை |
| 244யா/சா/4444 | திருமதி. செல்லம்மா திருநாவுக்கரசு |
| 245யா/சா/4453 | திரு. ஆறுமுகம் வேலாயுதபிள்ளை |
| 246யா/சா/4469 | திரு. வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு |
| 247யா/சா/4473 | திருமதி. இராசம்மா நடராசா |
| 248யா/சா/4485 | திரு. நடராசா கந்தசாமி |
| 249யா/சா/4533 | திரு. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை |
| 250யா/சா/4560 | திரு. சின்னத்தம்பி கயிலாயபிள்ளை |
| 251யா/சா/4572 | திரு. சின்னத்தம்பி நடராசா |
| 252யா/சா/4601 | திருமதி. புஸ்பராணி குமாரசாமி |
| 253யா/சா/4619 | திரு. செல்லையா செல்வரட்டிணம் |
| 254யா/சா/4625 | திரு. செல்லத்துரை சிவசுப்பிரமணியம் |
| 255யா/சா/4640 | திருமதி. நாகேஸ்வரி பொன்னையா |
| 256யா/சா/4669 | திரு. றிச்சட் கனியுட் யோசெப் |
| 257யா/சா/4675 | திரு. யோசேப்பு யோண்பிள்ளை |
| 258யா/சா/4683 | திரு. வினாசித்தம்பி சிவலோகநாதன் |
| 259யா/சா/4700 | திரு. சவரிமுத்து ஜெறாட் மாசிலாமணி |
| 260யா/சா/4729 | திரு. சந்தியாப்பிள்ளை சூசைமரியதாசன் |
| 261யா/சா/4732 | திரு. இம்மானுவேல் இக்னேசியஸ் |
| 262யா/சா/4780 | திருமதி. கமலாதேவி தம்பிப்பிள்ளை. |
| 263யா/சா/4793 | திரு. கதிரித்தம்பி குமாரசாமி |
| 264யா/சா/4798 | திருமதி. றீட்டா மரியநாயகம் |
| 265யா/சா/4800 | திருமதி. இராணி அரசநாயகம் |
| 266யா/சா/4818 | திருமதி. சின்னத்தங்கம் சரவணமுத்து |
| 267யா/சா/4835 | திரு. பிரான்சிஸ் மைக்கல் |
| 268யா/சா/4879 | திரு. செல்லத்துரை நடராசா |
| 269யா/சா/4904 | திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம் |
| 270யா/சா/4928 | திரு. இளையதம்பி கந்தையா |
| 271யா/சா/4933 | திருமதி. மகிழ்மலர் சுப்பிரமணியம் |
| 272யா/சா/5037 | திரு. முத்தையா கமலநாதன் |
| 273யா/சா/5042 | திரு. கணபதி சின்னத்தம்பி |
| 274யா/சா/5053 | திரு. முருகர் கந்தையா |
| 275யா/சா/5058 | திருமதி. சின்னம்மா பரராசசிங்கம் |
| 276யா/சா/5072 | திரு. கதிர்காமர் பரமானந்தர் |
| 277யா/சா/5110 | திருமதி. செல்லம்மா செல்லத்துரை |
| 278யா/சா/5146 | திரு. பரமேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி |
| 279யா/சா/5155 | திருமதி. வள்ளிப்பிள்ளை கந்தையா |
| 280யா/சா/5158 | திருமதி. மேரிறோசலின் பிரான்சிஸ் |
| 281யா/சா/5186 | திரு. கந்தையா சரவணமுத்து |
| 282யா/சா/5201 | திரு. தம்பு பொன்னுத்துரை |
| 283யா/சா/5216 | திருமதி. செல்லம்மா பொன்னையா |
| 284யா/சா/5278 | திரு. கணபதிப்பிள்ளை குலசேகரம் |
| 285யா/சா/5290 | திருமதி. இராசம்மா இராசையா |
| 286யா/சா/5292 | திருமதி. தங்கம்மா கணபதிப்பிள்ளை |
| 287யா/சா/5338 | திருமதி. கனகம்மா நடராசா |
| 288யா/சா/5342 | திரு. பொன்னையா நாகராசா |
| 289யா/சா/5361 | திரு. சுப்பிரமணியம் நாகராசா |
| 290யா/சா/5371 | திரு. தம்பிமுத்து வடிவேலு |
| 291யா/சா/5395 | திரு. கார்த்தியேசு விஸ்வலிங்கம் |
| 292யா/சா/5397 | திருமதி. யோகம்மா மாணிக்கம் |
| 293யா/சா/5404 | திரு. சின்னத்தம்பி நடேசன் |
| 294யா/சா/5425 | திருமதி. சிவயோகம் வேலாயுதம் |
| 295யா/சா/5449 | திரு. சரவணமுத்து இராசையா |
| 296யா/சா/5471 | திரு. பொன்னம்பலம் அமிர்தலிங்கம் |
| 297யா/சா/5492 | திரு. காசித்தம்பி கயிலாயபிள்ளை |
| 298யா/சா/5504 | திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் |
| 299யா/சா/5520 | திரு. அருணாசலம் தில்லைநாதன் |
| 300யா/சா/5573 | திரு. சபாபதிப்பிள்ளை கந்தையா |
| 301யா/சா/5574 | திரு. இளையகுட்டி குழந்தைவேலு |
| 302யா/சா/5584 | திரு. தம்பு தனபாலசிங்கம் |
| 303யா/சா/5635 | திரு. சின்னவன் கந்தையா |
| 304யா/சா/5650 | திரு. கந்தன் தவராசா |
| 305யா/சா/5657 | திரு. நாகமுத்து இராமலிங்கம் |
| 306யா/சா/5658 | திரு. சின்னவன் கந்தையா |
| 307யா/சா/5676 | திருமதி. மனோரஞ்சிதம் கதிரேசபிள்ளை |
| 308யா/சா/5698 | திருமதி. மீனாட்சி சின்னராசா |
| 309யா/சா/5740 | திரு. தம்பு சுப்பிரமணியம் |
| 310யா/சா/5742 | செல்வன். கந்தசாமி சிவலிங்கம் |
| 311யா/சா/5831 | திரு. வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் |
| 312யா/சா/5863 | திரு. கார்த்திகேசு கனகசபை |
| 313யா/சா/5901 | திரு. வல்லிபுரம் பாலசுப்பிரமணியம் |
| 314யா/சா/5903 | திருமதி. வள்ளிநாயகியம்மா சிவசுப்பிரமணியம் |
| 315யா/சா/5907 | திரு. கணபதி சின்னத்தம்பி |
| 316யா/சா/5949 | திருமதி. மாக்கிறெற்குணபாக்கியம் அருளானந்தம் |
| 317யா/சா/5957 | திரு. இராமு கனகு |
| 318யா/சா/6029 | திரு. தாமோதரம்பிள்ளை இலங்கைநாயகம் |
| 319யா/சா/6045 | திரு. குழந்தையன் கந்தன் |
| 320யா/சா/6052 | திருமதி. சின்னப்பிள்ளை நடராசா |
| 321யா/சா/6139 | திரு. கந்தையா மகேஸ்பரன் |
| 322யா/சா/6149 | திருமதி. சரஸ்வதி கதிரவேலு |
| 323யா/சா/6165 | திரு. குணசிங்கம் மங்களேஸ்வரி |
| 324யா/சா/6178 | திருமதி. நாகம்மா கதிர்காமன் |
| 325யா/சா/6201 | திரு. செல்லப்பா அப்புத்துரை |
| 326யா/சா/6222 | திருமதி. சிவக்கொழுந்து செல்வரத்தினம் |
| 327யா/சா/6275 | திரு. ஆறுமுகம் வேலாயுதபிள்ளை |
| 328யா/சா/6281 | திரு. வேலன் முருகேசு |
| 329யா/சா/6283 | திருமதி. கனகம்மா வல்லிபுரம் |
| 330யா/சா/6308 | திரு. பொன்னையா பொன்னுத்துரை |
| 331யா/சா/6309 | திரு. நடேசு சுப்பிரமணியம் |
| 332யா/சா/6344 | திருமதி. மரியறோஸ் மரியஅருளானந்தம் |
| 333யா/சா/6349 | திரு. கந்தையா வீரசிங்கம் |
| 334யா/சா/6388 | திருமதி. கனகம்மா பரமசாமி |
| 335யா/சா/6406 | திருமதி. கனகம்மா குழந்தைவேலு |
| 336யா/சா/6420 | திருமதி. நாகம்மா கந்தசாமி |
| 337யா/சா/6430 | திரு. கணபதி மயில்வாகனம் |
| 338யா/சா/6435 | திருமதி. மோகனாம்பிகை கனகசபாவதி |
| 339யா/சா/6466 | திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு |
| 340யா/சா/6482 | திரு. சின்னவன் கதிரவேலு |
| 341யா/சா/6507 | திருமதி. குஞ்சி முத்துலிங்கம் |
| 342யா/சா/6515 | திரு. சடையன் சாணையன் |
| 343யா/சா/6531 | திரு. வெள்ளையன் கதிரன் |
| 344யா/சா/6590 | திரு. வேலன் கதிரவேலன் |
| 345யா/சா/6640 | திருமதி. செல்லம்மா மாணிக்கம் |
| 346யா/சா/6664 | திரு. பரமநாதர் செல்வராசா |
| 347யா/சா/6678 | திருமதி. செல்வதி பரமசிவம் |
| 348யா/சா/6681 | திரு. வல்லிபுரம் பாலசுந்தரம் |
| 349யா/சா/6695 | திருமதி. சரஸ்வதி இரத்தினம் |
| 350யா/சா/6718 | திருமதி. அரியமலர் எமேசன் |
| 351யா/சா/6736 | திரு. வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| 352யா/சா/6778 | திரு. பண்டாரி கந்தன் |
| 353யா/சா/6816 | திருமதி. பொன்னம்மா தாமோதரம்பிள்ளை |
| 354யா/சா/6871 | திரு. வல்லி நாகமுத்து |
| 355யா/சா/6933 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| 356யா/சா/6956 | திருமதி. இலட்சுமி வேலுப்பிள்ளை |
| 357யா/சா/7015 | திரு. நாகமுத்து இராசேந்திரம் |
| 358யா/சா/7076 | திருமதி. மதுரசிகாமணி துரைராசா |
| 359யா/சா/7085 | திருமதி. பூரணம் சின்னையா |
| 360யா/சா/7166 | திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி |
| 361யா/சா/7222 | திருமதி. குஞ்சம்மா ஆறுமுகம் |
| 362யா/சா/7229 | திருமதி. செல்லம்மா செல்வன் |
| 363யா/சா/7319 | திருமதி. நாகம்மா வேலாயுதம் |
| 364யா/சா/7326 | திரு. தாண்டவி கந்தையா |
| 365யா/சா/7340 | திருமதி. நாகமுத்து சங்கரப்பிள்ளை |
| 366யா/சா/7356 | திரு. வேலுப்பிள்ளை ஜெயரட்ணம் |
| 367யா/சா/7373 | திருமதி. விமலாதேவி பாலசுப்பிரமணியம் |
| 368யா/சா/7388 | திரு. ஐயங்கன் வாரித்தம்பி |
| 369யா/சா/7403 | திரு. கந்தையா குணபாலசிங்கம் |
| 370யா/சா/7430 | திரு. செல்வன் இராசையா |
| 371யா/சா/7433 | திரு. கணபதிப்பிள்ளை துரைராசா |

(வளரும்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்

# வாக்களித்தால் தமிழருக்குப் பயனில்லை பகிஷ்கரித்தால் நன்மைகள் பலவுண்டு!

## தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

ஸ்ரீலங்காவுக்கும் சிங்கள மக்களுக்குமான தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் வாக்களிப்பதால் தமிழ் மக்களுக்குப் பயனேதும் கிடையாது. ஆனால் இத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதால் நன்மைகள் பலவுண்டு.

தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ் மக்களைக் கோரி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேய இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே இனவாதத்தைக் கக்கி வருகிறார். தன்னை சிங்கள பௌத்த மக்களின் காவலன் என்றும் கூறி வருகிறார். அத்துடன் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் கொண்டிருக்கின்றார். தீவிர இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய என்பவற்றுடன் இறுக்கமாக ஒரு கூட்டை அவர் ஏற்படுத்தியுள்ளார். முழுக்க முழுக்க தமிழ்மக்களுக்கு எதிரான நிபந்தனைகளுக்கு இணங்கி உடன்படிக்கைகளும் செய்துள்ளார். தனது தேர்தல் விஞ்ஞாபனமான 'மஹிந்த சிந்தனையிலும்' அவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்குச் சார்பானவர் போல சில வார்த்தைகளைக் கூறிவருகிறார். ஆனாலும் ராஜபக்ஷவை விட மிகமோசமான தமிழ் விரோதக் கொள்கைகளையும் மறைமுக வேலைத் திட்டங்களையும் அவர் முன்னெடுத்து வருகிறார். ரணில் பிரதமராக இருந்தபோது இனப் பிரச்சினை தொடர்பாக எந்தவொரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாது, காலத்தை இழுத்தடித்து சர்வதேச வலைப் பின்னல் ஒன்றினூடாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கமுனைந்தவர். இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்யப் பகீரதப் பிரயத்தனம் செய்தவர்.

இன்றும் கூட இனப்பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தை தெளிவாக முன்வைக்காது ஒஸ்லோ பிரகடனம் என்றும் அதிகாரப் பரவலாக்கல் என்றும் ரணில் பூசி மெழுகி வருகிறார். தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான அவசரகாலச் சட்டத்திற்கு ஒத்துழைத்து வருபவர்.

உண்மையில் ராஜபக்ஷ, ரணில் இருவருமே அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக தமிழ் மக்களின் பிரச்சினையை பிரசார உபாயமாக வேறுபட்டவகையில் பயன்படுத்துகிறார்களே தவிர, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விருப்பமோ அல்லது தெளிவான, உறுதியான, ஒத்திசைவான எந்தவொரு கொள்கையோ, திட்டமோ இருவரிடமும் கிடையாது. அதேவேளை, தமிழர்களையும் அவர்களது போராட்ட பலத்தையும் ஒடுக்க வேண்டுமென்பதில் இருவரும் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளனர். தமது பிரச்சினைகளில் வேறுபட்டு நிற்கின்ற இருவரது கட்சிகளும் தமிழர்களுக்கெனதிரான அவசரகாலச் சட்டத்தை அமுலாக்குவதில் ஒன்றிணைந்து செயற்படுவது நல்லதோர் எடுத்துக்காட்டு.

எனவே இத்தேர்தலானது சிறிலங்காவுக்கும் சிங்கள மக்களுக்குமான ஓர் அதிகாரம் மிக்க தலைவரைத் தேர்தெடுப்பதற்கான ஒரு தேர்தலாகும். இத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எந்தப் பயனையும் அடையப்போவதில்லை. ஆனால், இத்தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்தவொரு சிங்களத் தலைவரும் நிறைவேற்ற மாட்டார்கள் என்பதையும் எவர் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என்பதனையும் இதன் மூலம் சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறமுடியும். எனவே தமிழ் மக்கள் அனைவரும் இத்தேர்தலைப் புறக்கணித்து இனத்தின் விடுதலைக்குப் பலம் சேர்ப்பதே சரியான முடிவாகும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

# மனக்குழப்பம் நீங்கி ஞானஒளி கிடைக்க நல் வழிகாட்டும் கந்தசஷ்டி விரதம்

சூரபத்மன் என்ற அசுரன் தேவர்களுக்குப் பல இன்னல்களை விளைவித்துவந்தான். அவன் மகன் பானுகோபனால் சுவர்க்கம் எரிக்கப்பட்டு தேவர்கள் எல்லோரும் சிறைப்படுத்தப்பட்டனர். இத்துன்பங்கள் நீங்கும் பொருட்டு தேவர்கள் கைலைக்குச் சென்று சிவனைத் துதித்து வேண்டினார்கள்.

இவர்களின் முறையீட்டைக் கேட்டு திருவுள்ளம் இரங்கிய பெருமான் தமக்கு இயல்பாகவே உரிய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் முதலிய ஐந்து முகங்களோடு அதோமுகமொன்றும் கொண்டு ஆறுதிருமுகங்களோடு ஆறுதீப் பொறிகளைத் தோற்றுவித்தார். இந்த ஆறு

## ஞானக்கதிர்

பொறிகளும் ஆறு குழந்தைகளாகின. தேவி அந்த ஆறு குழந்தைகளையும் எடுத்து ஒன்றாகச் சேர்த்து அணைத்தார். அப்பொழுது முருகப்பெருமான் ஓர் உருவமாகத் திரு அவதாரம் செய்தார். அதனைக் கண்ட உமா தேவியார் மகிழ்ந்து அக்குழந்தைக்கு கந்தன் எனப் பெயரிட்டார்.

கந்தப் பெருமான், ஆறுமுகன், ஆறுபடை வீடுடையான், குமரன், முருகன், தேவ சேனாதி பதி, வேலன், சுப்பிரமணியன், சண்முகன், சுவாமிநாதன் என பல பெயர்களுடன் அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

முருகப் பெருமானை நினைத்து அனுஷ்டிக்கும் விரதங்களாக வார விரதங்கள், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என்பன காணப்படுகின்றன. இவற்றுள் சிறப்பானதாக கந்த சஷ்டி விரதம் காணப்படுன்றது. கந்தப் பெருமான் தனது திருஷ்டியின் நோக்கினை சிவனிடமிருந்து அறிந்துகொண்ட பின்னர் தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்களை அழிக்க வேலாயுதமூர்த்தி புறப்பட்டார். தாரகாசுரன், கிரவுஞ்சன் ஆகியோரை அழித்து திருசெய்லூரை வந்தடைந்து அங்கே சிவனிடம் பாசுபதம் பெற்றார். பின்னர் திருச்செந்தூருக்கு எழுந்தருளி வீரவாகுவை சூரபத்மனிடம் தூதனுப்பி சிறையிடப்பட்டுள்ள தேவர்களை விடுவிக்கும்படி கூறினார்.

சூரபத்மனோ அதைக் கேட்காமல் ஆணவமாகப் பேசினான். இதனால் கந்தப் பெருமான் சூரனுடன் போரிடப் புறப்பட்டார்.

முதல் நாள் போரில் சூரபத்மன் மகன் பானுகோபன் போரிடவந்து தோல்விகண்டு திரும்பினான். அடுத்து சூரபத்மனும் சிங்கமுகாசுரன் அதிசூரனும் தரகாசுரன் மகன் அசுரேந்திரனும் போரிட்டார்கள். வீரபாகு தேவர் அசுரேந்திரனைக் கொன்றார். பின்னர் சூரபத்மனின் இன்னொரு மகனான இரணியனையும் போரிடுமாறு சூரபத்மன் அழைத்தபோது இரணியன் எத்தனையோ அறிவுரைகள் கூறியும் சூரபத்மன் ஏற்கவில்லை.

எனினும் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற திருவாக்கை ஏற்று இரணியன் போரிடச் சென்றான். போரில் தோற்றதும் தன் பெற்றோருக்கு அந்திமக் கிரியைகள் செய்ய உயிரோடு இருக்கவேண்டும் என நினைத்து மாயா சக்தியில் மீனுருப்பெற்று மறைந்தான்.

சிங்கமுகாசுரன் ஆயிரம் முகம் கொண்டவன். அவன் தேவாதியரையும் வீரபாகுவையும் தன் தாய் கொடுத்த பாசத்தைவிட்டு கட்டிக் கடலிலே இட்டான். சுப்பிரமணியனுடன் வந்த படைகள் அனைத்தையும் கோர ரூபம் கொண்டு விழுங்கினான். இறுதியில் குமரக் கடவுளின் வேலாயுதத்தால் உயிரிழந்தான்.

தொடர்ந்து சூரபத்மன் மிகவும் திறமையாகப் போரிட்டான். சூரபத்மன் எடுத்த மாமர உருவை வேலாயுதத்தால் இரண்டாகப் பிளக்க அவன் பெற்ற வரத்தால் மீண்டும் நல்லுருப் பெற்றான்.

அவனை முருகப் பெருமான் தனது வேலாயுதத்தால் இரு பிளவாக்க அங்கிருந்து சேவலும், மயிலும் வெளிப்பட்டன. முருகப் பெருமான் மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் பிடித்து தேவர்களை சிறைமீட்டார். இவ்வாறு முருகப் பெருமான் சூரபத்மனை அழித்து உலகுக்கு அருள் புரிந்த நன்நாள் கந்தசஷ்டி நாளாகும்.



முருகபக்தர்கள் கட்டாயம் கடைப்பிடிக்கும் விரதங்களில் சஷ்டி விரதமும் ஒன்றாகும். ஐப்பசிமாதம் வளர்பிறையில் சஷ்டியன்று விரதம் இருந்து வழிபடுவார்கள். ஒவ்வொரு மாதமும் வரும் சஷ்டியன்று விரதமிருப்பவர்களும் உண்டு. கந்தசஷ்டி அன்று உண்ணாநோன்பு இருப்பது சிறப்பானதாகும்.

ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின்னர் வரும் பிரதமை முதல் சஷ்டி வரையிலான ஆறு நாள்களைக் கொண்ட விரதமே கந்தசஷ்டி விரதமாகும். வளர்பிறை பிரதமை அன்று நீராடி நித்திய அனுட்டானங்களைச் செய்து முருகன் ஆலயம் சென்று விரதமிருப்பார்கள்.

ஆறு நாள்களும் உபவாசம், மறுநாள் பாரணை. உபவாச தினங்களில் தீர்த்தமாகிய பானகம் மாத்திரம் அருந்துவர். உபவாசம் இருக்க இயலாதவர்கள் இரவு பால், பழம் உண்ணலாம். அதுவும் இயலாதவர்கள் முதல் ஐந்து நாள்களும் மதியம் ஒரு பொழுது உணவு உண்டு இறதிநாள் உபவாசம் இருந்து மறுநாள் பாரணை செய்வர்.

முதல்வருடம் எவ்வாறு விரதம் அனுஷ்டித்தோமோ அதேபோலவே தொடர்ந்து ஆறுவருடம் அல்லது பன்னிரண்டு வருடம் விரதம் அனுஷ்டிக்கவேண்டும். கந்தசஷ்டி விரத காலத்தில் முருக ஜெபம், கந்த புராணம் படித்தல், கேட்டல் முதலியன நற்பலன்களை அளிக்கும்.

### கங்கா

சஷ்டி விரதம் இருப்பதால் அகப்பை என்னும் கருப்பையில் குழந்தைப்பாக்கியம் கிடைக்கும் என்பது மரபாகும். இது மருவி ''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என வழக்கானது குழந்தைப் பேறு இல் லாத தம்பதியினர் சஷ்டி விரதம் இருப்பது மிகவும் பயனுடையதாகும்.

முருகப்பெருமான் சூரனை அழித்து ஒழித்ததுடன் உலகின் அதர்மத்தையும் ஒழித்து தர்மத்தை நிலைபெறச் செய்தார்.

ஆறுநாள்கள் இடம்பெற்ற போரும் ஆறு பகையை வெல்தலைக் குறிக்கும். இதன் மூலம் முப்பொருள் உண்மையை விளக்குதலே சஷ்டி விரதத்தின் நோக்கமாகும்.

கந்தசஷ்டி காலத்தில் கந்தன் புகழைப் பாடி கந்தன் கழல் பணிந்தால் அவன் அருளால் லோபம், காமம், குரோதம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகளையும் வெல்ல முடியும். மனக்குழப்பம் நீங்கி ஞான ஒளி பெறும். மனத்துய்மையும் வேண்டும் வரங்களும் கிடைக்கும்.

## முருகனுக்கு ஆறு நாள்கள்

முருக பக்தர்கள் கட்டாயம் கடைப்பிடிக் கும் விரதங்களில் சஷ்டி விரதமும் ஒன்றாகும். விநாயகர் சதுர்த்தசிபோல் முருகனுக்கு கந்தசஷ்டி குறிப்பிடத்தக்கது.முருகப் பெருமான் சூரபத்மனை அழித்து உலகுக்கு அருள்புரிந்த நன்னாள் கந்தசஷ்டி நாளாகும்.

ஐப்பசி மாதம் வளர்பிறையில் சஷ்டியன்று விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபடுவது ஒவ்வொரு மாதமும் வரும் சஷ்டியன்று விரதமிருப்பவர்களும் உண்டு. அன்று உண்ணா நோன்பும் பலர் இருப்பர்.கந்தசஷ்யன்று உண்ணாநோன்பு இருப்பது சிறப்பாகும்.அமாவாசைக்கு அடுத்த ஆறு நாள்களிலும் காலையில் நீராடி தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து இரவினில் தம்பம், விம்பம், கும்பங்களில் முருகனைப் பூஜித்து வெல்லம் சேர்த்து நெய்யில் அமைத்த மோதகத்தை நிவேதித்தல் வேண்டும்.

அன்று திருமுருகாற்றுப்படை, கந்தசஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தரந்தாதி, கந்தர்கலி வெண்பா ஆகியனவற்றை ஆசாரத்துடன் ஓதி கந்தபுராணம் படித்து வருவர்.

ஏழாம் நாள் அடியார்களுக்கு அன்னம் அளித்து பாரயணம் செய்தல் வேண்டும். எல்லா முருகன் கோயில்களில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படும். இலட்ச அர்ச்சனைகளும் நடக்கும்.

சூரபத்மனை அழித்த நிகழ்ச்சியினை நினைவூட்ட சூரசம்ஹாரம் எல்லா முருகன் கோயில்களிலும் நடைபெறும்.

*- நன்றி : முருகன் புகழ்மாலை*



சாவகச்சேரி கோயில்குடியிருப்பு சந்தன முதலிச்சிப்புலம் முருகமூர்த்தி ஆலய தேர் உற்சவத்தில் தென்மராட்சியின் பழம்பெரும் நாதஸ்வரக் கலைஞர் கலாபூஷணம் மு.பஞ்சாபிகேசன் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய மகோற்சவ குரு மற்றும் ஆலய பரிபாலன சபையினருடன் கலாபூஷணம் மு.பஞ்சாபிகேசன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(எ-117)

# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

வலி.தெற்கு, நவ.4

இணுவில், திருவூர் ஒன்றிய அறிவாலயத்தில் தொழில் வழிகாட்டல் தொடர்பான கருத்தரங்கொன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அறிவாலயத் தலைவர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆசியுரை வழங்குவார்.

ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் க.விக்னேஷ், தொழில்நுட்பக் கல்லூரி தொழில் வழிகாட்டல் பொறுப்பாளர் செல்வி காயத்திரி செல்வரத்தினம், திறந்த பல்கலைக்கழக இயக்குநர் எஸ்.என்.ஞானேந்திரன், உயர் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் கே.கதிரமலை, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சபா. ஜெயராசா, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ப.ஆனந்த மகேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (3-152)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜீவானந்தம் விஜிதா தம்பதியரின்
செல்வப்புதல்வி **ஜீ.கோபிஷா**
(யாழ்.மத்திய கல்லூரி)

2005ஆம்ஆண்டு 5ஆம் தர
புலமைப்பரிசில் பரீட்சையில்
சிறப்பாகச் சித்தியடைந்த
கோபிஷாவை பல்கலையும் கற்று
வாழ்வில் உயர்ந்திட
வாழ்த்துகின்றோம்.

இராசரத்தினம் குடும்பத்தினர்.

219,கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(42513) (26-45-47)

**Jaffna Study Center of Colombo Theological Seminary**
கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ்.நிலையம்
*கிறிஸ்தவ ஊழியர் பயிற்சி நெறி*

I கொரிந்தியர்
(I CORINTHIANS)

விரிவுரையாளர்:- **Pas.**சந்திரசேகரன்
திகதி:- 7-11 நவம்பர் 2005 காலை 9-2 மணி வரை
இடம்:- C.T.S-Jaffna Center,
32/1, விதானையார் ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்.நகர். (42521)(26-45-47)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1942 - 10 - 14



மறைவு 2004 - 11 - 15

அமரர் **பரமன் மார்க்கண்டன்**
(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்)
திதி:2005-11-04

ஆண்டொன்று பறந்தோடிப் போயினவே
மீண்டும் ஒருமுறை உம்முகம் காட்டீரோ?
உம்மையிழந்த கவலையினால் தினமும் கலங்குகின்றோம்.
இன்று உம்மை நினைத்து அஞ்சலி செய்கிறோம்.

மஹாத்மா வீதி,
நெல்லியடி,
கரவெட்டி. (42345) (24-26-45-47) - குடும்பத்தினர்.

## ஓராண்டு சிரார்த்த தினம்

அன்னை மடியில் 30 - 06 - 1946



ஆண்டவன் அடியில் 13 - 11 - 2004

எமது குடும்பத்தலைவர்
அமரர் **மாணிக்கவாசகம் கணேசமூர்த்தி**
(செல்லத்துரை)

*எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு சிரார்த்த தினம் பார்த்திப வருடம் ஐப்பசி மாதம் 18 ஆம் நாள் இன்று [04.11.2005] வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நிகழவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஊறணி, வல்வெட்டித்துறை.
மிதுஷன் மிதிவண்டி விற்பனை நிலையம்,
வேம்படி, வல்வெட்டித்துறை.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(42342) (32-15-45)

# பகுப்பாய்வுப் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.4

கரித்தாஸ் கியூடெக் நிறுவன உயிர்ப்பூட்டல் குழு ஊக்குவிப்பாளர்களுக்கான சமூகப் பகுப்பாய்வுப் பயிற்சி நாளை சனிக்கிழமை அல்லைப்பிட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சியில் அல்லைப்பிட்டி பகுதியிலுள்ள விவசாய மகளிர், இளையோர், மக்கள் பிரதிநிதிகளும் தீவக உயிர் பூட்டல் குழுப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர் என உயிர்ப்பூட்டல் குழு இணைப்பாளர் ஜோசப் பாலா தெரிவித்துள்ளார். (த-190)

# கந்தசஷ்டி நிகழ்வுகள்

நவாலி,நவ.4

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய கந்தசஷ்டி விரதம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 6 நாள்கள் நடைபெறவுள்ளது.

கந்தசஷ்டி காலத்தில் தினமும் மாலை 4 மணிக்கு சண்முக அர்ச்சனை நடைபெற்று முருகப் பெருமான் வீதியுலா வருவார்.

எதிர்வரும் 7ஆம் திகதி சூரசங்காரமும் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெறும். (ஒ-100-203)

* * *

சுழிபுரம்,நவ.4

பண்ணாகம், விசவத்தனை முருகமூர்த்தி ஆலய கந்தசஷ்டிப் பெருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 6 நாள்கள் நடைபெறவுள்ளது.

கந்தசஷ்டி காலத்தில் தினமும் முற்பகலில் முருகப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும் நண்பகல் சண்முக அர்ச்சனையும் தொடர்ந்து கந்தர் அனுபூதி ஓதல், கந்தபுராண யுத்தகாண்ட புராண பாடல், சுவாமி வீதியுலா வருதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

6ஆம் நாளன்று சூரன்போரும் மறுநாள் திருக்கல்யாணமும் நடைபெறும். (ஓ-28-203)

* * *

வலி.தென்மேற்கு,நவ.4

பிரான்பற்று, பெரியவளவு முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 7ஆம் திகதி சூரசங்காரம் நடைபெறும். (ஓ-135)

* * *

யாழ்ப்பாணம் நவ.04

யாழ்ப்பாணம், திருவண்ணை நகர் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டித் திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகித் தொடர்ந்து 6 தினங்கள் நடைபெறும்.

காலை 7.15 மணிக்கு ஸ்நபனாபிஷேகம், விசேடபூசை என்பன இடம்பெறும்.

பிற்பகல் 3.30 மணிக்கு மாலை நேரப் பூசைகள் ஆரம்பமாகும். ஷண்முகார்ச்சனை, வசந்தமண்டபப்பூசை என்பன இடம்பெறும்.

பிற்பகல் 4.15 மணிக்கு 'முருகன் பெருமை' என்னும் தலைப்பில் பிரம்ம்ஸ்ரீ கு.சிவராஜசர்மாவின் சொற்பொழிவு நடைபெறும்.(3-204)

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மத்தியூஸ் ஜெயலக்ஷ்மன்
14, சென்ற் ஜேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
- வழக்காளி

வழ இல:- D/565

எதிர்
மத்தியூஸ் ஜெயலக்ஷ்மன்
பெண் ஆன் ஏஞ்சலா
19, பீச்றோட், குருநகர்,
யாழ்ப்பாணம்.
- எதிராளி

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் 2005ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 29ஆம் திகதி வழக்காளியும், வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் சமுகமாக இருக்கவும், ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ, ஆவனம் வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் பரிசீலித்து, வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு, வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 03.05.2003 இல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வன்மமாக உறவறுத்து வாழ்ந்து வருகிறார் என்ற காரணத்துக்காக ரத்துச்செய்து வெற்றும் வெறிதுமாகுமென இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

இந்தப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்குப் பதிற் சேவகமாக சேவிக்கப்பட்டு மூன்று மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எதுவும் அளிக்காத பட்சத்தில் குறித்த பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2005ஆம்ஆண்டு புரட்டாதி மாதம் 29 ஆம் திகதி.

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி,
பவானி சற்குணராசா.

இ.த. விக்னராசா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறிமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(42505) (26-45-47)

## ஈராண்டு நினைவலைகள்

ஓரடி மண்ணில் 05 - 11 - 1930



ஆறடி மண்ணில் 26 - 11 - 2003

அமரர் **குழந்தை தர்மலிங்கம்**
*திதி : திருதியை 18.10.2005*

எம்மையென்றும் இன்பமாய் வைத்தாய்
என்றுமே இன்பமாய் வாழ்ந்தீர்- தெய்வமே
தாமில்லா வீடது வீடல்ல - ஐயா
எமக்கென குறையேதும் வைக்காத
உத்தமரே! உமை நினைந்து
தினந்தினம் ஏங்குகிறோம்.......... தெய்வமே!

பொன் கந்தையா ச.ச.நி.
சத்திரங்கை,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்.

(42520) (26-45-47)

## முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



## அமரர் செல்வரட்ணம் சுகிர்தன் (திவாகர்)

*அன்புடையீர்!*

*(16.11.2004)செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் செல்வரட்ணம் சுகிர்தன் (திவாகர்) அவர்களின் ஆண்டுத்திவசம் எமது இல்லத்தில் நாளை (05.11.2005) சனிக்கிழமை அன்று நடைபெறவுள்ளதால் இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

இல.223, சில்வா வீதி, வட்டக்கச்சி,கிளிநொச்சி. (ஞ-46066) (39-26-45-47) குடும்பத்தினர்.

# ஈராக் தலைநகரில் குண்டுத் தாக்குதல்கள்; 35 பேர் பலி; 100இற்கும் மேற்பட்டோர் காயம்

பக்தாத், நவ.4

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற இரண்டு குண்டுத்தாக்குதல்களில் குறைந்தது 35 பேர் உயிரிழந்தனர். மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பக்தாத்தின் தெற்கிலுள்ள ஷியா முஸ்லிம்கள் அதிகம் வாழும் முக்கிய நகரப்பகுதியில் பஸ் ஒன்றினுள் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 24 பேர் உயிரிழந்தனர். மேலும் 65 பேர் காயமடைந்தனர். புனித ரமழானை முன்னிட்டு பெருமளவு மக்கள் கூடியிருந்த சந்தைப் பகுதிக்கு வெளிப்புறமாக நேற்றுமுன்தினம் மாலை இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. முஸாயிப் என்ற நகரத்தின் மத்திய பகுதியில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலையடுத்து அந்தப்பகுதி முழுவதும் அமெரிக்கப் படைகள் ஈராக் படையினருடன் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சந்தேகத்தில் சிலரைக் கைதுசெய்துள்ளோம் என அமெ ரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பக்தாத்தின் இன்னொரு இடத்தில் நடந்த குண்டுவெடிப்பில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர். குண்டுகள் சில தொடராக அந்தப்பகுதியில் வெடித்ததால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்ததுடன் அவை தீப்பற்றியும் எரிந்தன.

இந்தத் தாக்குதல்கள் மக்களின் இயல்பு நிலையைக் குலைக்கும் நோக்கத்துடன் தீவிரவாதிகள் மேற்கொண்டுள்ளனர் எனவும் மக்களை அச்சத்துக்குள்ளாக்கி வீடுகளுக்குள் முடங்கியிருக்கச்செய்யும் வகையில் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன என அமெரிக்க படைகளின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, பக்தாத்தின் மேற்குப் பகுதியில் இரண்டு அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் விபத்துக்குள்ளாகியதில் 6 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவில்லையென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். உள்ளூர் மக்களின் தகவலின்படி ஒரு ஹெலிக்கொப்டரை தீவிரவாதிகள் சுட்டுவீழ்த்தினர் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் படைகள் மீது அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வீதியோரக் குண்டுத் தாக்குதல்களைத் தடுத்துநிறுத்த விசேட நடைமுறைகளைப் பின்பற்ற தீர்மானித்திருக்கிறோம் என அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (க)



ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின்போது ஏற்பட்ட பெரும் புகைமண்டலத்தை அமெரிக்க படை வீரர் ஒருவர் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

## நிலக்கரிச் சுரங்க விபத்து சீனாவில் 17 பேர் பலி!

பீஜிங், நவ.4

சீனாவில் இரண்டு நிலக்கரிச் சுரங்கங்களில் ஏற்பட்ட வாயுக்கசிவு விபத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் யான்பிங்க் நகரில் உள்ள இரண்டு நிலக்கரிச் சுரங்கங்களில் இந்த விபத்து ஏற்பட்டது. இரண்டும் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்தவை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலாவது சுரங்கத்தில் 13 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். சுரங்கத்திற்குள் வாயுக்கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் மூச்சுத் திணறி இறந்தனர். இவர்களை மீட்க 6 பேர் கொண்ட மீட்புக் குழு அனுப்பப்பட்டது.

ஆனால், மீட்புக்குழுவிலும் 2 பேர் உயிரிழந்தனர். வாயுக்கசிவு காரணமாக உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த 2 தொழிலாளர்களும் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கபடுகிறது. (க)

உலக அரங்கில்

## இந்துக்களை புண்படுத்தும் முத்திரை: பிரி. தபால்துறை மன்னிப்பு கேட்டது

பிரிட்டன் தபால் துறையால் வெளியிடப்பட்டிருக்கும் முத்திரையில் உள்ள படம் தொடர்பாக இந்து அமைப்பு ஒன்றிடம் பிரிட்டன் தபால் துறை மன்னிப்புக்கேட்டுள்ளது. எனினும், முத்திரையை திரும்பப் பெறப்போவதில்லையெனவும் அது அறிவித்துள்ளது.

பிரிட்டனின் தபால்துறையான 'ரோயல் மெயில்' வெளியிட்ட முத்திரையில் ஒரு இந்து சமயத் தம்பதியினர் குழந்தை யேசுவை வழிபடுவது போன்ற தோற்றத்தையளிக்கும் பழங்கால ஓவியம் ஒன்றை தபால் முத்திரையில் வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக பிரிட்டனில் உள்ள இந்து அமைப்புகள் கண்டனம் தெரிவித்தன. இந்து அமைப்பு ஒன்றின் முக்கியஸ்தர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த முத்திரை மக்களின் உணர்வுகளுக்கு எதிரானது. இந்தியாவில் கிறிஸ்தவ மதப் பிரசாரகங்களால் இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படும் உணர்ச்சிபூர்வமான பிரச்சினையை இது நினைவுபடுத்துகிறது என்றார்.

இதுகுறித்து விளக்கமளித்த 'ரோயல் மெயில்' இந்த முத்திரை எதிர்பாராதவிதமாக ஏற்படுத்தியிருக்கும் மனக்கசப்புகளுக்காக வருந்துவதாகவும் எனினும், இந்த முத்திரையைத் திரும்பப் பெறப்போவதில்லை. தபால் தலையில் இடம்பெற்ற படம் மும்பையில் 17ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஒரு ஓவியத்திலிருந்து பெறப்பட்ட கலைப் படைப்பு எனத் தெரிவித்துள்ளது. (க)

## பாக். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் லண்டன் செல்ல முஷாரப் ஒத்துழைப்பு

இஸ்லாமாபாத், நவ.4

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பும், அவரது மகனும் லண்டன் செல்ல பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அனுமதி வழங்கியுள்ளார் என பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷிட் தெரிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு நவாஷ் ஷெரிப் பிரதமராக இருந்தபோது பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக இருந்தார் முஷாரப். திடீரென அவரை இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து அகற்றி புதிய இராணுவத் தளபதியை நியமித்தார் நவாஸ் ஷெரிப்.

எனினும், இராணுவத்தில் இருந்த முஷாரப் ஆதரவாளர்கள் புரட்சியில் இறங்கினர். நவாஸ் ஷெரீப், அவரது குடும்பத்தினர் புதிய இராணுவத் தளபதி என அனைவரையும் சிறைப்பிடித்தனர். இதன் பின்னர் பாகிஸ்தான் தீவிரவாத எதிர்ப்பு நீதிமன்றில் நவாஸ் ஷெரீப்புக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் தஞ்சம் அளிக்க சவூதி அரேபிய அரசு முன்வந்தது. பின்னர் அவர்கள் அனைவரும் சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். தற்போது அவர்கள் அந்நாட்டில் உள்ள ஜெட்டா நகரில் வசித்து வருகின்றனர்.

நவாஸ் ஷெரீப்பின் கடவுச்சீட்டு காலாவதியாகிவிட்டது. அதனைப் புதுப்பித்துத் தரும்படி பாகிஸ்தான் தூதரகத்தில் அவர் முறையிட்டும் பதில் கிடைக்கவில்லை. இந்நிலையில் அவரது மகனுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து மருத்துவ உதவி பெற லண்டன் செல்ல அனுமதிக்க வேண்டும் என பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதற்கு முஷாரப் அனுமதி அளித்துள்ளார்.

இதுகுறித்து பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் ஷேக் ரஷீட் அகமது தெரிவித்ததாவது:-

நவாஸ் ஷெரீப்பும், அவரது மகன் உசேன் நவாசும் மருத்துவ சிகிச்சை பெற லண்டன் செல்ல ஜனாதிபதி முஷாரப் மனிதாபிமான அடிப்படையில் அனுமதி அளித்துள்ளார். இதன்மூலம் ஜனாதிபதி முஷாரப்புக்கு தனிப்பட்ட முறையில் யார் மீதும் விரோதம் கிடையாது என்பது தெளிவாகியுள்ளது. இது குறித்து சவூதி அரேபிய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவும் அவர் கூறினார். (க)

## அல்கெய்டா முக்கிய தீவிரவாதி ஆப்கான் சிறையிலிருந்து தப்பினார்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவ கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவந்த சிறை ஒன்றில் இருந்து அல்கெய்டா தீவிரவாதி ஒருவர் தப்பி ஓடியுள்ளார். அவரது மாயம் அமெரிக்க இராணுவத்துக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

உமர் அல் பாரூக் என்ற அந்த அல் கெய்டா தீவிரவாதி ஒஸாமா பின்லேடனுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று கூறப்படு கிறது. இவர் ஆப்கானிஸ்தானில் உள்ள பர்காம் நகரில் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் சிறையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

கடந்த ஜூலை 10ஆம் திகதி முதல் இவரைக் காணவில்லை என அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனும் உறுதிப்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

அவர் என்ன ஆனார் என்பது புரியாத புதிராக உள்ளது. உமரும் அவருடன் இருந்த மூன்று பேரும் கூட்டாகச் சிறை முகாமில் இருந்து தப்பி ஓடிவிட்டனர் எனவும், அவர்கள் மீண்டும் கைதுசெய்யப்பட்டால் நீதிமன்றத்தில் ஒப்படைப்போம் என்றார். ஆனால், உமரை அமெரிக்க இராணுவத்தினர் விரைவில் கண்டுபிடித்துவிடுவார்கள் என்று இராணுவ வழக்கறிஞர் ஆலன் ஜெ.டிரைவூர் தெரிவித்தார்.

காணாமல்போன உமருக்கு சிறை யில் சித்திரவதை நேர்ந்ததாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் கடந்த 2002ஆம் ஆண்டு 'ரைம்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தாம் மேற்கொள்ளவிருந்த தாக்குதல் திட் டங்கள் குறித்து தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ரகசியச் சிறையில் அல் கெய்டா இயக்க முக்கிய தீவிரவாதிகளை மறைத்து வைத்து விசாரணை நடத்திவருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## காஷ்மீரின் புதிய முதலமைச்சராக குலாம் நபி ஆசாத் பதவியேற்றார்

காஷ்மீர், நவ.4

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதலமைச்சராகக் குலாம்நபிஆசாத் நேற்று முன்தினம் மாலை பதவியேற்றார். அவருடன் 12 அமைச்சர்களும் பதவியேற்றனர். பதவியேற்பு நடைபெற்ற பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

30 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் காஷ்மீரின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப் பயணிகளால் பெரிதும் விரும்பப்படும் தல் ஏரியின் கரையில் உள்ள சர்வதேச மாநாட்டு அரங்கில் பதவியேற்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. மாநில ஆளுநர் எஸ்.கே.சின்ஹா பதவிப் பிரமானத்தையும் ரகசியக் காப்பு பிரமாணத்தையும் செய்து வைத்தார்.

முன்னைய மாநில அரசில் துணை முதலமைச்சராக இருந்த மங்கத்ராம் சர்மா தற்போது மத்திய அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். துணை முதலமைச்சர் பதவிக்கு மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த முசாபர் ஹுசைன் பெய்க் நியமிக்கப்படவுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநில பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவரான பீர்சாதா முகம்மத் சய்யீதும் மத்திய அமைச்சராகப் பதவி யேற்றுள்ளார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய முப்தி முகம்மத் சய்யீத், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான பாரூக் அப்துல்லா, மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல், காங்கிரஸ் பொதுச் செயலாளரும் காஷ்மீர் மாநில அரசியல் விவகாரங்களுக்குக் கட்சியில் பொறுப்பு வகிப்பவருமான அம்பிகா சோனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பதவியேற்பு நிகழ்வு நடைபெறுவதற்கு முன்னதாக காஷ்மீரில் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் புதிய முதலமைச்சராக குலாம் நபி ஆசாத் நேற்றுமுன் தினம் காஷ்மீர் ஆளுநர் சிங்ஹா முன்னிலையில் பதவியேற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை எச்சரிக்கை

லண்டனில் தீவரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தும் அபாயம் இருப்பதாக லண்டன் புலனாய்வுத்துறையினர் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என லண்டன் நகர பொலிஸ் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை 7ஆம் திகதி லண்டன் சுரங்க ரயில்களிலும், பஸ்களிலும் தீவிரவாதிகள் தொடர் குண்டுத்தாக்குதல்களை நடத்தினர்.

இந்த நிலையில் லண்டன் நகர பொலிஸ் ஆணையாளர் இயன் பிளேர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய தகவலில் தெரிவித்திருப்பதாவது,

எதிர்வரும் மாதங்களில் பல்வேறு தீவிரவாதக் குழுக்கள் பிரிட்டனில் தாக்குதல் நடத்தலாம் என்று உளவுத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சில வாரங்களுக்கு முன்னர் வெடிகுண்டுகள் சில இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால், குறிப்பிட்ட நேரத்தில் அவை வெடிக்காமல் செயலிழந்துவிட்டன. இதன்மூலம் தீவிரவாதிகளின் இரண்டாவது தாக்குதல் முயற்சியும் செயல் இழந்து போய்விட்டது. இருப்பினும் மீண்டும் அதே போன்ற முயற்சியில் இறங்க தீவிரவாதிகள் தொடர்ந்து திட்டமிட்டு வருகின்றனர்.

-என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (க)




# வலி.தெற்குப் பிரதேசசபை நடத்திய வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு,நவ.4

வலிகாமம் தெற்கு பிரதேசசபையினரால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, சித்திரப்போட்டி என்பவற்றின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கட்டுரை போட்டி**

**ஆரம்பபிரிவு:** கு.டிலானி (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), சி.லதாயினி (இராமநாதன் கல்லூரி), த.தனுசா (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை).

**கீழ்ப்பிரிவு:** ஜெ.துளசிகா (இணுவில் மத்திய கல்லூரி), வே.பிரசில்லா (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை), க.நிவேதா (இணுவில் மத்திய கல்லூரி).

**மத்தியபிரிவு:** செ.தேனுசா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), த.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி), த.வைஷ்ணா (ஸ்கந்தவரோதய கல்லூரி).

**மேற்பிரிவு:** க.சத்தியா (இராமநாதன் கல்லூரி), ம.ஜெயராணி (இணுவில் மத்திய கல்லூரி), ச.ஜலஜா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**பேச்சுப்போட்டி**

**ஆரம்பப்பிரிவு:** செ.தக்ஷாயினி (ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை), த.யன்சிகா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), வி.பிரணவி (சங்குவேலி அ.த.க. பாடசாலை).

**கீழ்பிரிவு:** க.வசீகரன் (இணுவில் மத்திய கல்லூரி), ச.சிவதீபா (இராமநாதன் கல்லூரி), ப.கோவேழன் (ஸ்கந்தவரோதய கல்லூரி).

**மத்திய பிரிவு:** சி.சிந்து (இணுவில் மத்திய கல்லூரி), வ.கலைவாணன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இ.சாளினி (தாவடி இந்து த.க.பாடசாலை).

**மேற்பிரிவு :** தி.கபில்ராஜ் (ஸ்கந்தரோதயக் கல்லூரி), ச.வாகீசன் (இணுவில் மத்திய கல்லூரி).

**சித்திரப்போட்டி**

**ஆரம்ப பிரிவு :** பி.சேவியர் அன்ரன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி.), லைனஸ் சூசைதாசன் (சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை), இ.புவிராஜ் (தாவடி இந்து த.க. பாடசாலை).

**கீழ்ப்பிரிவு:** வே.கிறிஸ்ரினா (ஏழாலை சைவ மகாஜனக் கல்லூரி), ச.சத்தியபாலசர்மா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), த.மதுசியா (இராமநாதன் கல்லூரி).

**மத்திய பிரிவு:** யோ.சிவேந்திரன் (இணுவில் மத்திய கல்லூரி), ச.அர்ச்சனா (இணுவில் மத்திய கல்லூரி), அ.ராஜிதன் (உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்).

**மேற்பிரிவு:** ஸ்ரீ.வாகீசன் (இணுவில் மத்திய கல்லூரி), தே.அகிலன் (இணுவில் மத்திய கல்லூரி), சி.சிவகரன் (இணுவில் மத்திய கல்லூரி).

(152-203)

## 'கொல் ஈனுங் கொற்றம்' என்னும் கூத்துருவ நாடகம் கைலாசபதி அரங்கில்

யாழ்திருமறைக் கலாமன்றத்தின் 40ஆவது ஆண்டின் நிறைவையொட்டி சிறப்புத் தயாரிப்பாகிய 'கொல் ஈனுங் கொற்றம்' என்னும் கூத்துருவ நாடகம் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஆதரவுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. ஈழத்தின் பல்வேறு பிரதேச கூத்து மரபுகளையும் ஒன்றிணைந்து புதிய வடிவத்தில் தயாரிக்கப்பட்ட இந்த நாடகம் யாழ்ப்பாணம் உட்பட வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பரவலாக மேடையேற்றப்பட்டு அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இக்கூத்துரு நாடகத்தினை யாழ்.திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் எஸ். யோண்சன் ராஜ்குமார் எழுதி நெறியாள்கை செய்துள்ளார். (த-190)


**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)**

**தேவை**

சுவிஸ்கன் கைக்கடிகாரங்கள் - விற்பனை பிரதிநிதி

எமது சமாசம், சுவிஸ்நாட்டில் இருந்து விரைவில் இங்கு தருவிக்கவுள்ள சர்வதேச தரம்வாய்ந்த சுவிஸ்கன் கைக்கடி காரங்களை (SWISKAN WATCHES) சந்தைப்படுத்துவதற்காக விற்பனைப் பிரதிநிதி ஒருவருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் சந்தைப்படுத்தல்/ வர்த்தகம் தொடர்பான பாடங்களில் சித்திபெற்ற பட்டதாரியாக இருப்பதுடன், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன், தகைமைச்சான்று களின் பிரதிகளையும் இணைத்து எதிர்வரும் 15-11-2005க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகத் *தலைவர், யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்.**

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-40075)(26-11-17-42)



**நல்லூர் லயன்ஸ் கழகம்**

**நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்துடன் இணைந்து வழங்கும்**

**இலவச மருத்துவ முகாம்**

**இடம் : நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக் நிலையம்**

**காலம் : 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 8.30 மணி**

மேற்படி முகாமில் கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், நீரழிவு நோய்ப்பரிசோதனை, இரத்த அழுத்தப்பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படும்.

தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்
IIS City Campus, Jaffna

விளம்பர அனுசரணை :

**R.G. STORES**

**Dealers of Fancy Goods, Stationary, Presentation Items & Needle work Items**
**54, Racca Road, Jaffna.**


<u>ஜனாதிபதித் தேர்தல் வாக்குச்சீட்டில்</u>

# இலக்கம் அல்லது புள்ளடி; இரண்டும் இட்டால் செல்லாது

## யாழ். உதவி தேர்தல் ஆணையாளர் விளக்கம்

ஜனாதிபதித் தேர்தலில் தமது வாக்குகளைச் செலுத்தும் வாக்காளர் தமக்கு விருப்பமான வேட்பாளரது சின்னத்துக்கு அருகில் புள்ளடி அல்லது 1 என்ற இலக்கத்தை மட்டும் எழுதவேண்டும். அப்படி புள்ளடியையும் இலக்கங்களையும் குறிப்பிட்டால் அவ்வாக்கு நிராகரிக்கப்படும் என யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் உரை நிகழ்த்தியபோது தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகச் சேவையாற்றத் தெரிவாகியுள்ளோருக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த 31ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து விளக்கம் அளித்த யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் பின்வருமாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட உள்ளவர்களின் நியமனக் கடிதங்கள் அவர்கள் கடமைபுரியும் திணைக் களங்களுக்கு அவர்களது பெயர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். எனினும், அவர்கள் எந்த வாக்குச் சாவடியில் சேவைபுரிய வேண்டும் என்னும் கடிதம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன் கிழமை யாழ். மத்திய கல் லூரியில் வைத்தே வழங்கப்படும். எனவே, இக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் மற் றும் கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 6 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்கவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இம்முறை இரண்டு வகையான வாக்குச் சாவடிகள் அமைக்கப் பட உள்ளன. முதலாவது அந்தந்தஇடங்களில் வாழும்மக்கள் வாக்களிப்பதற்கான சாதாரண வாக்களிப்பு நிலையங்கள். அடுத்து முகமாலையில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையம். வாக்களிப்பு 17ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகி அன்று மாலை 4 மணிக்கு நிறைவுபெறும். வாக்குச்சாவடியில் வாக்களிப்பை சரிவர திறமையாக ஒழுங்காக நிறைவேற்றுவது அவ்வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களது கடமையாகும். வாக்களிப்பு நிலையங்களில் அசம்பாவிதங்கள் ஏதாவது நடைபெற்று வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட்டால் 19ஆம் திகதி அவ்வாக் களிப்பு நிலையத்தில் மறுவாக்களிப்பு நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப-51)

## *திருமறைக் கலாமன்ற கொடி மாதம் அனுஷ்டிப்பு*

யாழ்ப்பாணம்,நவ.4

திருமறைக் கலாமன்றத்தின் கொடி மாதம் கடந்த முதலாம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த முதலாம் திகதி யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் காலை 10 மணியளவில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி மரியசேபியர் அடிகளார் முதலாவது கொடியினைப் பெற்று கொடி மாதத்தினை ஆரம்பித்து வைத்தார்.

(த-190)

## கொடி தினத்துக்கு மக்கள் ஆதரவு

வடமராட்சி, நவ.4

வடமராட்சி கரவெட்டி அரசினர் வைத்திய நிலைய அபிவிருத்திக்காகக் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்படும் கொடி தினத்துக்கு அதிகளவில் மக்கள் ஆதரவளித்து வருகின்றனர் என்று வைத்திய நிலைய அபிவிருத்திச் சங்பத் தலைவர் திரு.வீ.சி.பொன்னம்பலம் தெரிவித்தார்.

யார்க்கரை கிளவிதோட்டம், கட்டைவேலி உட்பட அப்பகுதி மக்கள் கொடி தின நிதி வழங்கி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் மேற்படி வைத்திய நிலையத்தைத் தரமுயர்த்த ஆவன செய்யவேண்டும் என்றும் -

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் ஒரு முன்மாதிரியான வைத்திய நிலையமாக இதனை மாற்றவே இப்பகுதி மக்கள் உதவியளிக்கின்றனர் என்றும் - அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஒ)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவர்களும், யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றவர்களுமான
மருமகன் திரு.மே.ஜெயந்திரபாலா B.Sc.
மருமகள் செல்வி மா.கோகுலவதனி B.A.Hons (Soc.)
மருமகள் திருமதி நளினி புஸ்பரட்டினம் B.Com. Diploma ஆகியோரை சகல சங்கைகளுடன் தொடர்ந்து உயர்வு பெற கந்தன் அருள் வேண்டி வாழ்த்து கின்றேன்.

*குமாரசாமி வீதி,*
*புத்தூர்.* (42633)(42.11.17)

**சி.சிவராஜா**
B.A., M.A. (Soc.)
LLB (FIL).



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/குடமியன் அ.த.க.பாடசாடலை அதிபர்

**கா.குணசிங்கம்**

அவர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 2005.10.06இல் திருகோணமலையில் கல்வி அமைச்சும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்திய உலக ஆசிரியர் தினம் 2005 கௌரவிப்பு விழாவில் **VIDYA VIJAYA SRI SAMMANA** என்ற ஜனாதிபதி விருதையும் சான்றிதழையும் பெற்றமையைப் பெரு மகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி-46072)(42-11-17)

**- அதிபர்கள் -**
**தென்மராட்சிக் கல்வி வலயம்**



**03.11.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200724492 இலிருந்து 200740976 வரை

சீட்டிழுப்பு இல. 1655

வெற்றி எண்கள்

**22 28 35 67** சுப்பர் எண் **03**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.**1,12,15,300/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,12,15,300/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 29 | 5,000/- | 1,45,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 436 | 1,000/- | 4,36,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,390 | 500/- | 6,95,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,137 | 40/- | 8,45,480/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,174 | 20/- | 4,03,480/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 300,613 | 10/- | 30,06,130/- |
| | | மொத்தம் | 75,31,090/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 80,31,090/- |

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,20,18,850/-**

தொடர் இல. 300689823 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 05 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| களுத்துறை | 200729843-3-07 |
| ஹம்பாந்தோட்டை | 200726304-8-74 |
| மொனராகலை | 200729222-6-55 |
| அம்பாறை | 200724914-1-96 |
| அனுராதபுரம் | 200736938-4-29 |

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



நாளை (05.11.2005) ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் .....

**ஆன்மீகப் போராட்ட 14ஆம் ஆண்டுப் பூர்த்தி வழிபாடு**

பிற்பகல் 3.30 மணியளவில் விசேஷ அபிஷேகம், பூசைவழிபாடு, சுவாமி வீதி உலா.

தமிழ் மக்களின் சாபம் நீங்கி விமோசனம் கிடைக்க ஈசுர விநாயகர் அருள் பாலிக்கட்டும்.

சோழியூரான் - பிறைதடிக்குரு

# இலங்கையின் இராஜதந்திரத்துறையில் ஊழல் அதிகரிப்பெனக் குற்றஞ்சாட்டு

கொழும்பு,நவ.4

இலங்கையின் இராஜதந்திரிகளிடையே லஞ்ச ஊழல் அதிகரித்துள்ளதாக 'டிரான்ஸ் பரன்ஸி' சர்வதேச நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இலங்கைத் தூதரகங்கள் உட்பட இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் இலங்கையின் இராஜ தந்திரிகள் பணியாற்றுகின்றனர். இலங்கையிலும் அரசின் நிர்வாக மட்டத்தில் இராஜ தந்திரிகள் உள்ளனர்.இவர்கள் அடங்கிய இலங்கையின் இராஜதந்திரதுறையில் ஊழல் மலிந்துள்ளதாக 'டிரான்ஸ் பரன்சி' சர்வதேச நிறுவனம் கூறு கின்றது. இந்த நிறுவனம் ஆண்டு தோறும் ஊழல் தொடர்பாக சர்வதேச ரீதியில் ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிடுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு அந்த நிறுவனத்தின் அறிக்கையிலேயே இலங்கையின் இராஜ தந்திரத்துறையில் ஊழல் மலிந்து விட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஒ-206)

# தமது திட்டத்தை ஜனாதிபதி மக்களுக்கே அறிவிப்பாராம்

## அமைச்சரவைக்கு அல்ல என்றும் அவர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.04

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் தாம் எடுத்திருக்கும் முடிவுகளை அமைச்சரவைக்கல்ல, மக்களுக்கே தாம் அறிவிக்கப் போகிறார் எனக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுக்காலை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார். நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனமான 'மஹிந்தவின் சிந்தனை'யை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இதன் பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசின் வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதா என்பது பற்றி விரிவாக விவாதிக்கப் பட்டது.

எவ்வாறாயினும் எட்டாம் திகதி காலை ஜனாதிபதி மாளிகையில் விசேட கூட்டமொன்றை நடத்தி அதன் பின்னர் வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதென்று நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி எடுக்கவுள்ள தீர்மானம் குறித்து சிரேஷ்ட அமைச்சரொருவர் அமைச்சரவையில் கேள்வியெழுப்பினார். அதற்கும் பதிலளித்த ஜனாதிபதி, தமது திட்டத்தை அமைச்சரவைக்கு கூறவேண்டிய தேவை தமக்கில்லையென்றும், தமது தீர்மானத்தைத் தாம் மக்களிடம் கூறப் போகிறார் எனவும் உறுதியாகப் பதிலளித்தார் எனத் தெரியவந்தது. (எ-க)

# வங்கிக் கிளை இடம்மாறுகிறது

யாழ்ப்பாணம்,நவ.4

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை 496,யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கட்டடத்துக்கு இடம்மாறவுள்ளது. அன்றைய தினம் காலை 8.47 மணிக்கு வைபவ ரீதியாக இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில், பிரதம விருந் தினராக தேசிய சேமிப்பு வங்கி யின் செயற் பாடுகள், பிரதிப்பொது முகாமையாளர் திருமதி கே. அமரதுங்க கலந்து கொள் வார். (எ-7)

# யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் ஞாயிறன்று சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையினர், ஐ.நா.அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளசட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சட்டத்தரணிகள் மற்றும் சட்டமாணவர்களிற்கு, அண்மைக் கால சட்ட வளர்ச்சி குறித்து சிரேஷ்ட சட்டத் தரணிகள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட சட்ட ஆலோசகர்கள் விரிவுரைகளை வழங்கவுள்ளனர்.

வர்த்தக சட்டத்தில் இடம்பெற்ற வளர்ச்சி என்ற தலைப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் -

மனித உரிமை வளர்ச்சியும் சம உரிமையும் என்ற தலைப்பில் ஐ.நா.அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதி விவேகா சமரவர்தனவும்-

பெண்ணுரிமை மேம்பாடு தொடர்பில் அண்மைய சட்ட வளர்ச்சி என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் மகாலிங்கம் சுதர்ஷனும் விரிவுரைகளை நிகழ்த்துவர்.

இந்தக் கருத்தரங்கினை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆரம்பித்துவைப்பார்.

இந்தக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கலந்துகொள்வார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசியர் கே.குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர்கள் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-7)

# தெல்லிப்பழை வைத்திய அதிகாரி பிரிவில் வாய்ப் புற்றுநோய் பரிசோதனை

யாழ்ப்பாணம்,நவ.4

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாய்ப்புற்றுநோய் பரிசோதனை நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

திருமதி யோகராணி சிறிகிருஷ்ணன் ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் நலவாழ்வு அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை இப் பரிசோதனையை மேற்கொண்டு வருகின்றது.

இதில்நாளைசனிக்கிழமை தெல்லிப்பழை சைவப் பிரகாசவித்தியாலயம், அளவெட்டி அருநோதயக் கல்லூரி, இணுவில் மத்தியகல்லூரி,தாவடி இந்து கலவன் பாடசாலை, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், உடுவில்மான்ஸ்பாடசாலை ஆகிய இடங்களில் பரிசோதனை நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம், சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வசாவிளான் ஆரம்ப சுகாதார நிலையம், புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை

ஆகிய இடங்களில் பரிசோதனை இடம் பெறவுள்ளது.

## பயிற்சியை நிறைவுசெய்த தாதிய மாணவர்களுக்கு!

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி நெறியை முடித்து பரீட்சைக்குத் தோற்றி நியமனத்தை எதிர்பார்த்துள்ள தாதிய மாணவர்கள் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் சேவைபுரிய விரும்பினால் உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கோரியுள்ளார். (எ-51)


## தொலைபேசி இயக்குநர், கணனி இயக்குநர் தேவை

யாழ். நகரிலுள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்கு தொலைபேசி இயக்குநர் அல்லது பயிலுநர் (பெண்) மற்றும் கணனி இயக்குநர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: 0777-215955

(42547) (54-34-12)

## சிவ தீட்சை வைபவம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் வருடந்தோறும் இலவசமாக நடைபெறும் சமய தீட்சை (பிரவேசம்) வைபவம் எதிர்வரும் 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணிவரை நடைபெறும்.

அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஸ்ரீ கதிரமலை தேவஸ்தானம்
சுன்னாகம்.
(42451) (54-34-12)

முத்தமிழ் குருமணி
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்.

## 'புலமைப் பரீட்சையின் பெறுபேற்றில் இன்பம்'



யா/நல்லூர்
ஞானோதய வித்தியாலயத்தில் கல்வி
பயின்ற மாணவன்
செல்வன் சத்தியசீலன் - ததுசன்
என்பவர் 2005ஆம் ஆண்டு ஐந்தாம்தர
புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தமையை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர், நலன்விரும்பிகள்.

(42548) (54-34-12)










## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



உதயம் 31-03-1964 அஸ்தமனம் 21-09-2005

அமரர்
கந்தையா
பிறேமச்சந்திரன்

திதி: சதுர்த்தி

*எங்களுடன் கூடி வாழ்ந்த அன்புச் சகோதரனே*
*எத்தனையோ அலைகள் வந்துமோதியும் தாங்கிய அண்ணாவே*
*இப்போது வந்த வர்மம் என்ன?*
*நீர் இயக்கும் இயந்திரம் உன்னைத் தேடுதே*
*நீர் உழுத பூமியெல்லாம் உம்மைக் காணாமல் தவிக்குதே*
*இன்று 45ஆம் நாள் ஆகியும் உம்மைக்காணவில்லை*
*எங்கு சென்றாயோ என் சோதரமே.,*

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருளானந்தப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கிறோம்.அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.10.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சாந்தி பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- ஓம் சாந்தி -

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
(42452 (54-34-12)

சகோதரி
கோகிலா பிறேமதாசன்,
பிள்ளைகள் (சுவிஸ்).

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை பாலசிங்கம்



சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் விசுமடுவை வதிவிடமாகவும் பொலீஸ் நிலைய வீதி சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தா. பாலசிங்கம் அவர்கள் நேற்று (03.11.2005) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் பாலமுரளி, பாலதீபன், பாலஜீவன், பாலகஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் கனகேஸ்வரி கனகசிங்கம், ஆனந்தன், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவமனோகரி, மனோரஞ்சிதம் செல்வரட்ணம், குகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.11.2005) வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பழைய பொலீஸ் நிலைய வீதி சாவகச்சேரியில் அமைந்த அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலீஸ்நிலைய வீதி,*
*சாவகச்சேரி.*
(42550) (54-34-12)

தகவல்:
பாலமுரளி (மகன்)

*18.01.2006இல் குதூகல ஆரம்பம் - அச்சுவேலியில்*

## இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம்

- முற்றிலும் குளிரூட்டப்பட்டது. ஆயிரம் பேர் கதிரையில் அமர்ந்திருக்கக் கூடிய ஆடம்பரவசதி!
- ஒரே தடவையில் 300 பேர் கதிரை-மேசையில் அமர்ந்திருந்து சாப்பிடக் கூடிய வசதி !
- விசேட உணவு-சிற்றுண்டி வகைகள்-தனித்துவமான உபசரிப்பு ஒழுங்குகள்!
- திருமண வைபவம்! பூப்புனித நீராட்டு விழா! கலை நிகழ்வுகள்! என்பவற்றுக்கு ஏற்புடைய மேடை அலங்காரம்!
- 24 மணிநேரமும் முழுமையான செயற்பாடு!
- திருமணத்திற்கு பின்பு தங்குவதற்கான விசேட இருப்பிட வசதி!
- குளிரூட்டப்பட்ட திருமணக் கார் வசதிகள்!
- பாதுகாப்பான வாகனத் தரிப்பிடம்!
- நவீன பூங்கா வசதியுடன் கூடிய வீடியோப் படப்பிடிப்பு! போட்டோ வசதிகள்!
- வைபவங்களை அடுத்து இலவச இசைக்கச்சேரிகள்!

குறைந்த கட்டணத்தில் நிறைந்த வளவசதிகளுடன் யாழ். மாவட்டத்தில் முன்னனியில் உள்ள திருமண மண்டபம். உங்கள் தேவையைக் கருத்தில் கொண்டு முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

*வீடியோ கலாமினி, அச்சுவேலி.*

0602212431 (சி-46062) (54-34-12) 0773053080



## தீவக கல்வி வலய பண்ணிசைப்போட்டி ஒத்திவைப்பு

இம்மாதம் 7ஆம், 10ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்டப் பண்ணிசைப் போட்டிகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன. இப்போட்டிகள் நடைபெறும் திகதிகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தீவக வலய கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஸ்ரனிஸ்லாஸ் அறிவித்துள்ளார். (எ-12)

## நத்தார் ஆராதனை

யாழ்ப்பாணம்,நவ.4

கைதடி, நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இன்னிசை ஆராதனை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சாம்சன் லூர்திஸ் தலைமையில் பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வணக்கத்துக்குரிய ஈனோக் புனிதராஜா அருளுரை வழங்கவுள்ளார். (எ-12)

## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறுங்கள்... இல்லையேல்... உங்கள் ஆயுதங்களே எமக் குப் போதும் உங்களை வெளியேற்ற...'' என் றும் -

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் சுவரொட்டிகளில் -

''அன்புக்குரிய யாழ். மக்களே! ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்போம். தமிழ் மக்களாகிய எமக்கு ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் செய்த அராஜகங்களும், துரோகங்களும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாதவை என்பது உங்களுக்கு நன்கு தெரியும். கடந்த கால அனுபவங்கள் எமக்குப்போதும். எனவே, எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமிழர் தாயகத்தில் இடமில்லை என்பதை உணர்த்துவோம்.

இதனால் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் வைத்தல், தேர்தல் பிரசாரக் சுவரொட்டிகள் ஒட்டுதல், அது தொடர்பான ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். இதை மீறுபவர்கள் மிக விரைவாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இது எச்சரிக்கையல்ல கண்டிப்பான கட்டளை - என்றும் உள்ளது. (எ-7-12)

## நோன்புப் பெருநாள் இன்று

கொழும்பு,நுவ.4

நோன்புப்பெருநாள் இன்று என்று பிறைபார்க்கும் குழு அறிவித்தது.

இஸ்லாமிய கலண்டரில் நோன்பு மாதத்தை அடுத்துவரும் ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை நிலாவெளி, கண்டி, வெலிகமம் போன்ற இடங்களில் தென்பட்டது. அதை அடுத்தே இத்தீர்மானத்தை அக்குழு நேற்றுமாலை அறிவித்தது.

இக்குழுவில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், ஜம்மியதுல் உலாமா முஸ்லிம் கலாசாரத் திணைக்களம் அடங்கலாக பல அமைப்புகளும் அங்கம் வகிக்கின்றன. (க)

## புலிச் சீருடையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் காணப்படும் ரணிலின் தோற்றத்தின் கீழ் 'இவர் யார்?, என்ன செய்கிறார்?' என்ற கேள்விகள் எழுப்பட்ட வாசகம் காணப்பட்டது.

வத்தேகம பொலிஸாரால் இத்தகைய சுவரொட்டிகளுடன் கைதுசெய்யப்பட்ட இருவரை பன்னல மாஜிஸ்திரேட் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

ஹெட்டிப்பொலவில் இத்தகைய சுவரொட்டியுடன் கைதுசெய்யப்பட்ட ஒருவரை விளக்கறியலில் வைக்க குளியாப்பிட்டிய நீதிமன்றம் பணித்தது.

இதேசமயம், கிருலப்பனையில் இத்தகைய சுவரொட்டியுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை ஐயாயிரம் ரூபா காசுப்பிணை மற்றும் ஒரு லட்சம் ரூபா உறுதிப் பிணையில் செல்வதற்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிவான் ஷஹான் பிலப்பிட்டிய அனு மதித்தார்.

இதேசமயம், கண்டி, மினுவாங் கொடையில் பரவலாக ஒட்டப்பட்டிருந்த இத்தகைய சுவரொட்டிகளைப் பொலிஸார் அகற்றியுள்ளனர். இத்தகைய சுவரொட்டிகளை ஒட்டுவோரைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்காகப் பொலிஸ் ரோந்துச் சேவைக்ள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க-7)

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவிலும், மோட்டார் சைக்கிளிலும் ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினர்கள் தமது 'தினமுரசு' பத்திரிகையை ஏற்றிக்கொண்டு விநியோகத்துக்குச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினரான காந்தன் என அழைக்கப்படும் ஆறுமுகம் பத்மநாதன் (வயது - 24), பொலீஸ் உத்தியோகத்தர்களான ரஞ்சித் அனுராத (வயது - 33), கருணா திஸ்ஸ (வயது - 39), வி.எம். ஜெயரட்ண (வயது - 36), எம். சிறிவர்தன (வயது - 40) ஆகியோரும் ஓட்டோ சாரதியான பூபாலபிள்ளை சுரேந்திரன் (திராய்மடு வாசி) என்பவருமே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களின் உகனைப் பிரதேசத்தைச் சேர்ந்த வீ.எம்.ஜெயரட்ண மற்றும் ஓட்டோ சாரதி ஆகிய இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து பொலீஸாரும் பதில் தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் பத்து நிமிடம் நீடித்த வேட்டுச் சத்தங்களால் நகரம் அதிர்ந்தது. எனினும், எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-க-7-12)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல பொது அமைப்புகள் அறிக்கை களைத் தொடர்ந்து வெளியிட்டுவருகின்றன.

இந்நிலையில் இன்று இடம்பெறும் சந்திப்பில் இவ்விடயம் குறித்தும் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-3)

## புலிகள் வெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ரணில் 2002இல் ஆட்சியைக் கைப்பற்றியதும் புலிகளுக்கு தனிநாட்டைக் கொடுத்து ஆயுத விநியோகம் செய்ததோடு அவர்கள் வான்படை ஒன்றை அமைக்கவும் உதவினார். அத்தோடு, சேர்ந்து குண்டுகளைத் தயாரிக்க இரண்டு கோடி 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உரத்தையும் கடன் அடிப்படையில் புலிகளுக்கு வழங்கினார்.

மட்டக்களப்பில் செய்கைபண்ணப்படும் விவசாயத்திற்கு பயன்படுத்தவெனக் கூறியே இந்த உரத்தைப் புலிகள் பெற்றுக்கொண்டுள்ளனர். இதற்கான வேண்டுகோள் கடிதத்தை புலிகள் அப்போதைய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவிடம் அனுப்பிவைத்தனர்.

அவ்வேண்டுகோள் கடிதத்திற்கு ஏற்ப புலிகள் கேட்கும் உரத்தை வழங்குமாறு திஸநாயக்க உரக் கூட்டுத்தாபனத்திடம் அவரது கையெழுத்திட்ட கடிதம் மூலம் உத்தரவிட்டார். அதன்படி புலிகளுக்கு உரம் வழங்கப்பட்டது.

கடனடிப்படையில் இந்த உரம் வழங்கப்பட்டது மாத்திரமன்றி அந்தக் கடன் இன்னும் மீளப்பெற்றுக்கொள்ளப்படவுமில்லை. இதன் காரணத்தாலேயே உரவிலை அதிகரிக்கப்பட்டது.

இதற்கான அனைத்து ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன. ரணில் இல்லையென்று மறுக்கமுடியாது. அவர் இந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு நாட்டைப் பிரிப்பதற்காகப் புலிகளுக்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொடுக்கும் ரணிலை மக்கள் தமது ஜனாதிபதியாக்குவது சரியா என யோசித்துப் பார்க்கவேண்டும்.

-இவ்வாறு விமல் வீரவன்ஸ கூறினார். (எ-க-7-12)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்திற்குச் செல்வாரா என்பது பற்றிக் கேட்டபோது அது தொடர்பில் உறுதியான தகவலை அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை. (எ-க)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தெரியும். அவற்றை தீர்த்துவைக்க வேண்டியதும் என் முன்னாலுள்ள கடமை.''

-இவ்வாறு நேற்றுப் பிற்பகல் 'உதயனு'க்கு கருத்துத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க.

''ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு பலாலி வந்துள்ள நீங்கள் யாழ்.நகரத்திற்கு ஏன் செல்லவில்லை?'' - என்று 'உதயன்' செய்தியாளர் ஐ.தே. க.தலைவரிடம் பலாலியில் வைத்து வினவினார். அப்போதே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார் ஐ.தே.க. தலைவர். அவர் மேலும் கூறியதாவது:-

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே நான் யாழ்ப்பாணப் பகுதிக்குச் செல்லவில்லை. என்றாலும், எனது தேர்தல் கொள்கைகள் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக அனைத்து மக்களையும் சென்றடையும் என நான் எதிர்பார்க்கின்றேன். யாழ்ப்பாணப் பகுதிக்கு நான் செல்வதாயின் அங்கு கூட்டங்களில் கலந்துகொள்ள வருவது மக்களுக்குச் சிரமமானதாகவும் இருக்கும். இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் இதற்காக வருவதிலும் சிரமம் இருக்கும்.

எவ்வாறாயினும் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடிய நிலைமையை உருவாக்கிய போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மக்கள் மறந்துவிடமாட்டார்களென்றே நான் கருதுகிறேன். நான் இங்கு படையினரைச் சந்தித்தபோது தேர்தல் பிரசாரம் செய்யவில்லை. எனக்கு வாக்களிக்குமாறு கேட்கவுமில்லை. அவர்கள் மனதிலுள்ள எண்ணங்கள், அவர்களின் பிரச்சினைகளை நான் அறிந்துகொண்டேன். நான் ஜனாதிபதியானவுடன் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன். நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படுத்தப்படவேண்டும் என்ற ஒரே எண்ணத்தைத்தான் வடக்கு - கிழக்கு மக்களும், தென்னிலங்கை மக்களும் கொண்டுள்ளனர். இந்தப் பிரதிபலிப்பு ஜனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படும்.

- இவ்வாறு ஐ.தே.க தலைவர் மேலும் கூறினார். (எ-க)

## புலனாய்வுக் குறைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''விடுதலைப் புலிகளுடன் நான் செய்த போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனத் தென்னிலங்கை அடிப்படைவாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். மறுபுறம் இதனால் தமது தரப்புக்கே அதிகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். எது, எவ்வாறாக இருப்பினும் அமைதியை ஏற்படுத்துவதற்கான எனது முயற்சியைக் கைவிடவே மாட்டேன்.''

- இப்படி மேலும் உறுதி கூறினார் அவர்.

நேற்று பலாலியைச் சூழ்ந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் ஆறுமணிநேர விஜயமொன்றை மேற்கொண்ட ஐ.தே.கட்சித் தலைவர் அங்கு முப்படையினர் மற்றும் பொலீஸாரைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.

முதலில் நேற்றுக்காலை பலாலியில், இராணுவத் தரப்பினரையும், விமானப் படையினரையும் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்த ரணில், பின்னர் காங்கேசன்துறைக்குச் சென்று கடற்படையினரையும், பின்னர் அங்கு வைத்து யாழ்ப்பாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் அலுவலகத்தில் பொலீஸாரையும் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டார்.

தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மிலிந்த மொரகொட, சாகல ரட்னாயக்க ஆகியோருடன், இராணுவக் காவலரண்களுக்கும் சென்ற ஐ.தே.க தலைவர் பின்னர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அதிக பட்ச பாதுகாப்புடன் பலாலியில் வந்திறங்கிய ஐ.தே.க. தலைவர், முதலில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் படையினரைச் சந்தித்தார்.

இராணுவப் புலனாய்வு உறுப்பினர்கள் கொல்லப்படுவது மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் மீறப்படுவது தொடர்பில் அங்குள்ள படைச்சிப்பாய் ஒருவர் ஐ. தே.க. தலைவரிடம் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்த ஐ.தே.க. தலைவர் மேலும் கூறியதாவது:-

உடதலவின்ன படுகொலை வழக்கு சம்பந்தமான விசாரணையின்போது நீதிமன்ற உத்தரவின் பேரில், மிலேனியம் சிற்றியிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன. இதன் பின்னர் புலனாய்வு உறுப்பினர்கள் கொல்லப்பட்டாலும் அதற்கு கூறப்படும் காரணங்கள் அர்த்தமற்றவை. எனது அரசாங்கத்தின் காலப்பகுதியில் புலனாய்வுத்துறை உறுப்பினர்களுக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் இந்த நிலைமை மாறியிருப்பது கவலைக்குரியது.

எமது புலனாய்வுத்துறையை நாம் மேம்படுத்தவேண்டும். ஏற்கனவே, எமது புலனாய்வுத்துறையிலுள்ள குறைபாடுகள் குறித்து இந்தியாவும், அமெரிக்காவும் வழங்கிய ஆய்வறிக்கை பாதுகாப்பு அமைச்சில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த அம்சங்களை நிறைவேற்றியிருந்தால் இன்று இந்தளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது - இவ்வாறு பலாலி வைத்தியசாலையில் வைத்து மேலும் கூறினார் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க. (எ-க)

CHEMISTRY CENTRE
Temple Road (Greenpark முன்னே)
A/L 2007 INORGANIC
Fri. 3 - 4.30.p.m.
Paper (Basic)
Fri. 4.30 - 6 p.m.
THERMO CHEMISTRY
Mon. 4.30 - 6 p.m.
(42543)
By: அன்பழகன் B.Sc.

போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புகள்
* பொது உளச்சார்பு * பொது அறிவு
ஆசிரியர்: த.தவசேகர் B.Sc.P.G.D.E.
S.L.A.S., S.S.O.அதிபர் சேவை மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கு ஏற்றது.
வகுப்புகள் D.M.I. கல்வி நிலையத்தில் நடைபெறும்.
சனி 2-6, ஞாயிறு 10.30-1.00 (42514)

SKY COMPUTER SYSTEM.
sky
89A, Kandy Road, Jaffna.
Tel: 0773 276250
For all your Computer Requirements
15,000/=
Pentium IV
Genuine intel Dealer
Pentium III
Pentium II
Pentium I
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
E-Mail: skymathy@sltnet.lk

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.